உ

கணபதி துணை

நீதிவெண்பா

மூலமும்,

தமிழ்ப் பண்டிதர்

ஸ்ரீமாந். ம. மாணிக்கவாசகம் பிள்ளை

அவர்கள் நூதனமாய் எழுதிய

தெளிபொருள் விளக்க விரிவுரையும்.

மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலை,

87, தம்புசெட்டி வீதி, சென்னை.

1925

விலை அணா 4

[All Rights Reserved]

உ

கணபதி துணை

நீதிவெண்பா

மூலமும் உரையும்

காப்பு

வெண்பா

மூதுணர்ந்தோ ரோதுசில மூதுரையைப் பேதையேன்
நீதிவெண்பா வாக நிகழ்த்துவேன்—ஆதிபரன்
வாமான் கருணை மணியுதரம் பூத்தமுதற்
கோமான் பெருங்கருணை கொண்டு.

(பதவுரை) ஆதி பரன்-முதல்வனாகிய சிவபெருமானுடைய, வாமம் - இடப்பாகத்தில் (பொருந்திய), மான் - பார்வதியின், கருணை - அருளால், மணி உதரம் பூத்த - (அத் தேவியாருடைய) அழகிய திருவயிற்றிற் பிறந்த, முதல் கோமான் - மூத்த பிள்ளையாகிய கணபதியின், பெருமை கருணை கொண்டு - சிறந்த திருவருளின் சகாயத்தால், முதுமை உணர்ந்தோர் ஓது - பழைய நூலுணர்ந்தோர் பாடிய, சில முதுமை உரையை - சில பழமொழிகளை, பேதையேன் - மூடனாகிய நான், நீதி வெண்பா ஆக - நீதி வெண்பா என்னும் நூலாக, நிகழ்த்துவேன் - செய்வேன்.

(கருத்துரை) விநாயகக் கடவுளருளால் இந்நூலை யான் செய்வேன்.

(விசேடவுரை) நீதிவெண்பா - நீதியைக் கூறும் வெண்பா, நீதியாலாகிய வெண்பா என முறையே இரண்டாம் வேற்றுமை மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகைகளாகக் கொள்க. வெண்பா - ஆகுபெயராய் நூலைக் குறித்தது. காப்பு-காவல்; இது தொழிலாகுபெயராய்க் காவற்கடவுளைக் குறித்தது. விநாயகர் காப்பு - இந்நூல் இடையூறின்றி இனிது முடியுமாறு விநாயகர் காத்தளிப்பார் என்பதாம். வெண்பா=வெண்மை+பா=வெள்ளைப் பாட்டு; பரிசுத்தமான முதற்பாவாய்ச் சிறந்த பா என்று கொள்க. 'ஆதிபகவன்' என்புழிப்போல 'ஆதிபரன்' என்பது ஆதியாகிய பரன் என விரியுமாற்றால் இருபெயரொட்டு. வாமம்+மான்=வாமான்; எதுகை நோக்கி அம் கடை குறைந்தது. மூதுணர்ந்தோர் மூதுரை - இவ்விரண்டும் ஆதி நீண்டு பண்புச் சூத்திரவிதி பெற்றன. மான் போன்ற விழிப் பெண்ணை மான் என்றதூஉம் உவமவாகுபெயர்.

நூல்

1. தாமரைபொன் முத்துச் சவரங்கோ ரோசனைபால்
பூமருதேன் பட்டுப் புனுகுசவ்வா—தாமழன்மற்
றெங்கே பிறந்தாலு மெள்ளாரே நல்லோர்கள்
எங்கே பிறந்தாலு மென்?

(ப - ரை) தாமரை - தாமரையும், பொன் - பொன்னும், முத்து - முத்தும், சவரம் - சாமரையும், கோரோசனை - கோரோசனையும், பால் - பாலும், பூ மரு தேன் - பூவிலுள்ள தேனும், பட்டு - பட்டும், புனுகு - புனுகும், சவ்வாது - சவ்வாதும், அழல்- நெருப்பும், ஆம்-ஆகிய (இவைகள்), எங்கே பிறந்தாலும் எள்ளாரே - எந்த இடத்திற் பிறந்தாலும் இகழமாட்டார்கள்; (இத்தன்மையைப்போல) நல்லோர்கள் எங்கே பிறந்தாலும் என்?—நல்லவர்கள்

எங்கே பிறந்தாலும் என்ன? (அவர்களை யாரும் இகழ்ந்து தள்ள மாட்டார்கள்.)

(க - ரை) பெரியோர் இழிகுலத்திற் பிறந்தாலும் பூசிக்கப் படுவர்.

(வி - ரை) தாமரை...அழல்-உம்மைத்தொகைகள். தேன் பிறப்பது பூவில் ஆனாலும் ஈயின் எச்சிலாவதுபற்றி இங்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. 'ஆம் அழல்' என்பதற்கு 'இன்றியமையாத தாகும் நெருப்பு' என்று கொள்க. மற்றும் ஏயும் அசைகள்.

2. அரிமந் திரம்புகுந்தா லானை மருப்பும்
பெருகொளிசேர் முத்தும் பெறலாம்—நரிநுழையில்
வாலுஞ் சிறிய மயிரெலும்புங் கர்த்தபத்தின்
தோலுமல்லால் வேறுமுண்டோ சொல்.

(ப - ரை) அரி மந்திரம் புகுந்தால் - சிங்கம் வாழுங்குகையிற் போனால், ஆனை மருப்பும் - யானைத் தந்தங்களையும், பெருகு ஒளி சேர் முத்தும் - ஒளி மிகுந்த முத்துக்களையும், பெறலாம் - பெற்றுக்கொள்ளலாம்; நரி நுழையில் - நரியின் குழியில், வாலும்- வால்களும், சிறிய மயிர் எலும்பும் - சிறிய மயிர்களும் எலும்புகளும், கர்த்தபத்தின் தோலும் அல்லால் - கழுதையின் தோல்களும் அல்லாமல், வேறு - வேறு மேலான பொருள்களும், உண்டோ— உண்டோ?, சொல் - நீ சொல்.

(க - ரை) பெரியோரைச் சேர்ந்தால் ஞானமும், சிறியோரைச் சேர்ந்தால் ஈனமும் உண்டாம்.

(வி - ரை) 'உண்டோ' என்கிற உடன்பாட்டு வினா, இல்லை என்கிற எதிர்மறை விடை தருவது காண்க. சிங்கம் வாழ் குகையில் யானைத் தந்தங்கள் இருப்பது இயல்பாவதுபோல, அலைக

ளிற் பிறக்கும் முத்துக்களும் அங்கிருப்பது இயல்பு என்பது தோன்ற 'பெருவொளிசேர் முத்தும்' என்றார். கர்த்தபத்தின் வாலும், சிறிய மயிரும், எலும்பும், தோலும் என்று பொருள் கூட்டிக்கொள்க. சிங்கத்தின் குகை பெரியோரிடத்திற்கும், நரி நுழை சிறியோரிடத்திற்கு[illegible]மானங்களாவது காண்க. தந்தங்களையும் முத்துக்களையும் போன்ற உயர்பொருளாகிய உண்மை ஞானப் பொருளைப் பெரியோரிடத்திற் பெறலாமென்றும், வால்களையும் தோல்களையும் போன்ற போலிஞானப் பொருளைச் சிறியோரிடத்திற் பெறலாமென்றும் விரித்துரைத்துக் கொள்க. இங்கே உவமானங்களைமட்டுங் கூறியிருப்பதால், உபமேயங்கள் குறிப்பிற் கொள்ளப்பட்டன. இப்படியே ஆங்காங்கு வருந்தோறுங் காண்க.

3. அறிவன் பகையேனு மன்புசேர் நட்பாஞ்
சிறுவன் பகையாஞ் செறிந்த—அறிவுடைய
வென்றி வனசரன்முன் வேதியனைக் காத்தான்முன்
கொன்றதொரு வேந்தைக் குரங்கு.

(ப-ரை) முன் செறிந்த அறிவு உடைய வென்றி வனசரன்-முற்காலத்தில் மிகுந்த அறிவையுடைய வீரவேடன் ஒருவன், வேதியனை காத்தான் - ஒரு பிராமணனைக் (கொலைப்பாதகத்தினின்றுங்) காப்பாற்றினான்; குரங்கு ஒரு வேந்தை கொன்றது - (ஒரு மூடக்) குரங்கு ஓர் அரசனைக் கொன்றது; (அதுபோல) அறிவன் பகையேனும் - அறிவுள்ளவனுடைய பகையானாலும், அன்பு சேர் நட்பு ஆம் - (அது) அன்பு மிகுந்த நட்பாகும்; சிறுவன் பகை ஆம் - மூடனுடைய (நட்பானாலும்) அது பகையாகும்.

(க - ரை) சிறியோர் நட்பினும் பெரியோர் பகையே சிறந்ததாம்.

(வி - ரை) அறிவன் பகை, - அறிவனானவன் பகை என்று எழுவாய்த்தொடராகவுங் கொள்ளலாம். 'ஆம்' என்பது ஆகுமென்பதன் இடைக்குறை. வென்றி என்பதற்கு வேட்டையில் வெற்றி பெறும் வீரம் என்பது பொருள். தான் - அசை.

வளசரன் வேதியனைக் காத்த வரலாறு

ஒரு பிராமணன் ஓர் அரசனிடத்தில் விலையுயர்ந்த ரத்தினத்தைத் தானம் வாங்கிக்கொண்டு தன் ஊர்க்குப் போகும் வழியில் திருடர் பயத்தால், அதை விழுங்கிவிட்டான். அதை எங்கிருந்தோ கண்ட வேடனொருவன் அவனை வழி மறித்து, "உன் வயிற்றிலுள்ள மாணிக்கத்தைத் தா!" என்று பயமுறுத்தினன். அதற்குப் பிராமணன், "என் வயிற்றி லில்லை; உன் வயிற்றில்தான் அது இருக்கிறது" என்று மறித்துக் கூறினன். இப்படி இவர்கள் வாதாடிக்கொண டிருக்கும்போது அவ் வழியே சென்ற கள்ளர்கள், இருவர் வயிற்றையுங் கீற முயன்றார்கள். அது கண்ட வேடன் தன்னால் பிராமணனும் இறக்கும்படி நேரிட்டதே என்று விசன முற்றுத் திருடர்களை நோக்கி, "நாங்க ளிருவரும் விளையாட்டாகப் பேசிக்கொண்டோம்; உங்களுக்குச் சந்தேக முண்டானல் முதலில் என் வயிற்றைக் கீறிப் பாருங்கள்!" என்றான். அப்படியே அவர்கள் அவன் வயிற்றைச் சோதித்துப் பார்த்து, ஒன்று மில்லாமையால் பிராமணனை உயிரோடு விட்டுவிட்டார்கள். இந்தக் கதையால், அறிவன் பகையேனும் அன்புசேர் நட்பாம் என்பது நன்முக விளங்குகின்றது.

குரங்கு, வேந்தனைக் கொன்ற வரலாறு

தான் வளர்த்த குரங்கின் கையில், ஓர் அரசன் வாளைக் கொடுத்து, யாவரையும் வரவொட்டாமல் காவல் புரிய விடுத்து, நித்திரை செய்துகொண் டிருந்தான். அப்போது அங்கோர் ஈ

வந்து அரசன்மேல் உட்கார்ந்தது. அது கண்ட குரங்கு, ஈயை வாளால் வெட்டி, அரசனை இரு துண்டாக்கிற்று. ஆகையால், சிறு வன் (நட்பும்) பகையாம் என்பது இதனால் விசதமாகின்றது.

4. மென்மதுர வாக்கால் விரும்புஞ் சகங்கடின
வன்மொழியி னாலிகழு மண்ணுலகம்—நன்மொழியை
ஓதுகுயி லேதங் குதவியது கர்த்தபந்தான
ஏதபரா தஞ்செய்த தின்று.

(ப - ரை) நன்மை மொழியை ஓது குயில் - நல்ல ஓசையைக் கூவுகின்ற குயிலானது, ஏது உதவியது - (உலகத்தாருக்கு) என்ன நன்மை செய்தது?, கர்த்தபம் - (வல்லோசையைக் கத்துகின்ற) கழுதை, ஏது அபராதம் செய்தது - என்ன தீமை செய்தது?, இன்று - (இரண்டும்) இல்லை; (ஆகையால்) சகம் - பூமியிலுள்ளவர்கள், மென்மை மதுரவாக்கால்-மெல்லிய இன்சொல்லைக் கேட்பதனால், விரும்பும் - விரும்பிப் (புகழ்வார்கள்); மண் உலகம்-இந்நிலவுலகி லுள்ளவர்கள், கடினம் வன்மை மொழியினால்-கடினமானவன் சொல்லைக் கேட்பதனால், இகழும் - (வெறுத்து) இகழ்வார்கள்.

(க - ரை) இன்சொல்லே யாவரும் விரும்பும் நன்சொல்லாம்.

(வி-ரை) வாக்கால்-மூன்றும் வேற்றுமைக் கருவிப்பொருள். 'சகம்' என்பது சகத்தி லுள்ளவர்களைக் குறிப்பதால் இடவாகு பெயர். 'உலகம்' என்பதூஉம் அப்படியே. அங்கு என்பதூஉம், தான் என்பதூஉம் அசைகள். குயிலை மென் மதுரவாக்கால் விரும்புவதுபோல உலகத்தார் இன்சொல்லை விரும்பிப் புகழ்வார்களென்றும், கழுதையைக் கடுங்குரலால் வெறுப்பதுபோல வன்சொல்லை வெறுத்து இகழ்வார்களென்றும் பொருள் உரைத்துக்கொள்க.

"இன்சொல் இனிதீன்றல் காண்பா னெவன்கொலோ
வன்சொல் வழங்கு வது."

என்றார் பெரியாரும்.

5. பகைசேரு மெண்ணான்கு பற்கொண்டே நன்னா
வகைசேர் சுவையருந்து மாபோற்—றொகைசேர்
பகைவரிட மெய்யன்பு பாவித் தவராற்
சுகமுறுத னல்லோர் தொழில்.

(ப - ரை) நன்மை நா - நல்லறிவுள்ள நாக்கானது, பகை சேரும் எட்டு நான்கு பல் கொண்டே - தனக்குப் பகை உடைய முப்பத்திரண்டு பற்களைக்கொண்டே, வகை சேர்-பல வகையான, சுவை அருந்தும் ஆறுபோல் - சுவைப்பொருள்களை உண்ணுந் தன்மைபோல, நல்லோர் தொழில் - அறிவுடையோர் செய்கை யானது, தொகை சேர் பகைவரிடம் - (தமக்குக்) கூட்டமாயுள்ள பகைவரிடத்தில், மெய்ம்மை அன்பு பாவித்து - உண்மை அன்பு பாராட்டி, அவரால் சுகம் உறுதல் - அவரால் சுகம் அடைதலாம்.

(க - ரை) பெரியோர், பகைவரையும் நேசித்து, அவராற் சுகம் உறுவர்.

(வி - ரை) அதி சாக்கிரதையாய்ப் பகைவரோடு கூடி வாழ்தல்பற்றி 'நன்னா' எனப்பட்டது. அருந்தும் ஆறுபோல் என்பது 'அருந்தும் ஆ போல்' என வந்தது செய்யுள் விகாரம். பற்களுக்கும் நாக்குக்கும் உள்ள பகைமை எல்லார்க்கும் அனுபவமாவுள்ளது. கொஞ்சம் அசாக்கிரதையா யிருந்தால், பற்களால் நாக்கடியுண் பதை எல்லோரும் அறிவர். தெரிந்ததைக் கொண்டு தெரியாத் தை விளக்கவரூஉம் கவிவாணர்கள் உவமான உவமேயங்க ளமைத் துப் பாடுவ தியற்கை. இங்கே உவமானம் தூரத்திலின்றிச் சமீபத்திலேயே அவரவருடைய சரீரத்தில் வாய்க்குட் பொருத்

திய நாவும் பற்களும் ஆகையால் அதி அற்புதமாய் அமைந்திருக்கின்றது.

6. காந்தனில் லாத கனங்குழலாள் பொற்பவமாஞ்
சாந்தகுண மில்லார் தவமவமாம்—ஏந்திழையே!
அன்னையில்லாப் பிள்ளை யிருப்ப தவமவமே
துன்னெயிறில் லாரூண் சுவை.

(ப - ரை) ஏந்து இழையே - தாங்கிய ஆபரணங்களை உடையவளே!, காந்தன் இல்லாத கனம் குழலாள் பொற்பு அவம் ஆம் - கணவன் இல்லாத மேகநிறக் கூந்தலையுடைய பெண்ணின் அழகு வீணாகும்; சாந்தகுணம் இல்லார் தவம் அவம் ஆம் - பொறுமைக் குணம் இல்லாதவர்களுடைய தவம் வீணாகும்; அன்னை இல்லாத பிள்ளை இருப்பது அவம்-தாயில்லாத பிள்ளை உயிரோ டிருப்பது வீணாகும்; துன் எயிறு இல்லார் ஊண் சுவை அவம் - பொருந்திய பற்கள் இல்லாதவர்கள் உணவைச் சுவைத்தல் வீணாகும்.

(க - ரை) விதவையின் அழகும், பொறுமை யில்லார் தவமும், தாயில்லாப் பிள்ளையின் வாழ்வும், பல்லில்லார் உணவும் பாழாம்.

(வி-ரை) 'கனம் குழலாள்' என்பதற்குப் 'பாரமாகிய கூந்தல்' அல்லது 'அளகபாரத்தை உடையவள்' என்பதூஉம் ஒன்று. நாயகனில்லாத என்பதனானே கன்னிகை, கைம்பெண், அல்லது நாயகனிருந்தும் பிரிந்திருப்பவள் என்பது போதரும். தவமிருந்தும் விசுவாமித்திர துர்வாசர்களைப்போலப் பொறுமை யில்லார் தவம் அவம் ஆம் என்றபடி. "தாயோ டறுசுவைபோம்" என்றதனான் அன்னையிலாப் பிள்ளையிருப்பு அவம் ஆம். பற்களிலாப் பொக்கையர் ஊண் சுவை அனுபவத்திற் காணலாம். ஏகாரம் - அசைநிலை.

7. வருத்தவளை வேயரசர் மாமுடியின் மேலாம்
வருத்த வளையாத மூங்கில்—தரித்திரமாய்
வேழம்பர் கைப்புகுந்து மேதினியெல் லாந்திரிந்து
தாழுமவர் தம்மடிக்கீழ்த் தான்.

(ப - ரை) வருத்த வளை வேய் அரசர் மா முடியின் மேலே ஆம்-வருத்தி வளைக்க வளைகின்ற மூங்கில் அரசர்களுடைய சிறந்த கிரீடத்தின் மேல் (சிவிகைக் கொம்பாய்) உயர்வடையும்; வருத்த வளையாத மூங்கில் - (அப்படி வருத்தி) வளைக்க வளையாத மூங் கில், தரித்திரம் ஆய் - கேவலமாய், வேழம்பர் கை புகுந்து - கழைக்கூத்தர் கையில் அகப்பட்டு, மேதினி எல்லாம் திரிந்து-பூமி யெங்கும் அலைந்து, அவர் அடி கீழ் தாழும் - அந்தக் கூத்தர்க ளுடைய காலின் கீழ் (மிதியுண்டு) தாழ்வடையும்.

(க - ரை) இளமையில் வருந்திக் கற்றவர் சிறப்படைவர்.

(வி - ரை) வருத்த வளைதல் என்பது பச்சைக் கொம்பா யிருக்கையிலேயே வேண்டுவார் வேண்டியபடி வளைக்க வளைதல். இங்கே சிவிகையைப் பொருத்துச் செல்ல, அதன்மேல் இப்படி வளைத்துத் தொடுத்துள்ள பருமூங்கிற் கொம்பே குறிக்கப்பட் டது. வருத்த வளையாமை என்பது, அப்படி வளைக்க வளையாமல் அவர்கள் இச்சைக்கு விரோதமாக நெட்டையாய் நிற்கும் தன்மை யை. முன்னையதைப்போல் இளமையில் வருத்தத்தைப் பொறுத் துக் கற்றோர் பெருமை யடைவர் என்றும், பின்னையதைப்போல் இளமையில் வருத்தத்தைப் பொறுத்துக் கல்லாதவர் சிறுமை யடைவர் என்றும் உவமேயங்களைக் குறிப்பிற் கொள்க. இதுவும் இரண்டாஞ் செய்யுளைப்போல உவமான மாத்திரத்தானே வந் துள்ளது.

8. நொய்தாந் திரணத்தி னொய்தாகும் வெண்பஞ்சின்
நொய்தா மிரப்போ னுவலுங்கால்—நொய்யசிறு
பஞ்சுதனி னொய்யானைப் பற்றாதோ காற்றணுக
அஞ்சுமவன் கேட்ப தறிந்து.

(ப - ரை) நுவலுங்கால் இரப்போன் நொய்து ஆம் திரணத்தின் - சொல்லுமிடத்துப் பிச்சைக்காரன் அற்பமாகிய துரும்பைக் காட்டிலும், நொய்து ஆகும் வெண்மை பஞ்சின் நொய்து ஆம் - அற்பமாகிய வெற்றிலவம் பஞ்சைக்காட்டிலும் அற்பனுவான்; (ஆகையால்) காற்று - காற்றானது, பஞ்சுதனின் நொய்யானை - (பஞ்சை யடித்துக்கொண்டு போவதுபோல) அதைக் காட்டிலும் இலேசானவனாகிய பிச்சைக்காரனை, பற்றாதோ-அடித்துக்கொண்டு போகாதோ? (போகாது; ஏனெனில்), அவன் கேட்பது அறிந்து - அவன் ஏதாவது பிச்சை கேட்பானென்று அறிந்து, அது அணுக அஞ்சும் - அது அவனை நெருங்கப் பயப்படும்.

(க - ரை) இல்லாதவன் எல்லார்க்கும் பொல்லாதவன்.

(வி - ரை) இலேசான துரும்பினும் இலேசான பஞ்சினும் இலேசானவன் இரப்போன் என்று கொள்க. இவனினும் கனமான பஞ்சை யடித்துக்கொண்டுபோகும் காற்று, இவனை யடித்துக்கொண்டு போகாமைக்குக் காரணம் இவனுடைய இரவச்சமேயாம் என்க. இரப்போரின் எளியோர் உலகில் வேறிலர் என்பது இதனாற் பெறப்பட்டது.

9. ஒருபோது யோகியே யொண்டளிர்க்கை மாதே!
இருபோது போகியே யென்ப—திரிபோது
ரோகியே நான்குபோ துண்பூா னுடல்விட்டுப்
போகியே யென்று புகல்.

(ப - ரை) ஒண்மை தளிர் கை மாதே! - அழகிய தளிர் போலும் கைகளையுடைய பெண்ணே!, ஒன்று போது யோகி - ஒருபொழுது (உண்பவன்) யோகியாவன்; இரண்டு போது போகி என்ப - இருபொழுது (உண்பவன்) சுகபுருஷன் ஆவான் என்று பெரியோர் சொல்லுவர்; திரிபோது ரோகி ஏ - மூன்று பொழுது உண்பவன் நோயாளியே (ஆவான் என்றும்), நான்கு போது உண்பான் - நான்குபொழுது உண்பவன், உடல்விட்டு போகி ஏ என்று புகல் - உயிர் உடலைவிட்டுப் போகுபவன் (இறப்பவனே) ஆவான் என்றும் (நீ) சொல்வாயாக.

(க - ரை) ஒருகால் உண்பவன் யோகி; இருகால், போகி; முக்கால், ரோகி; நாற்கால், உயிர் போகியாம்.

(வி - ரை) ஒருபொழுதும் இருபொழுதுகளுமே உணவுக் குரியன வென்பது பெரியோர் உடன்பாடு. மூன்று நான்கு பொழுதுகள் ஆகா என்று அறிக. ஏகாரங்களில் முன்னைய இரண்டும் அசைகள்; பின்னைய இரண்டும் தேற்றங்கள். போகி-போகத்தை உடையவன். இரண்டாவது போகி = போகு+இ = போ என்னும் தொழிலடியாகப் பிறந்த பகுபதம், கு-விரித்தல் விகாரம்.

10. கண்ணிரண்டே யாவர்க்குங் கற்றோர்க்கு மூன்றுவிழி
எண்ணுவிழி யேழாகு மீவோர்க்கு—நண்ணும்
அநந்தந் தவத்தா லருண்ஞானம் பெற்றோர்க்
கநந்தம் விழியென் றறி.

(ப - ரை) யாவர்க்கும் கண் இரண்டு ஏ - எல்லார்க்கும் கண்கள் இரண்டே யாகும்; கற்றோர்க்கு விழி மூன்று - கற்றவர்க்குக் கண்கள் மூன்றாகும்; ஈவோர்க்கு எண்ணும் விழி ஏழு ஆகும் - கொடையாளர்க்குக் கணக்கிடப்படும் கண்கள் ஏழாகும்; நண்

னும் அனந்தம் தவத்தால் - பொருந்திய பல தவத்தால், அருள் ஞானம் பெற்றோர்க்கு - திருவருள் ஞானத்தைப் பெற்றவர்களுக்கு, விழி அனந்தம் என்று அறி - கண்கள் பலவென்று அறியக் கடவாய

(க-ரை) அருள்ஞானம் பெற்றவர்க்கு அநேகம் கண்களாம்.

(வி-ரை) "கண்ணுடையர் என்போர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்."

என்றபடி கற்றோர்க்கு ஊனக்கண் இரண்டோடு கல்வி ஞானக் கண் ஒன்று சேர்ந்து கண்கள் மூன்றாம்; ஈவோர்க்கு, ஊனக்கண் இரண்டோடு பிறர்க்கு எடுத்துக் கொடுக்குங் கைவிரல்களிலுள்ள நகக்கண்களாகிய தானக்கண் ஐந்துஞ் சேர்ந்து கண்கள் ஏழாகும். இவைகளேனும் இத்தனைக் கண்களென்று அளவிட்டறியும் தன்மையுடையனவாம்; அருள் ஞானம் பெற்றோர்க்கு ஞான சொரூபமாய் இத்தனையென்றளவிட்டறியும் தன்மையைக் கடந்த பல கண்கள் உடம்பெல்லாம் நிறைந்திருக்கும் என்பது தோன்ற 'அனந்தம் விழி' என்றார். ஞானிகளுக்கு உடம்பெல்லாம் கண்கள் என்றறிக.

11. உற்றபெருஞ் சுற்ற முறநன் மனைவியுடன்
பற்றிமிக வாழ்க பசுவின்வால்—பற்றி
நதிகடத்த லன்றியே நாயின்வால் பற்றி
நதிகடத்த லுண்டோ நவில்.

(ப-ரை) பசுவின் வால் பற்றி நதி கடத்தல் அன்றி-பசுவின் வாலைப் பிடித்துக்கொண்டு ஆற்றைத் தாண்டலாம் அல்லாமல், நாயின் வால் பற்றி நதி கடத்தல் உண்டோ - நாய்வாலைப் பிடித்துக்கொண்டு ஆற்றைத் தாண்டுதல் உண்டோ?, நவில்-(நீ)சொல்!,

(அதுபோல) உற்ற பெருமை சுற்றம் உற - அன்பு பொருந்திய உறவின் முறையார் சூழ, நன்மை மனைவியுடன் பற்றி - கற்புடைய மனைவியோடு கூடி, மிக வாழ்க - (புகழ்) ஓங்க வாழ்வாராக.

(க - ரை) இல்லறம் அல்லது நல்லறம் அன்று.

(வி - ரை) நாய்வாலைப் பிடிப்பதுபோலக் கற்பில்லா மனைவியைப் பிடித்துச் சமுசாரமாகிய நதியைத் தாண்ட முயலற்க என்று குறிப்பிற் கொள்க. உற்ற என்பதற்கு அன்பு என்று செயப்படு பொருள் வருவித்துக் கூறப்பட்டது. 'நல் மனைவி' என்றதனால் 'கற்புடைய மனைவி' என்றும், 'மனைவியுடன் பற்றி' என்பதனால் 'மனைவியோடு கூடி' என்று மூன்றும் வேற்றுமை உடனிகழ்ச்சிப்பொருட் டென்றும் உரை கொள்க. ஓடம் தெப்பம் முதலிய இல்லாக் காலத்தில் பசுவாலைப் பிடித்து நதி தாண்டுதல் இயல்பானமைபற்றிப் 'பசுவின் வால்பற்றி நதி கடத்தல்' என்றார்; இதுவும் இரண்டாம் ஏழாம் செய்யுள்களைப்போல உவமானங்கள் மட்டும் பெற்றிருப்பதன்றி, ஈருபமானங்களுக்கு ஒருபமேயமே கொண்டிருப்பதால், மற்றொன்று குறிப்பிற் கொள்ளப்பட்டது. ஏ - அசை.

12. ஆசைக் கடியா னகிலலோ கத்தினுக்கும்
ஆசற்ற நல்லடியா னவானே—ஆசை
தனையடிமை கொண்டவனே தப்பா துலகந்
தனையடிமை கொண்டவனே தான்.

(ப - ரை) ஆசைக்கு அடியான் ஏ - ஆசைக்கு ஆளாகி அதற்கு அடங்கி நடப்பவனே, அகிலம் லோகத்தினுக்கும் - எல்லா உலகங்களுக்கும், ஆசு அற்ற - குற்றம் அற்ற, நன்மை அடியான்,

ஆவான்-நல்லாளாய் அடங்கி வாழ்பவன்; ஆசை தன்னை அடிமை கொண்டவன் ஏ - (ஆசைக்கு ஆளாகாமல்) அதைத் தனக்கு ஆளாக்கி அடக்கி நடப்பவனே, உலகம் தன்னை தப்பாது அடிமை கொண்டவன் - உலகங்களைத் தவறுமல் தனக்கு ஆளாக்கி அடக்கிக்கொண்டவன்.

(க - ரை) ஆசை யற்றவன் உலகை யாள்பவன்.

(வி-ரை) 'ஆசாபசாசைத் தூரத்து' என்றபடி செய்ய வகை யறியாமல், அதற்கு அடிமையாகி வாழ்பவனே உலகில் பிறர்க்கு அடிமையாகி வாழ்பவன் என்பது தோன்ற 'அகிலலோ கத்தினுக்கும் நல்லடியான்' என்றார்.

"அவாவென்ப வெல்லா வுயிர்க்குமெஞ் ஞான்றுந்
தவாஅப் பிறப்பீனும் வித்து."

என்றார் பெரியாரும். இங்ஙனமின்றிச் சுட்டதுபோ லாசையை விட்டு, உலகாசாரப் பற்றற்று வாழும் பரமஞானிக்கு எல்லா உலகும் அடிமையாகும் என்பது தோன்ற 'உலகந் தனையடிமை கொண்டவன்' என்றார். "துறவிக்கு வேந்தன் துரும்பு" என்றதும் இக் கருத்தை பற்றியது என்க. ஏயுந் தானும் அசைகள்.

13. ஆனந் தணர்மகளி ரன்பாங் குழந்தைவதை
மானந் தரும்பிசி வார்த்தையிவை—மேனிரையே
கூறவரு பாவங் குறையாதொவ் வொன்றுக்கு
நூறதிக மென்றே நுவல்.

(ப - ரை) ஆன் அந்தணர் மகளிர் அன்பு ஆம் குழந்தை வதை - பசுவையும் வேதியரையும் பெண்களையும் அன்புள்ள குழந்தையையும் கொல்லுதலும், மானம் தரும் பிசி வார்த்தை - இகழ்ச்சியை உண்டாக்கும் பொய் வார்த்தை பேசுதலும், இவை -

(ஆகிய)' இவைகள், மேல் நிரையே கூறவரு பாவம்-பிறகு வரிசையாய்ச் சொல்லவரும் பாவத்தில், குறையாது - குறையாமல், ஒன்று-ஒன்றுக்கு, நூறு அதிகம் என்றே நுவல்-ஒன்றுக்கொன்று நூறு மடங்கு அதிகமாம் என்று சொல்வாயாக.

(க - ரை) பொய் பேசுதலே பாவங்களிற் சிறந்ததாம்.

(வி - ரை) பசுக்களைக் கொல்வதனால் ஒருமடங்கு பாவம் எனில், பிராமணரைக் கொல்வதனால் நூறுமடங்காம்; பெண்களைக் கொல்வதனால் பதினாயிர மடங்காம்; குழந்தையைக் கொல்வதனால் பத்திலக்ஷ மடங்காம்; ஒரு பொய் பேசுவதனால் பத்து கோடியாம் என்க. ஆன், அந்தணர், மகளிர், குழந்தை, பிசிவார்த்தை-உம்மைத் தொகை. 'நிரையே' என்பதற்கு 'வரிசைக் கிரமமாக' என்று பொருள் கொள்க. இவை பாவத்திற் குறையாமல் நிரையே ஒன்றுக்கொன்று நூறுமடங்கு அதிகம் என்று அன்வயப்படுத்தி இவை எழுவாய், அதிகம் பயனிலை என்று கொள்க. ஏ - அசைநிலை.

14\. பெற்றமையு மென்னாப் பெரியோரும் பெற்றபொருள்
மற்றமையு மென்றே மகிழ்வேந்தும்—முற்றியநன்
மானமிலா வில்லாளு மானமுறு வேசியரும்
ஈன முறுவா ரிவர்.

(ப - ரை) பெற்று அமையும் என்னாத பெரியோரும்-கிடைத்ததைப் பெற்றுப் போதும் என்று மனம் நிறையாத பெரியோர்களும், பெற்ற பொருள் மற்று அமையும் என்று மகிழ் வேந்தும் - கிடைத்த பொருள் போதுமென்று மனம் நிறைந்து மகிழும் அரசனும், முற்றிய நன்மை மானம் இல்லாத இல்லாளும் - மிகுந்த கற்போடு நாணம் இல்லாத மனையாளாகிய குலமாதும், மானம்

உறு வேசியரும் - நாணமுள்ள விலைமாதர்களும், (ஆகிய) இவர் ஈனம் உறுவார் - இவர்கள் தாழ்வடைவார்கள்.

(க - ரை) அவா உண்மையால் ஞானியும், அஃது இன்மையால் அரசனும், கற்பின்மையால் குலமாதும், அஃது உண்மையால் விலைமாதும் தாழ்வடைவார்கள்.

(வி - ரை) கிடைத்தமட்டில் மன நிறைவடைதலே ஞானிக் கழகு. கிடைத்தமட்டில் மன நிறைவடையாமல், மேன்மேலும் உலகை வென்று ஆளவேண்டு மென்னும் அவா அடங்காமையே அரசற்கழகு. குலமகட்கு நாணமும், விலைமகட்கு நாணம் இன்மையும் அழகுகளாம். ஆகையால், இவர்கள் இக் குணங்களைப் பெருமையால் இழிவடைவர் என்றபடி. ஏ - அசைநிலை.

15. கற்றோர் கனமறிவர் கற்றோரே கற்றறியா
மற்றோ ரறியார் வருத்தமுறப்—பெற்றறியா
வந்தி பரிவாய் மகவைப் பெறுந்துயரம்
நொந்தறிகு வாளோ நுவல்.

(ப - ரை) வருத்தம் உற பெற்று அறியாத வந்தி - இடுப்பு வலி உண்டாகப் பிள்ளையைப் பெற்றறியாத மலடி, பரிவு ஆய் மகவை பெறும் துயரம் - ஆசையோடு பிள்ளையைப் பெறுந் துன்பத்தை, நொந்து அறிகுவாளோ நுவல் - வருந்தி அறிவாளோ? (நீ) சொல்லக்கடவாய்; (அதுபோல) கற்றோர் கனம் கற்றோரே அறிவர் - கற்றறிந்த பெரியோர் பெருமை கற்றறிந்தோரே அறிவர்; (அன்றி) கற்று அறியாத மற்றோர் அறியார் - கற்றறியாத பிறர் அறியமாட்டார்கள்.

(க - ரை) கற்றோரைக் கற்றோரே காமுறுவர்.

(வி - ரை) இதிலும் ஈருபமேயங்களுக்கு ஒருபமானமே இருத்தலால், வந்தி மகவைப் பெறுந் துயரம் அறியாதவாறுபோல

கல்லாதார் கற்றோர் கனமறியாரென்று கொண்டு, பிள்ளை பெற்ற வள் மகவைப் பெறுந் துயரம் அறியுமாறுபோலக் கற்றோரே கற்றோர் கன மறிவர் என்று குறிப்பிற் கூட்டி யுரைத்துக்கொள்க. ஏகாரம் தேற்றம். ஓகாரம் வினா.

16. செய்யு மொருகருமந் தேர்ந்து புரிவதன்றிச்
செய்யின் மனத்தாபஞ் சேருமே—செய்யவொரு
நற்குடியைக் காத்த நகுலனைமுன் கொன்றமறைப்
பொற்கொடியைச் சேர்துயரம் போல்.

(ப - ரை) செய்ய ஒரு நன்மை குடியை காத்த - விளக்கமாகிய ஓர் உயர் குடும்பத்தைக் காப்பாற்றின, நகுலனை முன் கொன்ற - கீரியை முற்காலத்தில் முன் யோசனையின்றிக் கொன்ற, பொன் மறை கொடியை சேர் துயரம்போல் - ஓர் அழகிய பூங்கொடியைப் போன்ற பிராமணப் பெண்ணுக்கு நேரிட்ட (மனத்) துயரம்போல, செய்யும் ஒரு கருமம் - செய்யவேண்டிய ஒரு காரியத்தை, தேர்ந்து புரிவது அன்றி - ஆராய்ந்து செய்வது அன்றி, செய்யின் மனம் தாபம் சேரும்-(ஆராயாமல்) செய்தால் மனத் துயரம் உண்டாகும்.

(க - ரை) நுண்ணிய கருமமும் எண்ணித் துணி.

(வி - ரை) ஒரு பார்ப்பனப் பெண் தனக்குப் பிள்ளை யில்லாமையால், ஒரு கீரிப்பிள்ளையை வளர்த்துவந்தாள். பிறகு அவளுக்கோர் ஆண் குழந்தை பிறந்தது. அதற்குக் கீரியைக் காவல் வைத்து ஒரு நாள் அவள் சலந் திரட்டச் சென்றாள். அப்போது ஒரு நாகம் குழந்தை யருகில் வந்துகொண் டிருக்கக் கண்ட கீரி, அதனை நகத்தாற் கீறிப் பிடித்துக் கடித்துக் கொன்று பிள்ளையைக் காத்தது. இந்தச் செய்தியைத் தெரிவிக்கத் தன் குருதி முகத்தோடு அந்தக் கீரி, பிராமணப் பெண்ணை எதிர்கொண் டோடிற்று.

அதைக் கண்டவுடன் அவள், அது தன் குழந்தையைக் கொன்றதென்றெண்ணி அதன்மேல் தண்ணீர்க் குடத்தைப் போட்டுக் கொன்று, பிறகு உட்சென்று, அதனுடைய அருஞ் செய்கையைக் கண்டு, தானும் மாண்டாள்.

> "எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
> எண்ணுவ மென்ப திழுக்கு."

என்னும் பெரியார் திருமொழி இங்கு விசதமாகின்றது காண்க. அந்தப் பிள்ளையைக் கீரி காத்தமையான், அக் குடி சந்ததி விளங்கி ஓங்கிற்று. ஆகையால், 'செய்யவொரு நற்குடியைக் காத்த நகுலன்' என்றார். 'மறைப்பொற் கொடி' என்பதை பொன் மறைக் கொடி என்று கொண்டு, "அழகிய வேதிய குலத்திற் பிறந்த பூங்கொடிபோன்ற பெண்" என்று அன்மொழித் தொகையாகப் பொருள் உரைத்துக் கொள்க. ஏ - அசைநிலை.

17. நாவி னுனியி னயமிருக்கிற் பூமாதும்
நாவினிய நல்லோரு நண்ணுவார்—நாவினுனி
ஆங்க டினமாகி லத்திருவுஞ் சேராள்முன்
ஆங்கே வருமரண மாம்.

(ப - ரை) நாவின் நுனியில் நயம் இருக்கில் - நாக்கு நுனியில் நல்ல வார்த்தை இருந்தால், பூமாதும் - இலக்குமியும், நா இனிய நல்லோரும் - இன்சொல் பேசும் நல்லோர்களும், நண்ணுவார் - சேர்வார்கள்; நாவின் நுனி கடினம் ஆம் ஆகில் - நாக்கு நுனி கெட்ட வார்த்தை பேசுமானால், அ திரு உம் சேராள் - அந்த இலக்குமியும் சேரமாட்டாள்; ஆங்கே முன் மரணம் வரும் ஆம் - அதற்கு முந்தியே சாவும் வரும்; (இது நிச்சயம்.)

(க - ரை) நயம்பட வுரைத்தால் நன்மை உண்டாம்.

(வி - ரை) 'நா இனிய' என்பதில் நா இடவாகுபெயராய்ச் சொல்லை யுணர்த்திற்று. "கடினம்" குணவாகுபெயராய் வன் சொல்லைக் காட்டிற்று. 'மரணமும் வரும்' என்பதில் எண்ணும்மை செய்யுள் விகாரத்தாற் றொக்கது. 'ஆம்' என்பது இதிற் சொன்ன விஷயத்தை வற்புறுத்திக் கூறுகின்றது.

18. ஈக்கு விடந்தலையி லெய்துமிருந் தேளுக்கு
வாயத்த விடங்கொடுக்கில் வாழுமே—நோக்கரிய
பைங்கணர வுக்குவிடம் பல்லளவே துர்ச்சனருக்
கங்கமுழு தும்விடமே யாம்.

(ப - ரை) ஈக்கு தலையில் விடம் எய்தும் - ஈக்குத் தலையில் விஷம் இருக்கும்; இரும் தேளுக்கு வாய்த்த விடம் கொடுக்கில் வாழும் - பெரிய தேளுக்குப் பொருந்திய விஷம் கொடுக்கில் இருக்கும்; நோக்கு அரிய பசுமை கண் அரவுக்கு - அரிய பார்வையோடு கூடி அழகிய கண்களை உடைய பாம்புக்கு, பல் அளவே விடம்-பல்லில் மட்டும் விஷம் (இருக்கும்); துர்ச்சனர்க்கு அங்கம் முழுதும் விடமே ஆம் - துஷ்டர்களுக்கு உடம்பெங்கும் விஷமாகவே இருக்கும்.

(க - ரை) தீயார் நஞ்சுருவமா யிருப்பர்.

(வி - ரை) ஈக்குத் தலையில் மட்டும் விஷமிருக்கும் என்றும், தேளுக்குக் கொடுக்கில் மட்டும் விஷமிருக்கு மென்றும் உரை விரித்துக் கொள்க. முன்னைய ஏகாரம் அசை; இரண்டாவது பிரிநிலை; மூன்றாவது தேற்றம். ஈக்குந் தேளுக்கும் பாம்புக்கும் உள்ள விஷத்தை இந்த இடத்தில்தான் என்று வரையறுத்துக் கூறலாம். ஆனால், துஷ்டர்களுடைய விஷத்தன்மையை வரையறுக்க முடியாது என்பதனால், துர்ச்சனருக்கு 'அங்க முழுதும் விடமே ஆம்' என்றார்.

19. துர்ச்சனரும் பாம்புந் துலையொக்கி னும்பாம்பு
துர்ச்சனரை யொக்குமோ தோகையே—துர்ச்சனர்தாம்
எந்தவிதத் தாலு மிணங்காரே பாம்புமணி
மந்திரத்தா லாமே வசம்.

(ப-ரை) தோகையே-மயில்போலும் சாயலை உடையவளே!, துர்ச்சனரும் பாம்பும் - துஷ்டர்களும் பாம்பும், துலை ஒக்கினும்-(கெடுதி செய்வதில்) இடை ஒத்திருப்பார்கள் (ஆனாலும்), பாம்பு துர்ச்சனரை ஒக்குமோ - பாம்பு துஷ்டர்களை (ஒரு விஷயத்தில்) ஒவ்வாது; துர்ச்சனர் - துஷ்டர்கள், எந்த விதத்தால் உம் - எந்த விதத்திலும், இணங்கார் ஏ - வசப்படமாட்டார்களே; பாம்பு மணி மந்திரத்தால் வசம் ஆம் - பாம்பு மணிமந்திரங்களால் வசமாகும்.

(க - ரை) தீயார் பாம்பினும் கொடியார்.

(வி-ரை) 'துலை' இடவாகுபெயராய் இடையைக் குறித்தது. முன்னைய ஏகாரம் விளி, இரண்டாவது ஏகாரம் வினா, மூன்றாவது ஏகாரமும் தாமும் அசைகள். மணிமந்திரம்-உம்மைத்தொகை.

20. கொம்புளதற் கைந்து குதிரைக்குப் பத்துமுழம்
வெம்புகரிக் காயிரந்தான் வேண்டுமே—வம்புசெறி
தீங்கினர்தங் கண்ணிற் றெரியாத தூரத்து
நீங்குவதே நல்ல நெறி.

(ப - ரை) கொம்பு உள்ளதற்கு ஐந்து-கொம்புள்ள பிராணிகளுக்கு ஐந்துமுழத் தூரந்தானும், குதிரைக்கு பத்து முழம் - குதிரைக்குப் பத்துமுழத் தூரந்தானும், வெம்பு கரிக்கு ஆயிரம் தான் வேண்டும் - கோபிக்குந் தன்மையுள்ள யானைக்கு ஆயிர முழத் தூரந்தானும் (விலக) வேண்டும்; வம்பு செறி தீங்கினர்தம் கண்ணில்-அநியாய மிகுந்த துஷ்டர்களுடைய பார்வைக்கு, தெரி

யாத தூரத்து - தெரியாத தூரத்தில், நீங்குவதே நல்ல நெறி - போவதே நல்ல வழியாம்.

(க - ரை) துஷ்டரைக் கண்டால் தூர ஓடி.

(வி-ரை) 'ஐந்து முழம்' என்பதை 'ஐந்து முழத்தூரந்தான்' என்றும், 'பத்து முழம்' என்பதைப் 'பத்துமுழத் தூரந்தான்' என்றும் 'ஆயிரந்தான்' என்பதை 'ஆயிரமுழத் தூரந்தான்' என்றும் பொருள் விரித்துக்கொள்க. 'தான்' என்பது வரையறை இடைச்சொல். ஏகாரம் முன்னையது அசை, பின்னையது தேற்றம். கொம்புள்ளதற்கும், குதிரைக்கும், யானைக்கும் விலக வேண்டுவது முறையே ஐந்து, பத்து, ஆயிரமுழத் தூரந்தான் என்று வரையறை யிருப்பினும், துஷ்டர்களுக்கு விலகி யிருக்கவேண்டிய தூரத்தின் அளவு இத்தனை என்று வரையறுக்கலாகா தென்பது தோன்றத் 'தெரியாத தூரத்து நீங்குவதே நல்லநெறி' என்றார்.

21. அவ்விய நெஞ்சத் தறிவில்லாத் துர்ச்சனரைச்
செவ்விய ராக்குஞ் செயலுண்டோ—திவ்வியநற்
கந்தம் பலவுங் கலந்தாலு முள்ளிதன்றுர்க்
கந்தங் கெடுமோ கரை.

(ப - ரை) திவ்விய நன்மை கந்தம் பலவும் கலந்தாலும் - மேன்மையான நல்ல பலவித வாசனைகளையும் சேர்த்தாலும், உள்ளி தன் துர் கந்தம் கெடுமோ—வெள்ளுள்ளியானது தன்னுடைய கெட்ட வாசனையில் நீங்குமோ? (அதுபோல்) அவ்விய நெஞ்சத்து அறிவு இல்லாத துர்ச்சனரை - பொறாமை நிரம்பிய மனமுடைய அறிவில்லாத துஷ்டரை, செவ்வியர் ஆக்கும் செயல் உண்டோ - நல்லவராக்குங் காரியம் உண்டோ?, கரை-(நீ)சொல்.

(க - ரை) துஷ்டருக்கு உரைத்தாலும், தோன்று துணர்வு.

(வி - ரை) ஓகாரங்கள் இரண்டும் உடன்பாட்டு விருப்பொருளன. இல்லை யென்னும் விடைகள் ஏற்பன. 'உள்ளியது' என்றும் பாடம்; அப்போது 'கந்தம்' என்பதற்குத் 'துர்க்கந்தம்' என்று பொருள் வருவித் துரைத்துக்கொள்க. நீ - எழுவாய், கரை - பயனிலை.

"இனநல நன்குடைய வாயினு மென்று
மனநல மாகாவாங் கீழ்."

என்றார் பெரியோரும்.

22. துன்னு மிருமலுந் துர்ச்சனரு மொக்குமே
மன்னு மினிமையான் மாறாகிப்—பன்னுங்
கடுவுங் கடுநேர் கடுமொழியுங் கண்டாற்
கடுக வசமா கையால்.

(ப - ரை) மன்னும் இனிமையால் மாறு ஆகி - முறையே பொருந்திய தித்திப்பால் அல்லது இன்மொழியால், மாறு ஆகி- வேறு மாறாகி, பன்னும் கடுவும் கடு நேர் மொழியும் கண்டால் - தாழ்வாகக் கூறும் கசப்பையும் விஷத்துக் கொப்பான வன்மொழியையுங் கண்டால், கடுக வசம் ஆகையால் - விரைவில் வசப்படுதலால், துன்னும் இருமலும் துர்ச்சனரும் ஒக்கும் - (உடலில்) நிலைத்த இருமல் நோயும் துஷ்டரும் ஒப்பாவார்.

(க - ரை) துஷ்டரை வன்சொல்லால் வெல்லவேண்டும்.

(வி - ரை) இனிமைக்கு வச மாகாத இருமல் நோயைப் போல, இன்சொல்லுக்கு வசமாகார் துஷ்டர் என்பதாம். இருமல் நோயாளர் தித்திப்பான பொருளை உண்டால், நோய் அதிகமாகும் என்பது அநுபவசித்தம்; கசப்பான பொருளை யுண்டால் இருமல் நோய் வசப்படும்; அதுபோல, வன்மொழி பேசினாலன்றித் துஷ்டர் வசமாகார்.

"பொய்க்குப் பொய் கோளுக்குக் கோள்
அறிவில்லார்க்கு இரட்டி"

என்றதூஉம் இப் பெற்றி நோக்கியே என்க. இனிமைக்கு அதிகரித்துக் கடுமைக்கு வசமாகும் இவ் விரண்டு காரணங்களால் இருமலும் துஷ்டரும் இணையாவார் என்று கொள்க. நிரல்நிறைப் பொருள்கோள் இச் செய்யுளில் வருவது காண்க. இனிமை - தித்திப்பு (அல்லது) இன்சொல். ஏகாரம் அசைநிலை.

23. செங்கமலப் போதலர்ந்த செவ்விபோ லும்வதனந்
தங்கு மொழிசந் தனமபோலும்—பங்கியெறி
கத்தரியைப் போலுமிளங் காரிகையே! வஞ்சமனங்
குத்திரர்பால் மூன்று குணம்.

(ப - ரை) இளமை காரிகையே-இளமையாகிய பெண்ணே!, வதனம் செம்மை கமலம் போது அலர்ந்த செவ்விபோலும்-முகம் செந்தாமரைப்பூ மலர்ந்த அழகுபோ லிருக்கும்; தங்கும் மொழி சந்தனம் போலும் - இனிமை தங்கிய வார்த்தை சந்தனம்போல் (குளிர்ந்திருக்கும்); வஞ்சம் மனம் பங்கி எறி கத்தரியை போலும்- வஞ்சனை நிறைந்த மனம் மயிரை வெட்டுங் கத்தரிக்கோல் போல் (கடுமை) யாயிருக்கும்; இவை குத்திரர்பால் மூன்று குணம் - இவை வஞ்ச நெஞ்சரிடத்துள்ள மூன்று குணங்களாம்.

(க - ரை) வஞ்சகர்களுக்கு மனம் கடுமையாகவும், சொல் இனிமையாகவும் இருக்கும்.

(வி - ரை) "அடி நாக்கிலே நஞ்சு, நுனி நாக்கிலே விஷம்" என்பதூஉம் இக் கருத்தே பற்றி யென்க. வஞ்ச நெஞ்சக் கீழ் மக்களுக்கு முகம் செந்தாமரைபோல் அழகாகவும், வார்த்தை சந்தனம்போல் குளிர்ச்சியாகவும், மனமட்டும் கத்தரிக்கோல்போல் காவடத்திற் கடுமையாகவும் இருக்கும் என்று கொள்க.

24. நீசனோ நீச னினையுங்காற் சொற்றவறு
நீசனோ நீச னவனையே—நீசப்
புலையனு மென்றுரைக்கும் புல்லியனே மேலாம்
புலையனு மென்றே புகல்.

(ப - ரை) நினையுங்கால் - யோசிக்குமிடத்தில், சொல் தவறும் நீசனே நீசன் - சொன்ன வார்த்தை தப்பும் புலையனே புலையன்; நீசனோ நீசன் - (ஆகையால்) பறைச்சேரியிலுள்ள புலையனோ புலையன்?, அவனையே நீசம் புலையன் ஆம் என்று உரைக்கும் - அந்தப் புலையனையே இழிந்த புலையன் என்று சொல்லும்; புல்லியனே - இந்தக் கீழ்மகனே, மேல் ஆம் புலையன் ஆம் என்று புகல் - முதல்தரமான புலையனாவான் என்று சொல்.

(க - ரை) சொன்ன சொல் தவறுவோன் புலையற்கும் தாழ்ந்தவனாவான்.

(வி - ரை) ஓகாரம் வினா. முதல் ஏகாரம் தேற்றம்; இரண்டாவது ஏகாரம் பிரிநிலை; மூன்றாவது தேற்றம்; நான்காவது அசைநிலை. உடன்பாட்டு ஓகார வினா, அல்ல என்னும் எதிர்மறைப் பொருள் தருவது காண்க. 'அந்தச் சேரிப் புலையனையே புலையனும் என்றுரைக்கும் இந்தக் கீழ்மகனே மேலாம் புலையன்' என்று பொருள் விரித்துக்கொள்க. 'புல்லியன்' என்றது சொற்றவறுங் கீழ்மகனை. நீ-தோன்றா எழுவாய், புகல்-பயனிலை.

25. ஞானமா சார நயவா ரிடைப்புகழும்
ஏனைநால் வேத மிருக்குநெறி—தான்மொழியிற்
பாவநிறை சண்டாளர் பாண்டத்துக் கங்கைநீர்
மேவுநெறி யென்றே விடு.

(ப - ரை) மொழியில் - எடுத்துச் சொன்னால், ஞானம் ஆசாரம் நயவாரிடை-ஞான நெறியையும் ஆசாரத்தையும் விரும்பாதவ

ரிடத்தில், புகழும் ஏனை நான்கு வேதம் இருக்கும் நெறி - யாவரும் புகழ்கின்ற சிறந்த நான்கு வேதங்களும் இருக்குந் தன்மையானது, பாவம் நிறை சண்டாளர் பாண்டத்து - பாவம் நிறைந்த புலையர்களுடைய பாத்திரத்தில், கங்கை நீர் மேவும் நெறி - கங்கா தீர்த்தம் இருக்குந் தன்மைபோலாம், என்றே விடு - என்று தெளிந்து (அவர்கள் கூட்டுறவை) விடு.

(க - ரை) பிறப்பொழுக்கங் குன்றினவர்களுடைய வேதவுணர்ச்சி வீணாகும்.

(வி-ரை) ஏகாரம் தேற்றம். 'ஏனை' என்பது அவர்களுக்குப் புறம்பானது என்னும் பொருளது ஆகையால் 'சிறந்த' என்று பொருள் விரிக்கப்பட்டது. தான்-அசை. சண்டாளர் பாத்திரத்திற் பாவநீர் நிறைதலன்றிப் புண்ணிய நீராகிய கங்காநீர் நிறைதலில்லையென்பார் 'பாவநிறை சண்டாளர் பாண்டம்' என்றார். ஞானசாரநயவாமை புண்ணியத்தை விரும்பாமை ஞானசாரத்தை நயவார், சண்டாளர் பாண்டம் போல்வார் என்றும், அவர்கள் வேதம் படித்தல் அப் பாண்டத்தில் கங்கா தீர்த்தம் நிறைதல்போலும் என்றும் கொள்க.

"மறப்பினும் ஓத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப்பொழுக்கம் குன்றக் கெடும்."

என்றார் பெரியாரும்.

26. குணநன் குணராக் கொடியோ ரிடத்திற்
குணநன் குடையார் குறுகார்—குணமுடைமை
நண்ணாச் சமண நகரத்திற் றாசொலிக்கும்
வண்ணானுக் குண்டோ வழக்கு.

(ப - ரை) குணம் உடைமை நண்ணாத - (உடுக்கும்) குணத்தைப் பொருந்தாத, சமணர் நகரத்தில் - சமணர் வாழும் ஊரில்

தூசு ஒலிக்கும் வண்ணானுக்கு வழக்கு உண்டோ - வஸ்திரம் வெளுக்கும் வண்ணானுக்குச் செலவு உண்டோ?, (அதுபோல) குணம் நன்கு உணராத கொடியோர் இடத்தில்-குணத்தின் சிறப்பை அறியாத துஷ்டரிடத்தில், குணம் நன்கு உடையார் குறுகார்-குணத்தின் சிறப்பை யுடையவர் சேரமாட்டார்.

(க - ரை) தீயாரிடத்தில் நல்லார்க்குச் செலவில்லை.

(வி - ரை) ஒகாரம் உடன்பாட்டு வினா, இல்லை என்னும் எதிர்மறை விடை தருவது காண்க. சமணர், அமணர், அம்மணர், அம்மணமானவர்கள், உடுக்காதவர்கள். ஆகையால், அவர்களிடத்தில் வண்ணானுக்கு வேலை யில்லை. அதுபோல, குணநன்மை யறியாத, அதாவது, குற்றம் நினைத்த கொடியோரிடத்தில் குற்றமற்ற மேலோர் குறுகார் என்று கொள்க.

27. ஆனை மருப்பு மருங்கவரி மான்மயிருங்
கான வரியுகிருங் கற்றோரு—மானே!
பிறந்தவிடத் தன்றிப் பிறிதொருதே சத்தே
செறிந்தவிடத் தன்றோ சிறப்பு.

(ப - ரை) மானே - பெண்ணே!, ஆனை மருப்பும் - யானைக் கொம்புக்கும், அருமை கவரி மான் மயிரும் - அருமையாகிய கவரிமான் மயிருக்கும், கானம் வரி உகிரும் - காட்டுப் புலிநகத்துக்கும், கற்றோரும் - வித்துவான்களுக்கும், பிறந்த இடத்து அன்றி - பிறந்த இடத்தில் அல்லாமல், பிறிது ஒரு தேசத்து - வேறொரு தேசத்தில், செறிந்த இடத்து அன்றோ சிறப்பு - சேர்ந்த இடத்தில் அல்லவா சிறப்பு?

(க - ரை) யானைக்கொம்பு முதலியவைகளுக்குப் பிறந்த இடத்தன்றிப் புகுந்தவிடத்துச் சிறப்பதிகமாம்.

(வி - ரை) ஆனைமருப்பு முதலியவைகள் நான்காம் வேற்றுமைத்தொகைகள்; 'இவைகளை முதல் வேற்றுமைகளாகக் கொள்வதும் உண்டு. முன்னையதேல் 'சிறப்பு மிகும் அன்றோ' என்றும், பின்னையதேல் 'சிறப்பு மிகுதல் அன்றோ' என்று உரை விரித்துக் கொள்க. பிறந்தவிடத்தும் அன்றிச் செறிந்த இடத்தும் என்று உம்மைகளைச் செய்யுள் விகாரங்களாகக் கொள்வர் சிலர். அடுத்த செய்யுளை நோக்குங்கால் இது தவறு. அல்லதூஉம் யானைக்கொம்புக்கும் கவரிமயிருக்கும் கற்றோர்க்கும் பிறந்த இடத்தில் சிறப்புச் சாதாரணம்; வேறு புகுந்த இடத்திலேதான் சிறப்பு மிகும் என்பது அனுபவசித்தம். ஆனைக்கொம்பு என்பது போய், புகுந்த இடத்தில் 'தந்தம்' என்று பெயர் பெற்று உயர்தலையும், மான்மயிர் என்பது போய், கோயில்களில் 'வெண்சாமரம்' என்று பெயர் பெற்றுச் சிறத்தலையும், சோழனை விட்டுப்போன கம்பர் சேரனிடத்தில் மேன்மையடைந்தமையும் இங்கே கவனிக்க. 'அன்றோ' என்னும் எதிர்மறைவினா ஆம் என்னும் உடன்பாட்டு விடை தருவது காண்க. உம்மைகள் எண்ணுப்பொருளன.

28. தலைமயிருங் கூருகிரும் வெண்பல்லுந் தத்தம்
நிலையுடைய மானவரு நிற்கும்—நிலைதவறாத்
தானத்திற் பூச்சியமே சாரு நிலைதவறுந்
தானத்திற் பூச்சியமோ தான்.

(ப - ரை) தலை மயிரும் - தலையிலுள்ள மயிரும், கூர்மை உகிரும் - கூரிய நகமும், வெண்மை பல்லும் - வெள்ளிய பல்லும், தம்தம் நிலை உடைய மானவரும் - தங்கள் தங்கள் நிலைமையிற் பொருந்தியுள்ள மாந்தரும், நிற்கும் நிலை தவறாத தானத்தில் பூச்சியமே - தாம்தாம் நிற்கும் நிலை தவறாத இடத்தில் சிறப்புடையனவே; சாரும் நிலை தவறும் தானத்தில் பூச்சியமோ - பொருந்திய நிலை தவறிப் புகுமிடத்தில் சிறப்புடையனவோ?

(க - ரை) தலைமயிர் முதலியவைகள் பிறந்தவிடத்தன்றிப் புகுந்த இடத்துச் சிறப்படையா.

(வி - ரை) மேலைச் செய்யுளுக்கு மாறாயுள்ள விஷயத்தைக் கூறுவதிது. இவைகளுக்குப் பிறந்த இடத்திற் சிறப்பும், புகுந்த இடத்திற் குறையும் என்று கொள்க. தலைமயிரும், கூருகிரும், வெண்பல்லுந் தத்தம் நிலைதவறுந் தானத்திற் சிறப்புக் குறைதல் அனுபவசித்தம். இப்படியே மாந்தரும் நிலைதவறிப் புகுமிடத்தில் சிறப்புக் குறைவர் என்க. இதற்கு விராட நகரத்திற் கரந்துறைந்த பாண்டவரே சான்றாவர். உடன்பாட்டு வினாப்பொருளில் வந்த ஓகாரம், அல்ல என்னும் எதிர்மறை விடை தருவது காண்க. ஏகாரம் தேற்றம். மேலைச் செய்யுளில் புகுந்த இடத்திற் சிறக்கும் பொருள்களும், இந்தச் செய்யுளில் பிறந்த இடத்திற் சிறக்கும் பொருள்களும் கூறப்பட்டன. தான் அசைநிலை.

29. வென்றி வரியுகிரும் வெண்கவரி மான்மயிருந்
துன்றுமத யானைச் சுடர்மருப்பும்—நின்றநிலை
வேறுபடி னுஞ்சிறப்பா மெய்ஞ்ஞானி நின்றநிலை
வேறுபடி னுஞ்சிறப்பா மே.

(ப - ரை) வென்றி வரி உகிரும் - வெற்றி மிகும் புலி நகமும், வெண்மை கவரிமான் மயிரும் - வெண்மையாகிய கவரிமான் மயிரும், துன்றும் மதம் யானை சுடர் மருப்பும் - மதம் பொருந்திய யானையின் ஒளி மிகுந்த கொம்பும், நின்ற நிலை வேறுபடினும் - (தத்தம்) நிலைமையில் மாறினாலும், சிறப்பு ஆம் - சிறப்பு அடையும்; (இவைபோல) மெய்மை ஞானி - உண்மை ஞானி, நின்ற நிலை வேறுபடினும் - தான் நின்ற நிலை மாறினாலும், சிறப்பாமே - சிறப்படைவான்.

(க - ரை) புலிநகம் முதலியவைகள் பிறந்தவிடத்தும் புகுந்தவிடத்தும் சிறப்படையும்.

(வி - ரை) இந்தச் செய்யுளில் பிறந்த இடத்திலும் புகுந்த இடத்திலும் சிறக்கும் பொருள்கள் கூறப்பட்டன. புலிநகம் அதற்கு ஆயுதமாய்ச் சிறந்து, அதனிற் பிரிந்த பிறகு அரசர் மார்பிலணியும் மதாணியாய்ச் சிறந்திருக்கின்றது. கவரிமயிர் அதற்கு மழை பனி வெய்யில்களுக்கு மறைப்பாய்ச் சிறந்து, அதனிற் பிரிந்த பிறகு வெண்சாமரையாய் விளங்குகின்றது. யானைக்கொம்பு அதற்கு ஆயுதமாய் அழகாய்ச் சிறந்து, அதனிற் பிரிந்த பிறகு தந்தமாய்ச் சித்திர விசித்திர வேலைகளுக்குச் சிறந்து விளங்குகின்றது. ஞானியும் வெறிக்கத் திரிந்து, பார்த்தால் உலகத்தவர்போலிருந்தும், தன்னிலை தவறான்; புலையற் கடிமையான அரிச்சந்திரனே சான்று.

30. அன்னை தயையு மடியாள் பணியுமவர்ப்
பொன்னி னழகும் புவிப்பொறையும்—துன்னுமெழில்
வேசி துயிலும் விறன்மந் திரிமதியும்
பேசி லிவையுடையாள் பெண்.

(ப - ரை) பேசில் - சொல்லப் புகுத்தால், அன்னை தயையும் - தாயின் அன்பும், அடியாள் பணியும்-வேலைக்காரியின் பணிவிடையும், மலர் பொன்னின் அழகும் - செந்தாமரையில் வாழும் ஸ்ரீதேவியின் அழகும், புவி பொறையும்-பூமியின் பொறுமையும், துன்னும் எழில் வேசி துயிலும் - அழகு மிகுந்த வேசியின் சயனசுகமும், விறல் மந்திரி மதியும் - புத்திபலமுள்ள மந்திரியின் யோசனையும், இவை உடையாள் பெண் - ஆகிய இவைகளையுடையவளே மனைப்பெண் ஆவாள்.

(க - ரை) அன்னைபோல் தயைமுதலிய உடையவளே கற்புடைய மனைவியாம்.

(வி - ரை) "தாயிற் சிறந்த தயாவுடைய தத்துவன்" என்ற நூலும் இப்பெற்றி நோக்கியே யென்க. உரையில் 'மனைப்பெண்' என்பதற்கு 'மனைவி' என்று பொருள் கொள்க. அன்பில் அன்னையும், பணிவிடையில் அடியாளும், அழகில் இலக்குமியும், பொறுமையில் பூமியும், சயனசுகத்தில் வேசியும், முன் யோசனை கூறுவதில் மந்திரியும் போல்பவளே மனைவியாதற் குரியவள் என்று கொள்க.

31. பெண்ணொருத்தி பேசிற் பெரும்பூமி தானதிரும்
பெண்ணிருவர் பேசில்விழும் வான்மீன்கள்—பெண்மூவர்
பேசி லலைசுவறும் பேதையே! பெண்பலர்தாம்
பேசினுல கென்னாமோ பின்.

(ப - ரை) பேதையே - பெண்ணே!, பெண் ஒருத்தி பேசில் - ஒரு பெண் பேசினால், பெருமை பூமி அதிரும்-பெரிய பூமி அதிரும்; பெண் இருவர் பேசினால் - இரு பெண்கள் பேசினால், வான்மீன்கள் விழும் - ஆகாயத்திலுள்ள நக்ஷத்திரங்கள் உதிரும்; பெண் மூவர் பேசில்-மூன்று பெண்கள் பேசினால், அலை சுவறும்- சமுத்திரம் வற்றும்; பெண் பலர் பேசில் - பல பெண்கள் பேசினால், பின் உலகு என் ஆமோ - பின்பு உலகம் என்ன பாடுபடுமோ!

(க - ரை) பெண்கள் பலர் பேசினால் உலகம் பெரும்பாடுபடும்.

(வி - ரை) இது தக்கபடி கல்வி கேள்விகளால் சீர்திருத்தம் அடையாத பெண்களைக் குறித்ததாம். அவர்களுக்கு அஞ்ஞான மறைப்பால் நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்னு நாற்பால் வேலிகளும் இன்றி அகங்காரமே நிறைந்திருக்கும். அதனால் வாய்

த்தைகள் அவர்களையு மறந்து கடினமாம். அதனால் பூமி அதிரும். ஆயினும் நக்ஷத்திரம் விழுதலும் கடல் வற்றுதலும் உயர்நிலை நவிற்சிகளாம். ஆசிரியர்க்கு மூடப்பெண்கள் இடத்துள்ள அருவருப்பு இதனால் நன்கு விளங்குகின்றது. ஆகையால், பெண்கள் கல்வி கேள்விகளால் நிரம்பி மேற்கூறிய நாற்பால்வேலிகளும் செறிந்து, தமது உள்ளப் புலத்தில் அகங்கார மாடு மேயாமல், ஆடவரைப்போலவே அதிசாக்கிரதையாய்ப் பார்த்துக்கொள்ளவேண்டு மென்பது இதனால் பெறப்பட்டது. தானும் தாமும் அசைநிலைகள்.

32. என்னே கிரேதத் திரேணுகையே கூற்றுவனாந்
தன்னேர் திரேதத்திற் சானகியே—பின்யுகத்திற்
கூடுந் திரௌபதியே கூற்றாங் கலியுகத்தில்
வீடுதொறுங் கூற்றுவனா மே.

(ப - ரை) கிரேதத்து இரேணுகையே கூற்றுவன் ஆம் கிரேதாயுகமாகிய முதல் யுகத்தில் இரேணுகையே யமனாம்; தன்னேர் திரேதத்தில் சானகியே (கூற்றுவன் ஆம்)-தனக்குத் தானே சமமாகிய திரேதாயுகமாகிய இரண்டாம் யுகத்தில் சீதையே யமனாம்; பின் யுகத்தில் கூடும் திரௌபதியே கூற்று ஆம் - அதற்குப் பின் துவாபரயுகமாகிய மூன்றாம் யுகத்தில் (ஐவரோடு) கூடியிருந்த திரௌபதியே யமனாம்; கலியுகத்தில் வீடுதொறும் கூற்றுவன் ஆமே - கலியுகமாகிய இந்நான்காம் யுகத்தில் வீடுதோறும் உள்ள (பெண்கள்) யமன்களாம்; என்னே - இது என்ன அதிசயம்!

(க - ரை) வீடுகள்தோறும் பெண்கள் யமன்களாம்.

(வி - ரை) முதல் ஏ - அதிசயம்; இரண்டாவது மூன்றாவது நான்காவது பிரிநிலைகள்; கடை ஏகாரம் அசைநிலை. இரேணுகை-பரசுராமன் தாய். இவள் தன் தண்ணீர்க்குடத்தில் பிரதிபலித்த ஆகாயவாசியாகிய கந்தர்வன் ஒருவனை யிச்சித்துக் கணவனாகிய

ஜமதக்கினி முனிவருடைய கோபத்துக்காளாய்த் தலை யிழந்தாள். தகப்பன் கட்டளைப்படி பாசுராமர் தன் தாயாகிய இரேணுகை யின் தலையை யறுத்தார். இவளால் கணவன் பெயருங் கெட்டுப் பிள்ளைக்குந் தாயைக்கொன்றவன் என்கிற அபவாதமும் உண்டாகி இன்னு நிலைபெற்றிருக்கிறது. இது முதல் யுகத்தில் நடந்தது. இரண்டாம் யுகத்தில் சீதை யமனையிருந்து மாயமான் பின்னால் இராமரைப் போக்கிக் கெடுதி விளைத்த கதை உலகப் பிரசித்தம். மூன்றாம் யுகத்தில் துரௌபதி கதையும் இப்படியே. துரியோ தனனைக் கண்டு பரிகாசமாய்ச் சிரித்த இவரால் விளைந்த கேடு பாரதமாய் முடிந்தது. நான்காம் யுகத்தில் வீடுகள்தோறும் யமன் கள் என்று பெண்களைக் கோபித்துரைத்த ஆசிரியர், அவர்கள் அப்படி யிருக்குங் காரணங் கூறாமை தவறு. பெரும்பாலும் அவர் களை நாம் படிப்பித்து ஆண்மக்களுக்குள்ள சுதந்திரங்களில் அவர் களுக்குப் பொருத்தமான சிலவற்றைத் தாவேண்டும்; அங்ஙனம் செய்யின் இப்பாட்டு இங்கு இடம்பெறாது. பெண்களை நாம் பெரும்பாலும் மூடப்பேய்க் காட்பட விட்டிருத்தலே இதற்குப் பெருங் காரணமாம். ஆசிய வாசிகளாகிய இப் பாதகண்டத்துப் பெண்மக்கள் இப்படி அவர்களுக்குகந்த சுதந்தாம் பெறாமையே அழகு என்று சிலர் கூறுகின்றனர். அப்படியாயின் அவர்களை யமன்கள் என்று கூறுதல் பிழையாய் முடியும்.

33. கர்ப்பூரம் போலக் கடலுப் பிருந்தாலும்
கர்ப்பூர மாமோ கடலுப்புப்—பொற்பூரும்
புண்ணியரைப் போல விருந்தாலும் புல்லியர்தாம்
புண்ணியரா வாரோ புகல்.

(ப - ரை) கடல் உப்பு கர்ப்பூரம்போல இருந்தாலும் கடல் உப்பு கர்ப்பூரம் ஆமோ - கடலில் பிறக்கும் உப்பானது கர்ப்பூரம் போல இருந்தாலும் அது கர்ப்பூரம் ஆமோ?, (அதுபோல)

பொற்பு ஊரும் புண்ணியரைப்போல இருந்தாலும்-(குண) அழகு மிகுகின்ற நல்லோரைப்போல இருந்தாலும், புல்லியர் புண்ணியர் ஆவாரோ - தீயோர் நல்லோர் ஆவரோ?, புகல் - (நீ) சொல்.

(க - ரை) உருவத்தால் புண்ணியரைப்போன் றிருப்பினும் புல்லியர் புண்ணிய ராகார்.

(வி-ரை) ஓகாரங்கள் இரண்டும் உடன்பாட்டு வினைக்களாய் முறையே ஆகாது, ஆகார் என்னும் எதிர்மறை விடைகள் தருவது காண்க. நிறத்திலும் உருவத்திலும் உப்பு கர்ப்பூரங்கள் ஒன்றேனும் குணத்திலும் மணத்திலும் மதிப்பிலும் ஒன்றாகா. புண்ணியரும் புல்லியரும் இப்படியே உருவத்தில் ஒன்றாயினும் குணத்திலும் மதிப்பிலும் ஒன்றாகார் என்றபடி. "உப்பு கப்பூரம் புணுக்க போலிக்க னுண்டு" என்னும் வேமன்ன கவியின் ஆந்த்ர வாக்கும் இங்கே ஒப்பிடக் கிடப்பது காண்க. தாம் - அசைநிலை.

34. சீலமில்லா னேதேனுஞ் செப்பிடினுந் தானந்தக்
கால மிடமறிந்து கட்டுரைத்தே—ஏலவே
செப்புமவ னுந்தானே சிந்தைநோ காதகன்று
தப்புமவ னுத்தமனே தான்.

(ப - ரை) சீலம் இல்லான் - ஒழுக்கம் அற்றவன், ஏதேனும் செப்பிடினும் - நல்லதே யன்றிக் கெட்டதே சொன்னாலும், தான் - (ஒழுக்கம் உற்றவனாகிய) தான், அந்த காலம் இடம் அறிந்து - அந்தக் காலத்தையும் இடத்தையும் அறிந்து, கட்டுரைத்து - உறுதி மொழிகள் சொல்லி, ஏல - அவனுக்குத் தக்கபடி, செப்புமவனும்-பேசுபவனும், தான் சிந்தை நோகாது அகன்று - தான் மனம் வருந்தாமல் அப்புறம் போய், தப்புமவன் (உம்) தான் உத்தமன்-மானந் தப்புகின்றவனுமாகிய ஒருவன் தான் மேலானவன்.

(க - ரை) சிறியோர் செய்த சிறுபிழையைப் பெரியோர் பொறுப்பது கடன்.

(வி - ரை) ஏகாரங்கள் அசைநிலைகள். தப்புமவனும் என்பதில் உம்மை விகாரத்தால் தொக்கது. உம்மைகள் இரண்டும் எண்ணுப்பொருளன? முதல், இரண்டு தான்கள், ஒருவன்தான் என்னும் பொருளன. மூன்றாந்தான் தேற்றப்பொருளது, அல்லது பிரிநிலை யெனவும் ஆம். அயோக்கியனிடத்தில் அகப்பட்ட யோக்கியன், அவனுக்குத் தக்கபடி சமயோசிதமாய்ப் பேசித் தப்ப வேண்டும் என்பது பொருள்.

35. சிற்றுணர்வோ ரென்றுஞ் சிலுசிலுப்ப ரான்றமைந்த
முற்றுணர்வோ ரொன்று மொழியாரே—வெற்றிபெறும்
வெண்கலத்தி னோசை மிகுமே விரிபசும்பொன்
ஒண்கலத்தி னுண்டோ வொலி.

(ப - ரை) வெற்றி பெறும் வெண்கலத்தின் ஓசை மிகும்- உயர்ந்த வெண்கலத்தின் ஒலி அதிகமாகும்; விரி பசுமை பொன் ஒண்மை கலத்தின் ஒலி உண்டோ - மாற்றுயர்ந்த பொன்னாற் செய்த அழகான பாத்திரத்தில் அதிக ஓசை உண்டோ?, (அது போல) சிறுமை உணர்வோர் என்றும் சிலுசிலுப்பர் - கொஞ்சம் அறிவுடையோர் என்றும் அளவு கடந்து பேசுவார்; ஆன்று அமைந்த முற்று உணர்வோர் ஒன்றும் மொழியார் - (கல்வி கேள்விகள்) நிறைந்து அடங்கிய பேரறிவுடையோர் ஒன்றும் அளவு கடந்து பேசார்.

(க - ரை) முற்றுணர்ந்தோர் அளவு கடந்து பேசார்.

(வி - ரை) ஏகாரங்கள் அசைநிலைகள். ஓகாரம் உடன்பாட்டு வினா, இல்லை என்னும் எதிர்மறைவிடை தருவது காண்க.

"வார்த்தையெலாம் வங்கமென்றும் மௌனமெலாந்தங்கமென்றும்
சீர்த்திமிகும் பெரியோர் செப்புவரோ—ஆர்த்தியுடன்
காக்க பொருளா அடக்கத்தை ஆக்க
மதனினூஉங் கில்லை உயிர்க்கு."

என்னும் திருக்குறள் நீதிவெண்பா இங்கே கவனிக்கத் தக்கது.

36. உள்ளபொழு தேதது முவந்தளிப்ப தல்லாலோர்
எள்ளளவு மீய விசையுமோ—தெள்ளுதமிழ்ச்
சீரளித்தோ னுண்டநாட் சேர்மேகத் துக்கருந்த
நீரளித்த தோமுந்நீர் நின்று.

(ப - ரை) தெள்ளு தமிழ் சீர் அளித்தோன் - தெளிந்த தமிழுக்குச் சிறப்பைக் கொடுத்தவராகிய அகத்திய முனிவர், உண்ட நாள் - (உளுந்தளவாக்கி) உண்ட காலத்தில், சேர் மேகத்துக்கு - தன்னைச் சேர்ந்த மேகத்துக்கு, அருந்த - உண்ணும்படி, முந்நீர் - கடலானது, நின்று நீரளித்ததோ - (வற்றாமல்) இருந்து நீரைக் கொடுத்ததோ?, (அதுபோல) உள்ளபொழுது ஏதும் உவந்து அளிப்பது அல்லால் - (ஒருவர்க்குக்) கைப்பொருள் உள்ள போது எதையும் மனம் ஒப்பிக் கொடுக்க முடியும் அல்லாமல், (அது இல்லாதபோது) ஓர் எள் அளவும் ஈய இசையுமோ - எள்ளத் தனையும் (பிறர்க்குக்) கொடுக்க முடியுமோ?

(க - ரை) கைப்பொரு ளுள்ளபோதே தான தருமஞ் செய்யவேண்டும்.

(வி - ரை) ஓகாரம் இரண்டும் உடன்பாட்டு வினாக்கள், இசையாது, அளிக்கவில்லை என எதிர்மறை விடைகள் தந்தமை காண்க. அகத்தியர் ஒரு காலத்தில், கடலில் ஒளித்த அசுரரை வெளிப்படுத்தும் பொருட்டு அதன் ஜலத்தைத் தமது தவ வலிமையால், ஓர்

உளுந்தளவாக்கி உண்டமை இங்குக் குறிக்கப்பட்டது. அவர் உண்டதனால் வற்றி யிருந்த கடல் அப்போது மேகத்துக்கு நீர் அளிக்க மாட்டாமல் இருந்ததுபோல, கைப்பொருள் அற்றால் ஒருவன் பிறர்க்கு ஈய இயலாது. ஆகையால், "காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்" என்றபடி கைப்பொருள் உள்ளபோதே பிறர்க்கு உதவி செய்யவேண்டும் என்பது இதனால் பெறப்பட்டது. அகத்தியர் தென்றமிழ்ச் சீரளித்தமை, அதனை அவர் இலக்கணஞ் செய்து வளர்த்தமை என்க.

37. பேதையரைக் கண்டாற் பெரியோர் வழிவிலகி
நீதியொடு போத னெறியன்றோ—காதுமத
மாகரத்த யானை வழிவிலகல் புன்மலந்தின்
சூகரத்துக் கஞ்சியோ சொல்.

(ப-ரை) காதும் மத மா கரத்த யானை வழி விலகல்-கோபிக்கும் இயல்பையும் மதம் பொழிதலையும் நீண்ட துதிக்கையையும் உடைய யானையானது வழி விலகிப்போதல், புன்மை மலம் தின் சூகரத்துக்கு அஞ்சியோ-இழிந்த மலத்தைத் தின்னும் பன்றிக்குப் பயந்தோ?, சொல் - நீ சொல்வாயாக!, (அதுபோல) பெரியோர் பேதையரை கண்டால் - நிறைந்த அறிஞர் (அறிவை நிரம்பா) மூடரைக் கண்டால், வழி விலகி நீதியொடு போதல் நெறி அன்றோ - ஒதுங்கி ஒழுக்கத்தோடு செல்லுதல் முறைமையல்லவா?

(க - ரை) அறிஞர் மூடர்களைக் கண்டால், அப்பால் அகல வேண்டும்.

(வி - ரை) ஓகாரங்களில் முன்னையது எதிர்மறை வினா, ஆம் என்னும் உடன்பாட்டு விடையையும்; பின்னையது உடன்பாட்டு வினா, அல்ல என்னும் எதிர்மறை விடையையும் தருவது காண்க. பன்றியை வழி யெதிரிற் கண்ட யானை ஒருவித அருவரு

ப்பால் விலகிப்போதல் இயற்கை. அதுவே இங்குக் குறிக்கப்பட்டது. பெரியோரும் இப்படியே பேதையரை அஞ்சியல்ல, அருவருத்துஅப்பால் அகலவேண்டும் என்பது இதனுற்பெறப்பட்டது.

38. மந்திரமுந் தேவு மருந்துங் குருவருளுந்
தந்திரமு ஞானந் தருமுறையும்—யந்திரமும்
மெய்யென்னில் மெய்யாய விளங்குமே மேதினியிற்
பொய்யென்னிற் பொய்யாகிப் போம்.

(ப - ரை) மேதினியில் மந்திரமும் தேவும் மருந்தும் குரு அருளும் தந்திரமும் ஞானம் தரும் முறையும் யந்திரமும் - இந்தப் பூலோகத்தில் மந்திரங்களும் கடவுளும் மருந்துகளும் ஆசார்யருடைய கிருபையும் சாஸ்திரங்களும் ஞானகுரு உபதேசமும் சக்கரத் தாபனங்களும், மெய் என்னில் மெய் ஆய் விளங்கும் - உண்மை என்று நம்பினுல் உண்மையாகத் தோன்றும்; பொய் என்னில் பொய் ஆகிப்போம் - இன்மை என்று நினைத்து நம்பாவிட்டால் இன்மையாகிப் போய்விடும்.

(க - ரை) மந்திர முதலியவைகள் நம்பினேர்க்கு உண்டு; நம்பாதவர்க்கு இல்லை.

(வி - ரை) "நம்மி செடினவாரு லேரு, நம்மக்கபோத்தே பொய்யேரு" என்கிற ஆந்திர முதுமொழியும் இங்கே கவனிக்கப்படவேண்டும். "தெய்வமுண தென்பாரைத் தெய்வந் தண்டிக்கும், இலதென்பார்க்கில்லை" என்கிற நீதிநெறிவிளக்கப்பாடலின் கருத்து இங்கே பொருந்துவது காண்க. "Belief is relief" என்கிற ஆங்கில முதுமொழியும் பொருந்தும். ஏகாரம் அசைநிலை.

39. ஈசனெதிர் நின்றாலு மீசனருள் பெற்றுயர்ந்த
நேசரெதிர் நிற்ப தரிதாமே—தேசுவளர்

செங்கதிர்முன் னின்றாலுஞ் செங்கதிர வன்கிரணந்
தங்குமணு னிற்கரிதே தான்.

(ப - ரை) தேசு வளர் செம்மை கதிர் முன் நின்றாலும் - ஒளி மிகும் செங்கிரணங்களுடைய சூரியனுக் கெதிரில் (வெய்யிலில்) நின்றாலும், செம்மை கதிரவன் கிரணம் தங்கும் மணல் நிற்க அரிது - அந்தச் செங்கிரணங்களையுடைய சூர்யோஷ்ணம் பட்டு (சூடேறின) மணலில் நிற்க முடியாது; (அதுபோல) ஈசன் எதிர் நின்றாலும் - சிவபெருமானுக் கெதிரே (பகைத்து) நின்றாலும், ஈசன் அருள் பெற்று உயர்ந்த நேசர் எதிர் நிற்பது அரிது ஆம் - சிவபெருமானுடைய அருளைப் பெற்ற அடியார் எதிரே (பகைத்து நிற்றல்) முடியாதாம்.

(க - ரை) சிவன் பகையினும் அவன் அடியார் பகையே சகித்தற் கரியதாம்.

(வி-ரை) ஏகாரங்களும் தானும் அசைநிலைகள். ஈசனெதிர் பகைத்து நின்றமைக்கு நக்கீரனே சான்று. சிவனைப் பகைத்து நின்ற நக்கீரன் தண்டனை யடைந்தான்; ஆனாலும் முடிவில் திருவருள்பெற் றுய்ந்தான்; ஈச னடியவராகிய அகத்திய முனிவரைப் பகைத்து நின்ற வில்வலன் வாதாவியர் அடியோடு அழிந்ததுபோனமையால் 'நேசரெதிர் நிற்பதரிதாம்' என்றார். வாதாவி ஆட்டுக்கறியாய் அகத்தியர் வயிற்றிற் புகுந்து, அவரைக் கொல்ல முயன்றும், ஈசனருள் பெற்ற அம் முனிவர் "வாதாபி ஜீரண" என்று தமது வயிற்றைத் தடவின மாத்திரையில் அவன் ஜீரணமாய் மாண்டான். அவனைக் கறி சமைத்து அவர்க்கிட்ட வில்வலனும் பிறகு அவரால் அழிந்தான்.

40. முற்று மிறைசெயலே முற்றிடினுந் தன்னருளைப்
பெற்றவர்தம் பாலே பெரிதாகும்—பற்றுபெருந்

தாபத் திடத்தே தழன்றிடினு நற்சோதி
தீபத் திடத்தே சிறப்பு.

(ப - ரை) நன்மை சோதி பற்று பெருமை தாபத்திடத்து தழன்றிடினும்—நல்ல ஒளியானது எரிகின்ற பெருங் காட்டுத் தீயிடத்தில் வீசினாலும், தீபத்து இடத்தே சிறப்பு-தீபத்தினிடத்தி லேயே சிறப்படையும்; (அதுபோல) முற்றும் இறை செயலே முற்றிடினும் - முழுவதும் பரமசிவன் செயலே நிறைந்திருந்தா லும், தன் அருளை பெற்றவர் தப்பால் பெரிது ஆகும் - (அது) அவனருளைப் பெற்ற அடியாரிடத்தில் அதிகமாய்த் தோன்றும்.

(க - ரை) அரன் அருள் அடியாரிடத்தில் அதிகமாய் விளங் கும்.

(வி-ரை) முதல் ஏகாரம் தேற்றம், இரண்டாவது பிரிநிலை, மூன்றாவது அசைநிலை, நான்காவது பிரிநிலை. 'தாபம்' எங்கு நிறைந்த சிவனருளுக்கும், 'தீபம்' அவ்வருள் பெருகி நிற்கும் அடியார்க்கும் உபமானங்க ளாயினமை காண்க.

41. கன்னியரைப் பொன்னாண் கழிந்தோரை மற்றயலார்
பன்னியரை மாயப் பரத்தையரை—முன்னரிய
தாதியரை நல்லோர் தழுவநினை யார்நரகத்
தீதுவரு மென்றே தெரிந்து.

(ப - ரை) நல்லோர் நரகம் தீது வரும் என்று தெரிந்து ஏ - அறிவுடையோர் நரகத் துன்பம் வருமென்று (முன்னதாகத்) தெரிந்துகொண்டதனாலேயே, கன்னியரை - (கலியாண மாகாத) கன்னிகைகளையும், பொன் நாண் கழிந்தோரை - பொன்னாற் செய்த மங்கலியம் இழந்த கைம்பெண்களேயும், அயலார் பன்னிய ரை - பிறர் மனைவியரையும், மாயம் பரத்தையரை - வஞ்சகம்

நிறைந்த வேசியரையும், முன்ன அரிய தாதியரை - இச்சிக்கத் தகாத பணிப் பெண்களையும், தழுவ நினையார்—சேர நினையார்கள்.

(க - ரை) தன் மனைப் புகுதலே சிறந்த தருமமாம்.

(வி - ரை) மற்று-அசைநிலை. கணவனைப் பெறாத கன்னியரையும், கணவனைப்பெற் றிழந்த விதவைகளையும், கணவனைப் பெற்றுள்ள மங்கலியப் பெண்களையும் சேர நினையார் என்றதனானே தன் மனைவியன்றி வேறு எந்நிலையிலுள்ள குலப் பெண்ணிடத்தும் அறிவுடையோர் சேரார் என்பதூஉம், 'மாயப் பரத்தையரை' என்றதனால் விலைப் பெண்ணையும் அவள் மாய்மாலத்துக் கஞ்சி அறநீக்கவேண்டு மென்பதூஉம், இவை இரண்டும் அல்லாத பணிப் பெண் முயக்கம் இழிவு தரும் என்பது கருதி 'முன்னரிய தாதியரை' என்றோதினார் என்பதூஉம் கொள்ளக்கிடப்பன காண்க. "பிறன்மனைப் புகாமை அறமெனத் தகும்" என்றபடி தன் மனைப் புகுதலே அறம் ஆகையால், எந்நாளும் ஏகபத்னி விரதமே சால் புடைத்தாம் என்பது இதனால் பெறப்பட்டது.

42. தன்னை யளித்தா டமையன் மனைகுருவின்
பன்னி யரசன் பயிறேவி—தன்மனையைப்
பெற்றா ளிவரைவர் பேசி லெவருக்கும்
நற்றாய ரென்றே நவில்.

(ப - ரை) பேசில் தன்னை அளித்தாள் தமையன் மனை குருவின் பன்னி அரசன் பயில் தேவி தன் மனையை பெற்றாள் - சொன்னால் தன்னைப் பெற்றவளும் தன் தமையன் மனைவியும் குரு பத்தினியும் அரசன் மனைவியும் தன் மனைவியைப் பெற்ற மாமியும், இவர் ஐவர் எவருக்கும் நன்மை தாயர்-(ஆகிய) இவர்கள் ஐவரும் யார்க்கும் பெற்ற தாய்மார், என்றே நவில் - என்று சொல்வாயாக.

(க - ரை) அண்ணி, குருபத்தினி முதலியோரைப் பெற்ற தாயர்களாகப் பாவித்தல்வேண்டும்.

(வி - ரை) தன்னைப் பெற்றவள்தான் தாய், வேறு தாய் இல்லை யென்பார்க்கு இஃது நன்மதி ஊட்டுகின்றது. ஏகாரம் தேற்றம். தன்னைப் பெற்றவளைப்போலவே மற்ற நால்வரையும் சேர்த்து ஐந்து தாய்மார்களாகக் கொள்ளவேண்டு என்பது இத ஞல் பெறப்பட்டது.

43. வாவியுறை நீரும் வடநிழலும் பாவகமும்
ஏவனைய கண்ணா ரிளமார்பும்—ஓவியமே!
மென்சீத காலத்து வெம்மைதரும் வெம்மைதனில்
இன்பாருஞ் சீதளமா மே.

(ப - ரை) ஓவியமே - சித்திரப்பாவை போன்றவளே!, வாவி உறை நீரும் - தடாகத்திலுள்ள ஜலமும், வடநிழலும் - ஆலமர நிழலும், பாவு அகமும் - பாவுகல் போட்ட வீடும், ஏ அனைய கண்ணார் - அம்புபோலும் கண்களையுடைய பெண்களின், இளமை மார்பும் - இளமையாகிய தனமும், மென்மை சீதம் காலத்து - மிருதுவான குளிர்காலத்தில், வெம்மை தரும் - வெப்பத்தைக் கொடுக்கும்; வெம்மை தன்னில் - வேனிற் காலத்தில், இன்பு ஆரும் சீதளம் ஆம் - இன்பமாகிய குளிர்ச்சியைக் கொடுக்கும்.

(க - ரை) தடாகநீர் முதலியவைகள் குளிர்காலத்தில் வெப்பமாகவும், வேனிற் காலத்தில் குளிர்ச்சியாகவும் இருக்கும்.

(வி - ரை) வாவிநீர் முதலியவைகள் குளிர்காலத்தில் வெம்மையும் வேனிலில் தண்மையுந் தருவன என்பது அனுபவ சித்தம். உம்மைகள் எண்ணுப் பொருளன. ஏ - அசைநிலை.

44. உற்றதொழில் செய்வோர்க் குறுபஞ்ச மில்லையாம்
பற்றுசெபத் தோர்க்கில்லை பாவங்கள்—முற்றும்
மவுனத்தோர்க் கில்லை வருகலகந் துஞ்சாப்
பவனத்தோர்க் கில்லை பயம்.

(ப - ரை) உற்ற தொழில் செய்வோர்க்கு - தமக்குத் தகுந்த தொழில் செய்பவர்களுக்கு, உறு பஞ்சம் இல்லை ஆம் - நேரிடும் தரித்திரம் இல்லையாகும்; பற்று செபத்தோர்க்கு பாவங்கள் இல்லை - (மனத்தில்) பொருந்திய ஜெபத்தைச் செய்பவர்களுக்குப் பாவங்கள் இல்லை; முற்றும் மவுனத்தோர்க்கு வரு கலகம் இல்லை-முழுவதும் மோன விரதம் பூண்டவர்களுக்கு நேரிடும் கலகம் இல்லை; துஞ்சாத பவனத்தோர்க்கு பயம் இல்லை - கண்ணுறங்காத தேவலோக வாசிகளுக்குப் பயம் இல்லை.

(க - ரை) உழைப்பவனுக்குத் தரித்திரமும், ஜெபஞ் செய்பவனுக்குப் பாவமும், மௌனிக்குக் கலகமும், தேவர்களுக்குப் பயமும் இல்லையாம்.

(வி - ரை) உழைப்பவன், பிழைப்பவன் என்றபடி தொழில் செய்பவன் செல்வனும். நாவில் விடாமல் மந்திர ஜெபஞ் செய்பவனுக்குப் பாவஞ் செய்ய வழி யில்லை. "மௌனங் கலக நாஸ்தி" என்றபடி மவுனத்துக்குக் கலக மில்லை யென்க. தேவர்கள் பிணி மூப்புச் சாக்கா டற்றவர்கள் ஆதலான், அவர்களுக்குப் பிறப்பிறப்புப் பய மில்லை என்க.

45. ஆப்த்து வந்தா லரும்பொருடான் வேண்டுமே
ஆபத்தேன் பூமா தருகிருந்தால்—ஆபத்து
வந்தா லவுரு மருவாம லெப்பொருளும்
அந்தோ வுடன்போ மறி.

(ப - ரை) ஆபத்து வந்தால் அருமை பொருள் வேண்டும் (ஒருவனுக்குத்) துன்பம் வந்தால்(அதை நீக்கிக்கொள்ள) அருமையாகிய பொருள் வேண்டும்; பூமாது அருகு இருந்தால் ஆபத்து என்-ஸ்ரீதேவி சேர்ந்திருந்தால்(ஒருவனுக்குத்)துன்பம் என் வரும்? (வராது); ஆபத்து வந்தால் அவளும் மருவாமல் - அப்படி அது வந்தால் அந்தச் ஸ்ரீதேவியும் சேராமல், அந்தோ-ஐயோ!, எ பொருளும் உடன் போகும் அறி - (அவள் போகும்போது) எல்லாப் பொருளும் அவளோடு கூடவே போய்விடும் என்று அறியக்கடவாய்.

(க-ரை) ஒருவனுக்கு நல்ல காலம் வந்தால் செல்வம் தானாகவே சேரும்; கெட்ட காலம் வந்தால் அது எப்படியோ போய்விடும்.

(வி - ரை) ஆபத்தை நீக்கிக்கொள்ளப் பொருள் வேண்டும் என்பதும், செல்வஞ் சிறந்திருந்தால் ஆபத்து வாராதென்பதும் அனுபவ சித்தம்.

„தேங்கய்க்கு நீர்போற் சிறிதுசிறி தாய்ச்சேரும்
ஆங்கால மாங்கால் அனைவருக்கும்—ஆங்காலும்
வேழம் புசித்த விளங்கனிபோற் போகுமே
தாழுங்கால் செல்வந் தணந்து.''

என்ற ஆந்திர நீதி சாத்திரப்படி செல்வம் போங்கால் யாவரும் அதிசயிக்கும்படி எல்லாம் அடியோடு போய்விடும் என்பது மேலோர் துணியும் அனுபவமுமாம்.

46. இன்ன றரும்பொருளை யீட்டுதலும் துன்பமே
பின்னதனைப் பேணுதலுந் துன்பமே—அன்ன
தழித்தலுந் துன்பமே யந்தோ பிறர்பால்
இழத்தலுந் துன்பமே யாம்.

(ப-ரை) இன்னல் தரும் பொருளை - துன்பகாரணமான பொருளை, ஈட்டுதலும் துன்பமே-தேடும்போதும் துன்பந்தான்; பின் அதனை பேணுதலும் துன்பமே-பிறகு அதைக் காப்பாற்றும் போதும் துன்பந்தான்; அன்னது அழித்தலும் துன்பமே-அதைச் செலவழிக்கும்போதும் துன்பந்தான்; அந்தோ-ஐயோ, பிறர்பால் இழத்தலும் துன்பமே ஆம் - அதைப் பிறரிடத்துக் கொடுத்துப் போக்கடித்துக்கொள்ளுதலும் துன்பந்தான் ஆகும்.

(க-ரை) பொருளால் எப்போதும் துன்பமே உண்டாகும்.

(வி-ரை) ஏகாரங்கள் தேற்றப்பொருளன. 'இன்னல் தரும் பொருள்' என்றதனால், கல்விப்பொரு ளல்லாத செல்வப்பொருள் என்பதாயிற்று. பொருளைச் சம்பாதிக்கையில் அவரவர் படும் பாடு பெரும்பாடு என்பது அனுபவசித்தம். அதைக் கள்ளர் முதலியோர்க்குப் பறி கொடாமல் பாதுகாக்குங் கஷ்டமும் அனுபவசித்தம்; செலவழிக்குங் காலத்தில் தாராதர மறிந்து செலவழிக்காததனால் வருங்கேடு பெருங்கேடு என்பதனால் 'அன்ன தழித்தலுந் துன்பம்' என்றார். 'அந்தோ பிறர்பால் இழத்தலுந் துன்பம்'என்பதற்குக் கள்ளர் முதலியோர்க்குப் பறிகொடுத்து மோசம் போதலும் அதனால் அனுபவிக்குந் துன்பமும் என்பதும் கூட்டிக் கொள்க. 'அந்தோ' என்றதனால்,

"செந்தேன் தினம்வருந்திச் சேர்த்துண்ணா தேனீதான்
அந்தோ இழக்குமது வத்தனையும்—சந்ததமும்
ஈத்துவக்கு மின்பம் அறியார்கொல் தாமுடைமை
வைத்திழக்கும் வன்க ணவர்."

என்ற திருக்குறள் நீதிவெண்பாப்படி தாமும் உண்ணாமல் பிறர்க்கும் கொடாமல் சேர்த்துவைத் திழக்கும் பிசினர்களை நோக்கி இரங்கியதாகும்.

47. தானே புரிவினையாற் சாரு மிருபயனுந்
தானே யனுபவித்த றப்பாது—தானூறு
கோடிகற்பஞ் சென்றாலுங் கோதையே! செய்தவினை
நாடிநிற்கு மென்றார் நயந்து.

(ப - ரை) கோதையே - பெண்ணே!, தான் புரி வினையால் ஏ - (ஒருவன்) செய்த நல்வினை தீவினைகளாலே, இரண்டு பயனும் சாரும் - அவனுக்கு இன்ப துன்பங்களாகிய இரண்டு பலன்களும் உண்டாகும்; தானே அனுபவித்தல் தப்பாது - (அவைகளை அவன்) தானே அனுபவித்துத் தீர்தல் தவறாது; நூறு கோடி கற்பங்கள் சென்றாலும் - நூறுகோடி கற்பகாலங்கள் கழிந்தாலும், செய்த வினை நாடி நிற்கும் நயந்து என்றார் - ஒருவன் செய்த வினை அவனை எதிர்பார்த்திருக்கு மென்று பெரியோர்கள் விரும்பிச் சொன்னார்கள்.

(க - ரை) எத்தனை நாள் ஆனாலும் ஒருவன் தான் செய்த நல்வினை தீவினைகளின் பலன்களை அனுபவித்தே தீரவேண்டும்.

(வி - ரை) மூன்றாவது தான் அசைநிலை. ஏகாரம் அசை. இரண்டாம் ஏகாரம் பிரிநிலை. மந்தையில் தாய்ப் பசுவைக் கண்டு செல்லுங் கன்றைப்போல், அவனவன் செய்த வினை அவனவனைத் தப்பாது கண்டுபிடிக்கும் என்பது தோன்ற 'செய்தவினை நாடிநிற்கும்' என்றார்.

48. தூய வறிவினர்முன் சூழ்துன்ப மில்லையாங்
காயும் விடங்கருடற் கில்லையாம்—ஆயுங்காற்
பன்முகஞ்சேர் தீமுன் பயில்சீத மில்லையாந்
துன்முகனுக் குண்டோ சுகம்.

(ப - ரை) ஆயுங்கால் - ஆலோசிக்குமிடத்தில், காயும் விடம் கருடற்கு இல்லை ஆம்-கொல்லும் விஷம் கருடனுக்குத் (துன்பங்

தருவது) இல்லையாகும்; (அதுபோல) தூய அறிவினர் முன் - நல்ல ஞானிகளுக்கு எதிரில், சூழ் துன்பம் இல்லை ஆம் - சூழ்ந்து வருகின்ற துன்பங்கள் இல்லையாகும்; பன்மை முகம் சேர் தீ முன் - (ஒன்றுக் கதிகமாய்) எழு நாக்குகளையுடைய எரி முன், பயில் சீதம் இல்லையாம் - பொருந்திய குளிர்ச்சி இல்லையாகும்; (அது போல) துன்மை முகனுக்கு சுகம் உண்டோ - துஷ்டனுக்குச் சுகம் உண்டோ?

(க - ரை) ஞானிகளுக்குத் துன்பமும் மூடர்களுக்கு இன்பமும் இல்லை.

(வி - ரை) 'முன்' என்பதை ஏழாம் உருபாக்கி 'இடத்தில்' என்றும் பொருளுரைக்கலாம். சூழ் துன்பம் - வினைத்தொகை. 'காயும்' என்பதற்குச் 'சுடும்' என்றும் சொல்லலாம். 'முகம்' என்பது இடவாகுபெயராய் நாவை உணர்த்திற்று. பயில் சீதம்-வினைத் தொகை. துன்முகன் - துன்மையைப் பிரதானமாய்ச் செய்பவன். 'உண்டோ' என்பதில் உடன்பாட்டு ஓகார வினா இல்லை என்னும் எதிர்மறை விடை தருவது காண்க.

49. தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்க லென்றிவரோ
டின்புறத்தா னுண்ட லினிதாமே—அன்புறவே
தக்கவரை இன்றித் தனித்துண்ட லுன்கவர்மீன்
கொக்கருந்த லென்றே குறி.

(ப - ரை) தென்புலத்தார் - பிதிர்களும், தெய்வம் - கடவுளும், விருந்து - விருந்தினர்களும், ஒக்கல் - சுற்றத்தாரும், என்று இவரோடு - என்கிற இவர்களுக்குக் கொடுப்பதோடு, தான் இன்பு உற உண்டல் இனிது ஆம் - தானும் சுகமாய் உண்ணுதலே நல்லதாம்; அன்பு உற தக்கவரை இன்றி தனித்து உண்டல் - அன்பு பொருந்தத்தக்க ஒருவருடன் இல்லாமல் தானே ஒன்றி

யாய்ப் புசித்தல், கொக்கு தான் கவர் மீன் - கொக்கானது தான் பிடித்த மீனை, அருந்தல் என்று கூறி - (தானே தனித்து) உண்டல்போல் ஆகும் என்று எண்ணக்கடவாய்.

(க - ரை) ஒருவன் தன் சம்பாதனையைத் தென்புலத்தார் முதலியோர்க்குப் பங்கிட்டு உண்ணவேண்டு மென்பதாம்.

(வி-ரை) "தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்க றுனென்றாங்
கைம்புலத்தா றோம்ப றலை."

என்னுந் திருக்குறள் இங்கே பொருந்துவது காண்க. தென்புலத்தாரும் தெய்வமும் உடன் உண்ணல் இயலாமையால் ஒருவன் தான் உண்ணும்போ தெல்லாம் தக்க விருந்து அல்லது சுற்றத்தோடு உண்ணவேண்டும் என்பது தோன்ற, 'தக்கவரை இனறித் தனித்துண்டல் தான்கவர்மீன் கொக்கருந்தல்' என்றார். கொக்கை உவமானமாகக் கொண்டது, ஒக்கலோ டுண்ணுங் காக்கைக்கு, அது நேர் விரோதமாகத் தனித் துண்ணும் இழிகுண முடைமையா லென்க. முதல் ஏகாரம் பிரிநிலை; இரண்டாவது அசைநிலை; மூன்றாவது பிரிநிலை. பிதிரர் தெற்குத் திசையாகிய யம திசையில் இருப்பவர்கள் என்பதனால் 'தென்புலத்தார்' என்றார்.

50. இந்திரவி நீள்கிரண மெங்கு நிறைந்தாலும்
இந்திரவி காந்தத் திலகுமே—இந்திரவி
நேத்திரத்தோ னெங்கு நிறைந்தாலு நித்தனருள்
நேத்திரத்தோர் பாலே நிறைவு.

(ப - ரை) இந்து இரவி நீள் கிரணம் - சந்திர சூரிய கிரணங்கள், எங்கும் நிறைந்தாலும் - (உலகில்) எங்கும் நிறைந்திருந்தாலும், இந்து (காந்தத்து) இரவி காந்தத்து இலகும் - சந்திரகாந்தக் கல்லிலும் சூரியகாந்தக் கல்லிலும் விளங்கும்; (அத்தன்மைபோல) இந்து இரவி நேத்திரத்தோன் - சந்திர சூரியர்களைக் கண்களாக

உடையவராகிய சிவபிரான், எங்கும் நிறைந்தாலும்-எங்கும் உள்ள வரா யிருந்தாலும், (அந்) நித்தன் நிறைவு - அந் நித்தியருடைய விளக்கம், அருள் நேத்திரத்தோர்பாலே நிறை-கிருபா நேத்திரர்க ளாகிய உத்தம ஞானிகளிடத்திலேயே ஆம்.

(க - ரை) சிவபிரான் எங்கும் நிறைந்திருந்தாலும் ஞானிகள் மூலமாய் வெளிப்பட்டு விளங்குவார்.

(வி - ரை) முதல் ஏகாரம் அசைநிலை; இரண்டாவது பிரி நிலை. இதுபற்றியே பிற ஆன்றோரும் "பசுப்பால் அதன் உடன் முழுதும் வியாபித்திருந்தும் மடியில் வெளிப்படுமாறுபோல" என்றார். அருள் நேத்திரத்தார்-அந்தணர்; அழகிய தன்மை, குளிர்ந்த இரக்கம், ஜீவகாருண்யம், கண்ணோட்டம் உடையவர்கள் என்று கொள்க. எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகலால் 'அருள் நேத்திரத்தார்' எனப்பட்டார்.

51. தாமோ தரன்முதலோர் சாதனூல் சாற்றுவதும்
பூமேலோர் பொன்றுவதுங் கண்டோமே—நாமுடலை
நேசிப்ப தென்னோ நிலையாகுஞ் சங்கரனைப்
பூசிப்ப தென்றே புகல்.

(ப - ரை) தாமோதரன் முதலோர் சாதல் - விஷ்ணுவாதி தேவர்கள் அழிவதை, நூல் சாற்றுவதும் - சாத்திரங்கள் சொல்லுவதும், பூ மேலோர் பொன்றுவதும்-பூமியிலுள்ள மாந்தர் மரிப்பதும், கண்டோம் ஏ - (முறையே கேட்டும் கண்டும்) அறிந்தோம் அல்லவா?, (அறிந்தும்) நாம் உடலை நேசிப்பது என்னோ - நாம் நமது உடம்பை (நிலை என்று விரும்பிப்) போற்றுவது என்ன காரணம்?, சங்கரனை பூசிப்பது ஏ-சிவபெருமானை (அன்பாய்ப்) பூசிப்பதே, நிலை ஆகும் என்று புகல் - நிலையாகு மென்று சொல்வாயாக.

(க - ரை) உடல் நிலையல்ல. ஆகையால், அதை நேசிப்பதை விட்டு, நிலையான சங்கரனைப் பூசிக்கவேண்டும்.

(வி - ரை) ஏகாரம் வினா; ஓகாரம் வினா; ஏகாரம் தேற்றம்.

"கோடிவிதி மாளில் குலாவுகம லக்கண்ணன்
ஓடி வடவா லுறங்குமே—நாடுங்கால்
அக்கண்ணர் கோடி அழியி னருணகிரி
நக்கனருள் சற்றே நகும்."

என்ற அருணகிரியந்தாதிச் செய்யுள் இங்கே அமைவது காண்க. பூமேலோர் பொன்றுவதற்கு,

"உறங்குவது போலும் சாக்கா டுறங்கி
விழிப்பது போலும் பிறப்பு."

என்றார் செந்நாப்போதார்.

"பூக்கைக் கொண்டரன் பொன்னடி போற்றிலார்
நாக்கைக் கொண்டரன் நாம நவில்கிலார்
ஆக்கைக் கேஇரை தேடி அலமந்து
காக்கைக் கேஇரை யாகிக் கழிவரே."

என்ற தேவாரம் சிவபூசா விசேஷத்தை விளக்குகிறது.

52. அரசி னிலையதனி னக்கிரத்தி னின்று
விரைய விழுதுளியே போலும்—புரையுடைய
ஆக்கைவிடா முன்ன மரன்பாதம் பூசித்தல்
நோக்கனன் றென்றே நுவல்.

(ப - ரை) அரசின் இலை அதனின் அக்கிரத்தின் நின்று - அரசிலையின் நுனியிலிருந்து, விரைய விழு துளியே போலும்-அதி வேகமாக விழுகின்ற நீர்த்துளிக்குச் சமானமான, புரை உடைய

ஆக்கை விடா முன்னம்-(நிலையற்றதென்னும்) குற்றத்தையுடைய சரீரம் (உயிரை) விட்டுவிடாத முன்பு, அரன் பாதம் பூசித்தல் நோக்கல் நன்று என்று புகல் - சிவன்பாதம் பூசித்தலும் தரிசித்தலுமே நல்லதென்று சொல்.

(க-ரை) அரன் பாதம் பூசிக்க வலியில்லார் தரிசித்தலேனுஞ் செய்யவேண்டும்.

(வி - ரை) ஏகாரங்கள் தேற்றப் பொருளன. அரசிலையின் நுனி நீர்த்துளி பளுவால் அதிவேசமாய் விழுவதுபோல, உடலினுயிர் விரைவி லழியும் என்று கொள்க பூசித்தலும் தரிசித்தலும் ஒரே காலத்தில் நிகழ்வன ஆயினும், பூசிக்க இயலார், அங்ஙனம் பிறர் பூசித்த பிறகேனும் சிவனைத் தரிசித்த லாயினும் செய்க என்பார் 'பூசித்தல் நோக்கல்' என்றார்.

53. சத்தியத்தை வெல்லா தசத்தியந்தா னீள்பொறையை
மெத்திய கோபமது வெல்லாது—பத்திமிகு
புண்ணியத்தைப் பாவமது வெல்லாது போரரக்கர்
கண்ணனைத்தான் வெல்லுவரோ காண்.

(ப - ரை) போர் அரக்கர் கண்ணனை வெல்லுவரோ-சண்டை செய்யும் ராக்ஷதர்கள் விஷ்ணுவை வெல்லுவார்களோ?, (அது போல) அசத்தியம் சத்தியத்தை வெல்லாது - பொய் மெய்யை வெல்லாது; மெத்திய கோபம் (அது)நீள் பொறையை வெல்லாது-மிகுந்த கோபம் சிறந்த பொறுமையை வெல்லாது; பாவம் (அது) பத்தி மிகு புண்ணியத்தை வெல்லாது-பாவமானது அன்பு மிகுந்த புண்ணியத்தை வெல்லாது; காண் - இதை நீ அறிந்துகொள்ளக் கடவாய்.

(க - ரை) பொய் மெய்யையும், கோபம் சாந்தத்தையும், பாவம் புண்ணியத்தையும் வெல்லமாட்டா.

(வி-ரை) 'வெல்லுவரோ' என்னும் உடன்பாட்டு வினா ஓகாரம் வெல்லமாட்டார் என்னும் எதிர்மறை விடை தருவது காண்க. 'கோபமது' 'பாவமது' என்பவைகளில் அது எழுவாயுருபு. இச் செய்யுளில் மூன்று விஷயங்களும் விசுவாமித்திரர் அரிச்சந்திரர் பால் நிகழ்ந்தவைகளால் நன்கு விளங்கும். தான்கள் - அசை நிலைகள்.

54. பொற்பறிவில் லாதபல புத்திரரைப் பேறலினோர்
நற்புதல்வ னைப்பெறுத னன்றாமே—பொற்கொடியே!
பன்றிபல குட்டி பயந்ததினா லேதுபயன்
ஒன்றமையா தோகரிக்கன் றோது.

(ப - ரை) பொன் கொடியே - பொன்போலும் அழகிய கொடிபோல்வாளே!, பன்றி பல குட்டி பயந்ததனால் பயன் எது - பன்றி பல குட்டிபோட்டுப் பிரயோசன மென்ன?, கரிகன்று ஒன்று அமையாதோ - யானைக்கன்று ஒன்று போதாதோ? (அது போல) பொற்பு அறிவு இல்லாத பல புத்திரரை பேறலின் - புத்தி அழகு இல்லாத பல புதல்வர்களைப் பெறுவதைக் காட்டிலும், ஓர் நன்மை புதல்வனை பெறுதல் நன்று ஆம் - (ஒருவன்) ஒரு நல்ல புதல்வனைப் பெறுதல் நல்லதாம்.

(க - ரை) அறிவில்லாத பல புத்திரர்களைவிட அறிவுள்ள ஒரு புதல்வனைப் பெறுதல் நல்லது.

(வி-ரை) ஏ - அசைநிலை. ஓ-வினா. 'பொற்பறிவு' என்பதை அறிவு பொற்பு, அறிவின் பொற்பு என மாற்றிப் பொருள் கொள்க. பேறல்=பெறு+அல், முதல் நீண்டது. 'பொற்கொடி' என்பதற்குப் 'பொன்மயமாகிய கொடி' என்பதூஉம் ஒன்று; 'பொன்னணிந்த கொடி' என்பதூஉம் மற்றொன்று.

55. அத்தி மலரு மருங்காக்கை வெண்ணிறமுங்
கத்துபுனன் மீன்பதமுங் கண்டாலும்—பித்தரே
காணுர் தெரியற் கடவுளருங் காண்பரோ
மாணுர் விழியார் மனம்.

(ப-ரை) பித்தரே-(மாதரை மதிக்கும்) வெறியரே!, கான் ஆர் தெரியல் கடவுளரும் - வாசனை பொருந்திய மலர்மாலை அணிந்த தேவர்களும், அத்திமலரும் - அத்திப்பூவையும், அருமை காக்கை வெண்மை நிறமும் - காக்கையின் அருமையான வெள்ளை நிறத்தையும், கத்து புனல் மீன் பதமும் - இரைகின்ற நீரிலுள்ள மீன்பாதத்தையும், கண்டாலும்-பார்த்தாலும், மான் ஆர் விழியார் மனம் காண்பரோ - மான்போலும் கண்களையுடைய பெண்களின் மனத்தை அளந்தறிவார்களோ?

(க-ரை) பெண்களின் மனத்தை அறிதல் யார்க்கும் அரிது.

(வி-ரை) முதல் மூன்றும்மைகள் எண்ணுப்பொருளன; நான்காவது உம்மை உயர்வு சிறப்பு. ஐந்தாவதும் அப்படியே. ஓகாரம் உடன்பாட்டு வினு, காணுர் என்னும் எதிர்மறை விடை தருவது காண்க. இதுவும் 'பெண்ணொருத்தி பேசில் பெரும்பூமி தானதிரும்' என்கிற ௩௯-ம் செய்யுளைப்போலவே மூடப்பெண்களைக் குறித்ததாம். இப்படியே மூடமக்களாகிய ஆண்களும் "காலையிலொன்றுவர் கடும்பகலி லொன்றுவர், மாலையிலே ஒன்றுவர் மாந்தரெல்லாம்" என்றும், "வணக்கம் வரும் சில நேரம், குமர கண்ட வலிப்புவருஞ் சில நேரம், வலியச்செய்ய கணக்குவருஞ் சில நேரம், வேட்டை நாய்போல் கடிக்கவரும் சில நேரம்" என்றும் இழித்துரைக்கப்பட்டமையால் கல்லாமையே எல்லாப் பொல்லாமைக்கும் காரணம் என்று சொல்லாமலே மறுப்பில்லாமல் விளங்கும்,

56. காளவிடப் பாந்தள் கருடனையுங் கட்டுமோ
வாளெரியைக் கட்டுமோ வன்கயிறு—நீளும்
பவமருளும் பாசம்வெம் பஞ்சேந் திரியஞ்
சிவயோகி யைப்பிணியா வே.

(ப - ரை) காளம் விடம் பாம்பு கருடனையும் கட்டுமோ - கறுத்த விஷமுள்ள பாம்பு கருடனையும் கட்டுமோ?, வன்மை கயிறு வாள் எரியை கட்டுமோ-பலமான கயிறு ஒளி மிகுந்த நெருப்பைக் கட்டுமோ?, (அதுபோல) நீளும் பவம் அருளும் பாசம்-பல பிறவிகளைக் கொடுக்கும் ஆசா பாசங்களும், வெம்மை பஞ்ச இந்திரியம்-கொடிய ஐம்பொறிகளும், சிவயோகியை பிணியா - சிவயோகியைக் கட்டி வருத்தமாட்டா.

(க - ரை) சிவயோகிகள் ஆசா பாசங்களாலும் ஐம்பொறிகளாலும் வருந்தார்.

(வி - ரை) 'கருடனையும்' என்பதில் உம்மை உயர்வு சிறப்பு. ஓகாரங்கள் இரண்டும் கட்டாது என்னும் எதிர்மறை விடை தருவதால் உடன்பாட்டு வினாப்பொருளன. பஞ்ச+இந்திரியம்=பஞ்சேந்திரியம், குணசந்தி.

57. புத்தியொடு முத்திதரும் புண்ணியத்தா லன்றியே
மத்தமிகு பாவத்தால் வாழ்வாமோ—வித்துபயிர்
தாயாகி யேவளர்க்குந் தண்புனலா லல்லாது
தீயால் வளருமோ செப்பு.

(ப - ரை) வித்து பயிர் - விதைத்தலால் உண்டாகும் பயிரானது, தாய் ஆகி வளர்க்கும் தன்மை புனலால் அல்லாது - தாய் போலத் தன்னை வளர்க்கும் தண்ணீரா லல்லாமல், தீயால் வளருமோ-நெருப்பால் வளருமோ?, (அதுபோல) வாழ்வு புத்தியொடு

முத்திதரும் புண்ணியத்தால் அன்றி-சுகவாழ்வானது இகபர சுகங்களைக் கொடுக்கக் கூடிய புண்ணியத்தா லல்லாமல், மத்தம் மிகு பாவத்தால் ஆகுமோ-அறிவீனத்தால் வளருகின்ற பாவத்தினால் உண்டாகுமோ?, செப்பு - நீ சொல்லக்கடவாய்.

(க - ரை) சுகவாழ்வு புண்ணியத்தா லன்றிப் பாவத்தால் ஒங்காது.

(வி - ரை) ஏகாரங்கள் இரண்டும் அசைநிலைகள். வித்து பயிர் - வினைத்தொகை. ஓகாரங்கள் இரண்டும் ஆகாது வளராது என்னும் எதிர்மறை விடை தருவதால் உடன்பாட்டு வினாப் பொருளன.

58. சிவனே சிவனே சிவனேயென் பார்பின்
சிவனுமையா ளோடுந் திரிவன்—சிவனருளாற்
பெற்றவிளங் கன்றைப் பிரியாமற் பின்னோடிச்
சுற்று பசுப்போற் றொடர்ந்து.

(ப - ரை) பெற்ற இளமை கன்றைப் பிரியாமல் பின் ஓடி சுற்று பசுபோல்-தான் ஈன்ற இளங்கன்றைப் பிரிய மனம் வராமல் பின் தொடர்ந்தோடிச் சுற்றும் பசுவைப்போல, சிவன்-சிவன் அருளால், சிவனே சிவனே சிவனே என்பார் பின்-சிவபெருமான் தம்மருளால் சிவனே சிவனே சிவனே என்று மும்முறை உச்சரிப்பவர்களுக்குப் பின்னே, உமையாளோடும் தொடர்ந்து திரிவன் - உமாதேவியாரோடுந் தொடர்ந்து திரிவார்.

(க - ரை) சிவபெருமான் தம்முடைய திருவருளால் சிவனே சிவனே சிவனே என்று தமது திருநாமத்தை மும்முறை உச்சரிப்பவரைப் பிரியாமல் காப்பார்.

(வி - ரை) "அவனருளாலே அவன் தாள் வணங்கி" என்பதனால் 'சிவனருளால் சிவனே சிவனே சிவனே என்பர்' என்றார். அம்மே, அம்மே, அம்மே என்றழைக்குங் கன்று சிவனே சிவனே சிவனே என்றழைப்பார்க்கும், கன்றைத் தொடரும் பசு தமது திருநாமோச்சாரணஞ் செய்வோரைத் தொடர்ந்து திரியும் சிவபிரானுக்கும் உவமான மானமை காண்க.

59. தாமுங்கொ டார்கொடுப்போர் தம்மையுமீ யாதவகை
சேமஞ்செய் வாருஞ் சிலருண்டே—ஏமநிழல்
இட்டுமலர் காய்கனிக ளீந்துதவு நன்மரத்தைக்
கட்டிமுடை முள்ளெனவே காண்.

(ப - ரை) ஏமம் நிழல் இட்டு - நல்ல நிழல் செய்து, மலர் காய் கனிகள் ஈந்து உதவும் - மலர்களையுங் காய்களையுங் கனிகளையும் ஈந்து உதவுகின்ற, நன்மை மரத்தை - நல்ல மரத்தை, கட்டும் உடைமுள் என்ன - (அப்படிச் செய்யவொட்டாமல்) தடுக்கின்ற உடைவேல் முள்ளைப்போல, தாமுங் கொடார் - தாமும் கொடாமல், கொடுப்போர் தம்மையும் - அப்படிக் கொடுக்கும் பிறரையும், ஈயாத வகை - கொடாத விதம், சேமம் செய்வாரும் - தடுப்பவரும், சிலர் உண்டு-சிலபேர் இருக்கிறார்கள்; காண் - இதை நீ கண்டறிவாயாக.

(க - ரை) மாமரத்தைச் சூழ்ந்த முள்ளைப்போலத் தாமுங் கொடாமல் பிறர் கொடுப்பதைத் தடுப்பவருஞ் சிலர் உளர்.

(வி-ரை) ஏகாரங்கள் அசைநிலைகள். 'ஏம நிழல், இட்டு வளர் மாமரத்தை ஈந்துதவ வொட்டாது, கட்டுமடை முள்ளெனவே காண்' என்றும் பாடம். காய் கனிகளை ஈந்துதவு மாமரத்துக்கு வேலியாகச் சூழ்ந்திருந்து அதனை அங்ஙனஞ் செய்யவொட்டாமல்

தடுக்கின்ற உடைவேண்டுமன், தாமுங் கொடாமல் பிறர் ஈவதை விலக்குவார்க்கு உவமான மானமை காண்க.

60. ஆயுமலர்த் தேன்வண் டருந்துவது போலிரப்போர்
ஈயு மவர்வருந்தா தேற்றலறம்—தூயவிளம்
பச்சிலையைக் கீடமறப் பற்றி யரிப்பதுபோல்
அச்சமுற வாங்க லகம்.

(ப - ரை) வண்டு ஆயும் மலர் தேன் அருந்துவதுபோல் - வண்டானது தான் ஆராயும் பூவிலுள்ள தேனை (பைய) உண்பது போல, இரப்போர் ஈயுமவர் வருந்தாது எற்றல் அறம் - பிச்சை எடுப்போர் கொடுப்பவர்கள் வருந்ாதபடி பிச்சை எடுத்தல் தரும மாகும்; கீடம் தூய இளமை பசுமை இலையை - புழுவானது அழ கான இளம் பச்சிலையை, பற்றி அற அரிப்பதுபோல் - பற்றி முழுவதும் (பல கண்களாக) அரித்துவிடுவதுபோல, அச்சம் உற வாங்கல் அகம் - (கொடுப்போர்) அஞ்சும்படி (பிச்சை) வாங்கல் பாவமாகும்.

(க-ரை) பிச்சை எடுப்போர் ஈவோரை வருத்தாமல் வாங்குவதே தருமமாம்.

(வி - ரை) பிச்சை எடுப்போர் கொடுப்போரை வருத்தாமல் வாங்குதல் புண்ணியமும், வருத்தி வாங்குதல் பாவமுமா மென்ற படி. 'கீட மணம் பற்றி அரிப்பதுபோல்' என்றும் பாடம். "எற்ப திகழ்ச்சி" என்றபடி இழி தொழிலைப் புரிபவன் அதி ஜாக்கிரதை யாய்க் குறிப்பறிந்து செய்யவேண்டும்.

61. மாதா மரிக்கின் மகனுவி னற்சுவைபோம்
தாதா வெனிற்கல்வி தானகலும்—ஒதினுடன்

வந்தோன் மரித்துவிடில் வாகுவலி போமனையேல்
அந்தோ விவையாவும் போம்.

(ப - ரை) ஓதின் - சொல்லப் புகுந்தால், மாதா மரிக்கின் - தாய் இறந்தால், மகன் நாவின் நன்மை சுவை போம் - மகனுக்கு நாவி லறியும் நல்லுருசியுள்ள உணவு இல்லையாகும்; தாதா என் னில்-தகப்பன் இறந்தால், கல்வி அகலும்-படிப்புக் கெடும்; உடன் வந்தோன் மரித்துவிடில் - உடன் பிறந்தான் இறந்தால், வாகு வலி போம் - புஜபலம் போய்விடும்; மனையேல் - மனைவி இறந் தால், அந்தோ - ஐயோ, இவை யாவும் போம்-இவைகளெல்லாம் அழியும்.

(க - ரை) ஒருவனுக்கு மனைவி இறந்தால் எல்லாச் சுகமும் கெடும்.

(வி - ரை) "தாயோ டறுசுவைபோம் தந்தையொடு கல்வி யோம், சேயோடு தான்பெற்ற செல்வம் போம்...........பொற் றாலியோ டெவையும் போம்" என்னும் செய்யுள் இங்குக் கவனிக் கப்படவேண்டும். தாயிறந்தால் அறுசுவை உணவும், தகப்ப னிறந் தால் கல்வியும், உடன்பிறந்தான் இறந்தால் தோள் வலியும், மனைவி யிறந்தால் இவை எல்லாமும் போம் என்பது அனுபவ சித்தம். தான் - அசைநிலை.

62. ஓதுபொருள் கண்டோர்க் குறுமாசை நீதியிலாப்
பாதகரைக் கண்டோர்க்குப் பாவமாஞ்—சீதமலர்
கண்டோர்க் குறும்வாசங் கற்றமைந்த நற்றவரைக்
கண்டோர்க் குடனாங் கதி.

(ப - ரை) ஓது பொருள் கண்டோர்க்கு - முக்கியமான தென்று சொல்லும் செல்வப்பொருளைக் கண்டவர்க்கு, ஆசை

உறும் - ஆசை அதிகமாகும்; நீதி இல்லாத பாதகரை கண்டோர்க்கு பாவம் ஆம்-ஒழுக்கம் அற்ற பாதகரைக் கண்டோர்க்குப் பாவம் வளரும்; சீதம் மலர் கண்டோர்க்கு வாசம் உறும் - குளிர்ந்த மணமுள்ள பூக்களைக் கண்டோர்க்கு வாசனை உண்டாகும்; கற்று அமைந்த நன்மை தவரை கண்டோர்க்கு - கல்வி கேள்விகளால் அடங்கிய நல்ல தவமுடையவர்களைக் கண்டவர்க்கு, கதி உடன் ஆம் - மோக்ஷம் உடனே கிடைக்கும்.

(க - ரை) செல்வப்பொருள் முதலியவைகளால் ஆசை முதலியவைகள் அதிக மாகும்.

(வி-ரை) "பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்ல தில்லை பொருள்."

எனபதனுல 'ஓது பொருள்' என்ருர். "தீயாரைக் காண்பதுவுந் தீது" என்பதனுல் 'பாதகரைக் கண்டோர்க்குப் பாவம்' என்பதும், 'நல்லாரைக் காண்பதுவும் நன்று' என்பதனுல் 'நற்றவரைக் கண்டோர்க் குடனுங் கதி' என்பதும் நன்கமைந்தது காண்க.

63. பாவிதனந் தண்டிப்போர் பாலாகு மல்லதருள்
மேவுசிவ னன்பர்பான் மேவாதே—ஓவியமே!
நாயின்பா லத்தனையு நாய்தனக்கா மன்றியே
தூயவருக் காகுமோ சொல்.

(ப - ரை) ஓவியமே - சித்திரப் பாவை போல்வானே!, நாயின் பால் அத்தனையும் - நாய்ப்பால் முழுவதும், நாய் தனக்கு ஆம் அன்றி - நாய்க்கு உதவும் அன்றி, தூயவருக்கு ஆகுமோ - வேறு பரிசுத்தமான மனிதருக்கு உதவுமோ!, சொல்-நீ சொல்வாயாக!, (அதுபோல) பாவி தனம் - (ஆருக்கும் உதவாத) பாவியின் பணம், தண்டிப்போர்பால் ஆகும் அல்லது - அவனைக் கட்டி யடி

த்து வாங்குங் கள்ளரைச் சேரும் அல்லாமல், அருள் மேவு சிவன் அன்பர்பால் மேவாது - அருள் நிறைந்த சிவனடியாரிடத்தில் சேராது.

(க - ரை) பாவி பணம் பாவிக்குப் பயன்படும்; உத்தமர்க்குதவாது.

(வி-ரை) 'மேவாதே' என்பதில் ஏகாரம் அசைநிலை. 'ஓவியமே' என்பதில் விளி; 'அன்றியே' என்பதில் பிரிநிலை. ஓகாரம் ஆகாது என்னும் எதிர்மறை விடை தருவதால் உடன்பாட்டு வினை.

> "பெற்றார் பிறந்தார் பெருநாட்டார் பேருலகில்
> உற்றா ருகந்தா ரெனவேண்டார்—மற்றோர்
> இரணங் கொடுத்தால் இடுவர் இடாரோ
> சரணங் கொடுத்தாலும் தாம்."

என்னும் ஔவையார் வாக்கு இங்குப் பொருந்துவது காண்க.

64. பொன்னுங் கரும்பும் புகழ்பாலுஞ் சந்தனமுஞ்
சின்னம் படவருத்தஞ் செய்தாலும்—முன்னிருந்த
நற்குணமே தோன்று நலிந்தாலு முத்தமர்பால்
நற்குணமே தோன்று நயந்து.

(ப - ரை) பொன்னும் கரும்பும் புகழ் பாலும் சந்தனமும்-பொன்னையுங் கரும்பையும் உயர்வாகச் சொல்லுகின்ற பாலையும் சந்தனத்தையும், சின்னம் பட வருத்தம் செய்தாலும் - சின்ன பின்னமாகத் துன்பஞ் செய்தாலும், முன் இருந்த நன்மை குணமே தோன்றும் - (அவைகளிடத்தில்) அதற்கு முன்னிருந்த நல்ல குணமே வெளிப்படும்; (அதுபோல) உத்தமர்பால் - மேலோரிடத்தில், நலிந்தாலும் - (அவர்கள்) துன்பப்படும்போதும், நன்மை குணமே நயந்து தோன்றும் - நல்ல குணமே மிகுந்து விளங்கும்.

(க - ரை) உத்தமர் வருந்தினாலும் நற்குண மாறார்.

(வி-ரை) "சுடச்சுட மாற்றுயரும் சொன்னம்போல்" என்றதனால் 'பொன்னும்' என்றும்,

"கரும்பு கோணிடில் கட்டியுங் தோணுமோ"

என்றதனால் 'கரும்பும்' என்றும்,

"அட்டாலும் பால் சுவையிற் குன்றாது"

என்றதனால் 'பாலும்' என்றும்,

"சந்தன மென்குறடு தான்தேய்ந்த காலத்தும்
கந்தங் குறைபடாது"

என்றதனால் 'சந்தனமும்' என்றும் கூறினார் என்க.

'முன்னிருந்த நற்குணமே தோன்றும்' என்பதனால் பொன்னில் ஒளியும், கரும்பிலும் பாலிலும் தித்திப்பும், சந்தனத்தில் மணமும் (மிகுந்து) வெளிப்படும் என்று கொள்க. ஏகாரங்கள் தேற்றப் பொருளன.

65. வேசியரு நாயும் விதிநூல் வயித்தியரும்
பூசுரருங் கோழிகளும் பொன்னனையாய்!—பேசிலொரு
காரணந்தா னின்றியே கண்டவுட னேபகையாங்
காரணந்தா னப்பிறப்பே காண்.

(ப - ரை) பொன் அனையாய் - ஸ்ரீதேவிக்குச் சமானமானவளே!, பேசில் - எடுத்துச் சொல்லுமிடத்து, வேசியரும் நாயும் விதிநூல் வயித்தியரும் பூசுரரும் கோழிகளும் - விலைமாதரும் நாய்களும் ஆயுர்வேத வயித்தியர்களும் பிராமணர்களும் கோழிகளும், கண்ட உடன் ஏ - கண்டபோதே, காரணம் இன்றி

(யாதொரு) காரணமும் இல்லாமலே, பகை ஆம் காரணம் - பகை ஆகும் காரணம், அ பிறப்பே காண் - அந்தப் பிறவியின் குணமே ஆகும் என்று நீ கண்டறிவாயாக.

(க - ரை) வேசி முதலியோர்க்குக் குலப்பகை இயற்கையாம்.

(வி - ரை) தான்கள் - அசைநிலைகள். உம்மைகள் எண்ணுப் பொருளன. முதல் ஏகாரம் அசைநிலை; இரண்டாம் மூன்றாம் ஏகாரங்கள் தேற்றப்பொருளன.

66. அன்னமனை யாய்!குயிலுக் கானவழ கின்னிசையே
கன்னன்மொழி யார்க்கழகு கற்பாமே—மன்னுகலை
கற்றோர்க் கழகு கருணையே யாசைமயக்
கற்றோர்க் கழகுபொறை யாம்.

(ப - ரை) அன்னம் அனையாய் - அன்னம்போல்வாளே!, குயிலுக்கு இனிமை இசையே ஆன அழகு - குயிலுக்கு இனிய கீதமே போதுமான அழகாகும்; (அதுபோல) கன்னல் மொழியார்க்கு கற்பே அழகு ஆம்-கரும்பிரசம்போலு மொழிப் பெண்களுக்குக் கற்பே அழகு ஆகும்; மன்னு கலை கற்றோர்க்கு கருணையே அழகு - நிலைபெற்ற நூலுணர்ந்தோர்க்கு இரக்கமே அழகாகும்; ஆசை மயக்கு அற்றோர்க்கு பொறை (ஏ) அழகு ஆம்-ஆசாபாசம் அற்றவர்களுக்குப் பொறுமையே அழகாகும்.

(க - ரை) பெண்களுக்குக் கற்பே அழகு; படித்தவர்களுக்கு அருளே அழகு; ஞானிகளுக்குப் பொறுமையே அழகாம்.

(வி - ரை) ஏகாரங்கள் தேற்றப்பொருளன; 'பொறையே' என்பதில் ஏகாரம் செய்யுள் விகாரத்தால் தொக்கது. 'குயிலுக்கான

அழகு இன்னிசையே' என்பது உபமானம்; மற்றைய மூன்றும் உபமேயங்கள்.

"பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மை யுண்டாகப் பெறின்."

என்றதனால் 'கன்னன்மொழி யார்க்கழகு கற்பு' என்றார்.

"அந்தண ரென்போ ரறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ்
செந்தண்மை பூண்டொழுக லால்."

என்றதனால் 'கற்றோர்க் கழகு கருணை' என்றும்,

"ஒறுத்தார்க் கொருநாளை யின்பம் பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ்."

என்றதனால் 'ஆசைமயக் கற்றோர்க் கழகு பொறை' என்றுங் கூறினார்.

67. இதமகித வார்த்தை யெவர்க்கேனு மேலாம்
இதமெனவே கூற லிதமன்றே—இதமுரைத்த
வாக்கினா லேரண்ட மாமுனியுஞ் சோழனொடு
தேக்குநீர் வீழ்ந்தொழிந்தான் சேர்ந்து.

(ப - ரை) ஏரண்ட மாமுனியும் - ஏரண்ட மாமுனிவரும், இதம் உரைத்த வாக்கினால் - தாம் நன்மையைச் சொன்ன சொல்லால், சோழனொடு சேர்ந்து - சோழ மன்னனோடு கூடி, தேக்கு நீர் வீழ்ந்து ஒழிந்தான்-வெள்ளத்தில் விழுந்து இறந்தார்; (ஆகையால்) எவர்க்கு எனும் - யார்க்கு ஆனாலும், மேல் ஆம் இதம் என்ன-மேலான நன்மை தரும் என்று, இதம் அகிதம் வார்த்தை கூறல்-முறையே இன்ப துன்பங்களைத் தருகின்ற வார்த்தையைச் சொல்லுதல், இதம் அன்று-நல்லதல்ல.

(க-ரை) இதவார்த்தையும் சிலரிடத்தில் அகிதமாய் முடியும்.

(வி - ரை) முதல் ஏகாரம் தேற்றம்; இரண்டாம் ஏகாரம் அசைநிலை. முதல் உம்மை முற்றும்மை; இரண்டாம் உம்மை உயர்வு சிறப்பு. இதம் அகிதம்-அறம் மறம்; நன்மை அல்லது தீமை. "நல்லது சொல்ல நாடல்ல, கெட்டது சொல்ல ஊரல்ல" என்னும் பழமொழி இங்கே பொருந்துவது காண்க.

திருவலஞ்சுழி யென்னும் சிவஸ்தலத்தண்டையிற் காவேரியாறு ஒரு காலத்தில் வெள்ளஞ் சுழித்துப் பள்ளத்தில் இறங்கிப் பூமிக்குள் புகுந்து மறைந்துவிட்டது. அதுகண்ட சோழமன்னன் தண்ணீர்க் கருப்பு வருமென்றஞ்சி, ஏரண்ட மாமுனிவரைக் கண்டு வணங்கிக் காவேரியின் மறைப்பைத் தெரிவித்துப் பரிகாரம் கேட்டான். அதற்கவர், தமது மூதறிவால் ஆய்ந்து, சோழனை நோக்கி, "இந்த வெள்ளத்தில் ஒரு முடித்தலை அல்லது சடைத்தலை வீழ்ந் திறந்தால் அது மேல் நோக்கித் திரும்பும்" என்று உள்ளது உள்ளபடியே தெரிவித்தார். அதைக் கேட்ட சோழன் ஊரைக் காக்கும்பொருட்டு முடித்தலை உடையவனாகிய தான் ஒருவன் இறத்தல் பெரும் புண்ணியம் என்று தெளிந்து வெள்ளத்தில் விழுந்து பள்ளத்தில் மறைந்தான். தம் வார்த்தையால் சோழன் மாண்டதைக் கண்ட முனிவர் ஜீவகாருண்ய விசேஷத்தால், சடைத்தலை உடையவராகிய தாமும் அதனில் விழுந்து மாண்டார். உடனே காவேரி வெள்ளம் பள்ளத்திலிருந்து மேல் நோக்கி ஓடிற்று. இக் கதையே இங்குக் குறிக்கப்பட்டது.

68. இத்தரையோர் தம்மி லிருவரே மேலானோர்
சித்திரச வாதி சிவயோகி—முத்தனையாய்!
நல்குரவு முற்பவமு நாசம் புரிவாரே
அல்லவரே வீரியக்கீ டம்.

(ப - ரை) முத்து அனையாய் - ஆணி முத்துப்போல அழகில் சிறந்தவளே!, இ தரையோர் தம்மில்-இந்தப் பூலோக மாந்தருக்குள், சித்திரசவாதி-இரசவாதங் கைவந்தவனும், சிவயோகி - சிவயோகங் கைவந்தவனும், நல்குரவும் முன் பவமும் - முறையே தரித்திரத்தையும் முற்பிறப்பையும், நாசம் புரிவார்-கெடுத்துச்(சுக) மடைவார்; (ஆகையால் இவர்) இருவரே மேல் ஆனோர்-இருவரே மேலானவர்; அல்லவரே வீரியம் கீடம்-மற்றவர்கள் பஞ்சேந்திரிய வசப்பட்ட புழுக்க ளாவார்கள்.

(க - ரை) இகலோக பரலோக சுகத்தை அடைவதால் முறையே இரசவாதியும் சிவயோகியும் சிறந்தவ ராவார்.

(வி - ரை) முதல் ஏ-தேற்றம்; இரண்டாவது ஏ-அசைநிலை; மூன்றாவது பிரிநிலை. இரசவாதி செல்வத்தைப் பெற்றுத் தரித்திரத்தைக் கொல்வதனாலும், சிவயோகி மோனத்தால் ஞானத்தைப் பெற்றுப் பிறவியை வெல்வதனாலும் சுகமடைவர்.

69. அற்றசிவ யோகிக் கருஞ்சின்ன மூன்றுண்டு
பற்றலகை யுன்மத்தர் பாலரியல்—முற்றுரச
வாதிக்குச் சின்னமூன் றுண்டே மகிழ்போகம்
ஈத லிரவாமை யென்று.

(ப - ரை) அற்ற சிவயோகிக்கு - பற்றற்ற பரமயோகிக்கு, பற்று அலகை உன்மத்தர் பாலர் இயல்-தொடரும் பிசாசரும் பைத்தியக்காரரும் பாலருமாகிய இவர்களுடைய குணங்க ளென்னும், அருமை சினம் மூன்று உண்டு - அருமையாகிய அடையாளங்கள் மூன்று உள்ளன; முற்று ரசவாதிக்கு இரசவாதசித்தி பெற்றவனுக்கு, மகிழ் போகம் ஈதல் இரவாமை என்று-சுகானுபவம் ஈதல் இரவாமை என்னும், மூன்று சின்னம் உண்டு - மூன்று அடையாளங்கள் உள்ளன.

(க -ரை) பசாசர்குணம் முதலியவைகளால் சிவயோகியை யும், இகசுகானுபவம் முதலியவைகளால் இராசவாதியையும் அறிந்து கொள்ளலாம்.

(வி - ரை) ஏகாரம் அசைநிலை.

"பாலரொடும் உன்மத்தர் பசாசர் குணம்வருமே"

என்றார் பிற ஆன்றோரும். உலகை மயக்காத உண்மை இராசவாதி பொன்னைப் பெறுவதனால் இகசுகானுபவத்திற் சிறந்து, பிறர்க்குக் கொடுத்துப் பிறரிடத்து ஏற்பதை விடுத்துச் சிறந்திருப்பான் என்பது இதனால் நன்கு விளங்குகின்றது.

70. வல்லவர்பாற் கல்வி மதமா ணவம்போக்கும்
அல்லவர்பாற் கல்வி யவையாக்கும்—நல்லிடத்தில்
யோகம் பயில்வா ருயர்ந்தோ ரிழிந்தோர்கள்
போகம் பயில்வார் புரிந்து.

(ப - ரை) வல்லவர்பால் கல்வி மதம் ஆணவம் போக்கும் - கல்வி கேள்விகளில் வல்லவராகிய மேலோரிடத்தில் உள்ள கல்வி யானது அறியாமையையும் அகங்காரத்தையும் கெடுக்கும்; (ஆகை யால் அவ்) உயர்ந்தோர் நன்மை இடத்தில் யோகம் பயில்வார் - (ஆகையால் அம்) மேலோர் நல்லிடத்தி லிருந்துகொண்டு சிவயோ கப் பயிற்சி செய்வார்கள்; அல்லவர்பால் கல்வி அவை ஆக்கும் - கல்வி அறிவற்ற கீழோரிடத்தில் உள்ள கல்வியானது அறியா மையையும் அகங்காரத்தையும் கொடுக்கும்; (ஆகையால் அவ்) இழிந்தோர்கள் புரிந்து போகம் பயில்வார் - (ஆகையால் அக்) கீழ் மக்கள் விரும்பி (நிலையற்ற) போகப்பயிற்சி செய்வார்கள்.

(க - ரை) மேலோர் கல்வி யறிவால் யோகப்பயிற்சியும், கீழோர் போகப்பயிற்சியுஞ் செய்வார்கள்.

(வி - ரை) மேலோர் கல்வி அறியாமையைப் போக்குதலால் மோகத்தையும், கீழோர் கல்வி அறியாமையை ஆக்குதலால் போக த்தையும் பயில்வார் என்று பொருள் கொள்க.

71. தீயவர்பாற் கல்வி சிறந்தாலு மற்றவரைத்
தூயவரென் றெண்ணியே துன்னற்க—சேயிழையே!
தண்ணொளிய மாணிக்கஞ் சர்ப்பந் தரித்தாலும்
நண்ணுவரோ மற்றதனை நாடு.

(ப - ரை) செம்மை இழையே - அழகிய ஆபரணம் அணி ந்த பெண்ணே!, சர்ப்பம் - பாம்பானது, தண்மை ஒளிய மாணிக் கம் தரித்தாலும் - குளிர்ந்த பிரகாசமுள்ள மாணிக்க மணியை வைத்திருந்தாலும், அதனை (ஒருவர்) நண்ணுவரோ - அதை ஒரு வர் நெருங்கிப் போவாரோ?, நாடு-நீ யோசித்துச் சொல்!, (அது போல) தீயவர்பால் கல்வி சிறந்தாலும்-கெட்டவர்களிடத்துக் கல்வி மேம்பட்டிருந்தாலும், அவரை தூயவர் என்று எண்ணி துன்னற்க- அவர்களை நல்லவர்கள் என்று எண்ணிச் சேராதொழிக.

(க-ரை) தீயோரிடத்திற் கல்வி சிறந்திருந்தாலும், சேரத் தகாது.

(வி-ரை) ஏயு மற்றும் அசைநிலைகள். சர்ப்பம் தீயவர்க்கும், அதனிடத்தில் மாணிக்கம் அவர்களிடத்திற் கல்விக்கும் உப மானங்க ளானமை காண்க.

72. ஊரூரெ னும்வனத்தே யொள்வாட்கண் மாதரெனுங்
கூரூர் விடமுட் குழாமுண்டே—சீரூர்
விரத்திவை ராக்ய விவேகத் தொடுதோல்
உரத்தணியத் தையாவென் றோது.

(ப - ரை) ஊர் ஊர் என்னும் வனத்தே - நாம் வாழ்கின்ற தேசமென்னுங் காட்டில், ஒள் வாள் கண் மாதர் என்னும் -

ஒளி பொருந்திய வாள்போலும் கண்களையுடைய பெண்களென்னும், கூர்மை ஊர் விடம் முள் குழாம் உண்டு-கூர்மை பொருந்திய நச்சுமுட்களின் கூட்டங்கள் உள்ளன; (ஆனாலும் அவைகள்) சீர் ஊர் விரத்தி - சிறப்புப் பொருந்திய ஞானியானவன், வைராக்கியம் விவேகம் தொடு தோல் - வைராக்கிய ஞானமாகிய தோற் செருப்பை, உரத்து அணிய - (தனது) மனமாகிய (பாதங்களில்) இட்டுக்கொள்வதனால், தையா என்று ஒது - தைக்கமாட்டா என்று சொல்லக்கடவாய்.

(க - ரை) வைராக்கியத்தால் ஞானிக்குப் பெண்ணாசை அறும்.

(வி - ரை) ஏகாரம் அசைநிலை. சாதி பேதத்தையும் மாதர் போகத்தையும் தள்ளி வைத்ததே சமாதி என்பதனால் இச் செய்யுள் அமைந்தமை காண்க. ஊருர்-வினைத்தொகை. நாடே காடாகவும், அதிற் பெண்களே முட்களாகவும், விரத்தியாகிய ஞானியே அதில் நடப்பவனாகவும், அவன் மனமே பாதமாகவும், வைராக்கிய விவேகமே தோற் செருப்பாகவும் உருவகித் திருப்பன காண்க. விரத்தியாகிய ஞானிக்கு வைராக்கிய விவேகம் மனதிற் பதிந்திருப்பதால் பெண்ணாசை தனக்குத் தானே அற்றுப் போகின்றது என்று பொருளுரைத்துக் கொள்க.

73. போற்று குருகிளைஞர் பொன்னாசை யோர்க்கில்லை
தோற்றுபசிக் கில்லை சுவைபாகந்—தேற்றுகல்வி
நேசர்க் கிலைசுகமு நித்திரையுங் காமுகர்தம்
ஆசைக் கிலைபயமா னம்.

(ப - ரை) பொன் ஆசையோர்க்கு-பொருளாசையுடையவர்களுக்கு, போற்று குரு கிளைஞர் இல்லை - வாழ்த்துகின்ற குருவுமில்லை சுற்றத்தாருமில்லை; தோற்று பசிக்கு சுவை பாகம் இல்லை-

எழும்புகின்ற பசிக்கு ருசியு மில்லை சமையற் பக்குவமு மில்லை; தேற்று கல்வி நேசர்க்கு - மனத்தைத் தெளிவிக்கும் கல்வியை விரும்பினவர்களுக்கு, சுகமும் நித்திரையும் இல்லை - சுகமும் இல்லை தூக்கமும் இல்லை; காமுகர்தம் ஆசைக்கு - காமிகளுடைய பெண்ணாசைக்கு, பயம் மானம் இல்லை - பயமும் இல்லை அவ மானமும் இல்லை.

(க - ரை) உலோபிக்குக் குருவு மில்லை, சுற்றமும் இல்லை; பசிக்கு ருசியு மில்லை, பாகமு மில்லை; கல்வி யாசைக்குச் சுகமு மில்லை, நித்திரையு மில்லை; காமிக்குப் பயமு மில்லை, அவமான மும் இல்லை.

(வி - ரை) குரு கிளைஞர் சுவை பாகம், பயமானம்-உம்மைத் தொகைகள். பொன்னாசை உடைய உலோபிகள் குருவென்றும் சுற்றமென்றும் பாரார்; பசி ருசி யறியாது; "மெய் வருத்தம் பாரார் பசி நோக்கார்" என்பதனால் 'கல்வி நேசர்க்குச் சுகமு நித்திரையும் இல்லை' என்றார்.

74. நன்றறியாத் தீயோர்க் கிடங்கொடுத்த நல்லோர்க்குந்
துன்று கிளைக்குந் துயர்சேருங்—குன்றிடத்தின்
பின்னிரவில் வந்தகரும் பிள்ளைக் கிடங்கொடுத்த
அன்னமுதற் பட்டதுபோ லாம்.

(ப - ரை) குன்று இடத்தில் - மலைக் குகையில், பின் இர வில் - பாதி இராத்திரியில், வந்த கருமை பிள்ளைக்கு-(இடந்தேடி) வந்த காக்கைக்கு, இடம் கொடுத்த - தங்க இடங் கொடுத்த, அன் னம் - அன்னப் பறவையானது, முதல் பட்டதுபோல் - அடியோடு மாண்டதுபோல, நன்று அறியாத தீயோர்க்கு - நன்றி கெட்ட துட்டருக்கு, இடங் கொடுத்த - இடம் உதவின, நல்லோர்க்கும் - நல்லவர்க்கும், துன்று கிளைக்கும் - பொருந்திய அவருடைய

சுற்றத்தார்க்கும், துயர் சேரும் - துன்பம் உண்டாகும்; ஆம்-இது நிச்சயமாம்.

(க - ரை) துஷ்டருக் கிடங் கொடுத்தால், நல்லோர் தமது கிளையோடு மாள்வார்.

(வி - ரை) 'கரும்பிள்ளை' நன்றறியாத் தீயோர்க்கும், 'அன்னம்' நல்லோர்க்கும் உபமானமானமை காண்க. ஒருயர்ந்த மலைக் குகையில் சுற்றத்தோடு சுகமாய் ஓர் அரசவன்னம் வாழ்ந்துகொண்டிருந்தது. அக்காலத்தில் ஒருநாள் அரை இரவில் அதி மழையில் அடிபட்ட காகம் ஒன்று அங்கு வந்து அன்னத்தை இடங் கேட்டது. மந்திரி யன்னந் தடுத்தும் மறுத்து, அரசவன்னம் காக்கைக்கு மழைக் கொதுங்கி யிருக்க இடந்தந் துதவி புரிந்தது. காக்கை தன் மன மொப்பிக் கெடுதி ஒன்றும் செய்யவில்லை. ஆயினும், அது அன்றிரவு அங்கிருந்தபடியே எச்சம் இட்டதனால், அவ் வெச்சத்திலிருந்த ஆலம் வித்து நிலத்திலூன்றி முளைத்துச் சில வருஷங்களிற் பெரு மரமாய் விழுதுவிட்டது. அவ் விழுதுகளின் உதவியால், அதற்கு முன் யாராலும் ஏற முடியாத அம் மலைக் குகைக்குள் வேடனொருவன் ஏறி வந்து அரசவன்னத்தை அதன் பரிவாரத்தோடு பிடித்துக் கொண்டு போனான். ஆகையால், தீயோர்கள் அவர்களை அறிந்தே அன்றி அறியாமல் கெடுதி செய்வார்கள் என்பது இதனாற் பெறப்பட்டது. இக் கதையே இங்குக் குறிக்கப் பட்டது. "தீயாரோ டிணங்கி யிருப்பதுவுந் தீது" என்றார் மூதாட்டியார்.

75. மனம்வேறு சொல்வேறு மன்னுதொழில் வேறு
வினைவேறு பட்டவர்பால் மேவும்—அனமே! [றே
மனமொன்று சொல்லொன்று வான்பொருளு மொன்
கனமொன்று மேலவர்தங் கண்.

(ப - ரை) அனமே - அன்னம் போல்வாளே!, வினை வேறு பட்டவர்பால் - தீவினையோர்களிடத்தில், மனம் வேறு சொல் வேறு மன்னு தொழில் வேறு மேவும் - மனம் வேறு சொல் வேறு நிலைபெற்ற தொழில் வேறா யிருக்கும்; கனம் ஒன்று மேலவர் தங்கண் - பெருமை பொருந்திய நல்வினையோர்களிடத்தில், மனம் ஒன்று சொல் ஒன்று வான் பொருளும் ஒன்றே - மனமும் ஒன்று: சொல்லும் ஒன்று: செயலும் ஒன்றே யாகும்.

(க - ரை) கீழோர்க்கு மனமும் சொல்லும் செயலும் வேறு பட்டிருக்கும்; மேலோர்க்கு ஒன்றுபட்டிருக்கும் என்க.

(வி - ரை) வினை வேறுபடுதல் - நல்வினையினின்று திரிதல். 'மனம் வேறு, சொல் வேறு, மன்னு தொழில் வேறு' என்பதற்கு 'மனம் வாக்குக் காயங்களாகிய திரிகரணங்கள் ஒன்றுக்கொன்று ஒவ்வாமல் வேறுதல்' என்று கொள்க. மேலோர்க்கு இவைகள் எப்போதும் ஒன்றுபடு மென்க. மனத்தில் நினைத்தபடியே வாக்கி லும், வாக்கிற் சொன்னபடியே செய்கையிலும் நிகழ்வது உத்த மம் என்று கொள்க.

76. கண்ணுக் கினிய சபைக்குமணி கற்றோனே
விண்ணுக் கினியமணி வெய்யோனே—வண்ணநறுஞ்
சந்தக் குழலாள் சயனத் தினியமணி
மைந்தன் மனைக்கு மணி.

(ப - ரை) சபைக்கு கண்ணுக்கு இனிய மணி - சபைக்குக் கண்ணுக் கின்பமாகிய மாணிக்கம் போல்பவன் வித்துவானே; விண்ணுக்கு இனிய மணி வெய்யோனே - ஆகாயத்துக்கு அழகிய மணி சூரியனே; சயனத்து இனிய மணி - படுக்கைக்கு இன்ப மாகிய மணிபோல்பவள், வண்ணம் நறும் சந்தம் குழலாள் - அழகிய வாசனை பொருந்திய கூந்தலையுடைய மனைவியே; மனை

க்கு மணி மைந்தன் - மனைக்கு அலங்காரம் சிறு குழந்தையே யாம்.

(க - ரை) சபைக்கு அலங்காரம் கற்றோன்; ஆகாயத்துக்கு அலங்காரம் சூரியன்; படுக்கைக்கு அலங்காரம் மனைவி; வீட்டுக்கு அலங்காரம் சிறு குழந்தையாம்.

(வி - ரை) "விண்மணி" என்று சூரியனுக்கு வழங்குவது போல, சபைக்குக் கண்மணி யென்று வித்வானுக்குக் கொள்க. சயன மணி - மனைவியாகிய பெண்மணி. ஏகாரங்கள் தேற்றப் பொருளன.

77. பாலினீர் தீயணுகப் பால்வெகுண்டு தீப்புகுந்து
மேலுநீர் கண்டமையு மேன்மைபோல்—நூலினெறி
உற்றோ ரிடுக்க ணுயிர்கொடுத்து மாற்றுவரே
மற்றோர் புகல மதித்து.

(ப - ரை) பாலின் நீர் - பாலோடு கூடிய நீரில், தீ அணுக - நெருப்புச் சேர்ந்து சுட, பால் வெகுண்டு - பாலானது கோபித்து, தீ புகுந்து - நெருப்பிற் பாய்ந்து (அவித்து), மேலும் நீர் - பின்னும் நீரை, கண்டு அமையும் - கண்டு அடங்கும், மேன்மைபோல் - உத்தம குணத்தைப் போல; நூலின் நெறி உற்றோர் - சாஸ்திர விதிப்படி நடக்கும் நல்லோர், மற்றோர் இடுக்கண் புகல மதித்து - பிறர் துயரஞ் சொன்னவுடனே (அதை நீக்குதல் தமது கடமை யாக) எண்ணி, உயிர் கொடுத்து மாற்றுவர் - (தமது) உயிரைக் கொடுத்து நீக்குவார்கள்.

(க - ரை) மேலோர் தமது உயிரைக் கொடுத்தும் பிறர் துயரந் தீர்ப்பார்கள்.

(வி - ரை) பாலோடு கூடிய நீர் மேலோரோடு கூடிய மற்ற வர்களுக் குபமான மானமை காண்க. நீர் கொதிப்பது மற்றோர்

இடுக்கண் புகல்வுதற்கும், பால் வெகுண்டு தீப்புகுதல் மேலோர் உயிர் கொடுத்து மாற்றுதற்கும் உபமான மாயின. பால் பொங்கி மேலெழுகையில் தண்ணீர் தெளித்து அதை அடக்குதல் அனுபவ சித்தம். ஆகையால், 'மேலுநீர் கண்டமையு மேன்மை' என்றார். ஏகாரம் அசைநிலை.

78. அந்தோ புரமெரித்த வண்ணலடி யார்பொருள்கள்
செந்தீ யினுங்கொடிய தீகண்டாய்—செந்தீயை
நீங்கிற் சுடாதே நெடுந்தூரம் போனாலும்
ஏங்கச் சுடுமே யிது.

(ப - ரை) புரம் எரித்த அண்ணல் அடியார் பொருள்கள் - திரிபுரிதகனஞ் செய்த சிவனடியார்களுடைய பொருள்கள், செம்மை தீயினுங் கொடிய தீ கண்டாய் - சிவந்த நெருப்பைப் பார்க்கிலும் கொடிய நெருப்பென்று நீ அறியக்கடவை; (ஏனெனில்) செம்மை தீயை நீங்கின் சுடாது - செந் நெருப்பைத் தூர நீங்கிப் போனால் அது சுடாது; அந்தோ - ஐயோ!, இது நெடுமை தூரம் போனாலும் - இது நெடுந்தூரம் போனாலும், ஏங்க சுடும் - பதைக்கச் சுடும்.

(க - ரை) சிவனடியார் பொருள்களை அபகரித்தல் தீயினுங் கொடியதாம்.

(வி-ரை) 'நெருப்பு' சிவனடியார் திரவியங்களுக்கு உபமான மானமையால், 'செந்தீயினுங் கொடிய தீ' என்று ஐந்தாம் வேற்றுமை எல்லைப் பொருளிற் கூறினர். சிவனடியார் பொருளைக் கவர்ந்தவர் எங்குப் போனாலும் துன்ப நுகர்வர் என்பது தோன்ற 'நெடுந்தூரம் போனாலும் சுடும்' என்றார். 'அந்தோ' என்றது அவர்கள் கேட்டுக்கு இரங்கலால் என்க. ஏகாரங்கள் அசைநிலை.

79. நிந்தையிலாத் தூயவரு நிந்தையரைச் சேரிலவர்
நிந்தையது தம்மிடத்தே நிற்குமே—நிந்தைமிகு
தாலநிழற் கீழிருந்தான் றன்பா லருந்திடினும்
பாலதெனச் சொல்லுவரோ பார்.

(ப - ரை) நிந்தை மிகு தாலம் நிழல் கீழ் இருந்து - இழிவு மிகுந்த பனை நிழலிலிருந்து, ஆன் பால் அருந்திடினும் - பசுவின் பாலைக் குடித்தாலும், அது பால் என்ன சொல்லுவரோ - அது பால் என்று சொல்லுவார்களோ?, பார் - நீ யோசித்துப் பார்!, (அதுபோல) நிந்தை இல்லாத தூயவரும்-இழிவற்ற மேலோரும், நிந்தையரை சேரில்-இழிவானவர்களைச் சேர்ந்தால், அவர் நிந்தையது - அவர்களுடைய இழிவானது, தம்மிடத்தே நிற்கும் - தம்மிடத்து நிலைத்துவிடும்.

(க - ரை) குற்றமற்ற பெரியோரும் குற்றமுற்றோர்களைக் கூடினால் குற்றமுற்றோ ராவார்.

(வி - ரை) 'தூயவரும்' என்பதில் உம்மை உயர்வு சிறப்பு. ஏகாரம் அசை. 'தால நிழற்கீழ்' என்பதைத் தாலக்கீழ் நிழலிலென மாற்றி 'பனையடி நிழலில்' எனப் பொருள் கொளலுமாம். 'தால நிழற் கீழிருந்தான் பாலருந்திடினும்' என்றும் பாடம். தன்-அசை நிலை. ஓகாரம், சொல்லார் என்னும் விடை தருவதால் உடன்பாட்டு வினாப்பொருளது.

80. சன்மமே பூரித்த காயத்தோர் தஞ்செவியிற்
றன்மநூல் புக்காலுந் தங்காதே—சன்மமெலிம்
புண்டு சமிக்குநா யூணவி னெய்யதனை
உண்டு சமிக்குமோ வோது.

(ப - ரை) சன்மம் எலிம்பு உண்டு சமிக்கும் நாய் - தோலையும் எலும்பையும் உண்டு களிக்கும் நாயானது, ஆவின் நெய்

ஊன் அதனை உண்டு சமிக்குமோ - பசுவின் நெய் கலந்த உண வை உண்டு சந்தோஷிக்குமோ?, ஓது - நீ சொல்; (அதுபோல) கன்மமே பூரித்த காயத்தோர் செவியில் - பாவம் நிறைந்த உடம்பை உடையவர் காதில், தன்மம் நூல் புக்காலும் தங்காது - புண்ணிய நூற்பொருள் நுழைந்தாலும் நிற்காது.

(க-ரை) பாவிகளுடைய காதில் தர்ம நூற்பொருள் நுழைந்தாலும் மனத்தில் தங்காது.

(வி - ரை) ஏகாரம் பிரிநிலை. ஏகாரம் அசைநிலை. 'சமிக்குமோ' என்பதில் ஓகாரம் சமிக்காது என்னும் எதிர்மறைப்பொருள் தருவதால் உடன்பாட்டு வினைப்பொருளது. நாய் நெய்யூனைப் பசியால் உண்ணும் ஆயினும் தோலையும் எலும்பையும் உண்டு மகிழ்வதுபோலத் திருப்தி அடையாது; இது அதன் குல வியல்பு. இதுபோலவே, பாவிகள் மறத்தில் மகிழ்வதுபோல் அறத்தில் மகிழார் என்பது துணிபு.

81. பெண்ணுதவுங் காலை பிதாவிரும்பும் வித்தையே
எண்ணி றனம்விரும்பு மீன்றதாய்—நண்ணிடையிற்
கூரியநற் சுற்றங் குலம்விரும்புங் காந்தனது
பேரழகு தான்விரும்பும் பெண்.

(ப - ரை) பெண் உதவுங்காலை-பெண்ணொருத்தியை மணஞ்செய்து கொடுக்கும்போது, பிதா வித்தை விரும்பும் - (அவனுடைய) தந்தை (மாப்பிள்ளையினுடைய) படிப்பை விரும்புவான்; ஈன்ற தாய் - அவளைப் பெற்ற தாய், எண் இல் தனம் விரும்பும்-(அவனுடைய) கணக்கில்லாத பணத்தை விரும்புவாள்; இடையில் நண் கூரிய நன்மை சுற்றம் - இவர்களுக்கு இடையிற் பொருந்திய மிகுந்த நல்ல சுற்றத்தார், குலம் விரும்பும் - (அவனுடைய உயர்) குலத்தை விரும்புவார்கள்; பெண் காந்தனது பெருமை அழகு

விரும்பும் - அந்தப் பெண் மாப்பிள்ளையினுடைய நிறைந்த அழகை விரும்புவாள்.

(க - ரை) பெண்ணை மணஞ்செய்து கொடுக்கும்போது, பிதா மாப்பிள்ளையின் கல்வியையும், மாதா செல்வத்தையும், சுற்றத்தார் குலத்தையும், அந்தப் பெண் அவனுடைய அழகையும் விரும்புவார்கள்.

(வி-ரை) பிதா, மணமகனுடைய படிப்பையும், மாதா மணமகனுடைய பணத்தையும், சுற்றத்தார் அவனுடைய குலச் சிறப்பையும், பெண் அவனுடைய அழகின் மிகுதியையும் விரும்பி எதிர்பார்ப்பார்கள் என்று கொள்க. ஏயும் தானும் அசைநிலைகள்.

82. காந்துநறும் புண்ணைக் கலந்தீ விரும்புமே
வேந்தர் தனமே விரும்புவார்—சாந்தநூல்
கல்லார் பகைசேர் கலகம் விரும்புவார்
நல்லார் விரும்புவார் நட்பு.

(ப - ரை) ஈ காந்தும் நறும் புண்ணை கலந்து விரும்பும் - ஈயானது துர்மணமுள்ள பச்சைப் புண்ணைச் சேர்ந்து (அதனை) உண்ண இச்சிக்கும்; (அதுபோல) சாந்தம் நூல் கல்லார் - ஞான சாத்திரம் படியாதவர்கள், பகை சேர் கலகம் விரும்புவார் - பகை மிகும் கலகத்தை விரும்புவார்கள். வேந்தர் தனமே விரும்புவார் - அரசர் செல்வத்தையே விரும்புவார்; (வண்டு தேனை விரும்பும்; அதுபோலச் சாந்த நூல் கற்ற) நல்லார் நட்பு (ஞானம்) விரும்புவார் - (ஞான சாத்திரம் கற்றுணர்ந்த) பெரியோர் நட்பைத் தரும் (ஞானத்தை) விரும்புவார்.

(க - ரை) கல்லார் கலகம் விரும்புவார்; வல்லார் தனம் விரும்புவார்; நல்லார் நட்பு விரும்புவார்.

(வி - ரை) முதல் ஏகாரம் அசைநிலை. இரண்டாம் ஏகாரம் பிரிநிலை. தாமத குணமுள்ளவர்கள் (கல்லார்) ஈ புண்ணை விரும்புவதுபோலக் கலகம் விரும்புவார்; இராஜதகுணமுள்ளவர்கள் (வல்லார்) காக்கை வேப்பம்பழத்தை விரும்புவதுபோலத் தனத்தையே விரும்புவார்; சத்துவகுணமுள்ளவர்கள் (நல்லார்) வண்டு தேனை விரும்புவதுபோல நட்பை விரும்புவார் என்று கொள்க. இங்கே தாமத குணக் கல்லார்க்கு மட்டும் உபமானம் இருப்பதால், ஏனைய இரண்டும் வருவித் துரைக்கப்பட்டன. தாமத குணமுள்ளவர்களைக் 'கல்லார்' என்றும், இராஜத குணமுள்ளவர்களை 'வல்லார்' என்றும், சத்துவ குணமுள்ளவர்களை 'நல்லார்' என்றுங் கொண்டமை காண்க.

83. கற்றைக் குழலார் கவினெல்லா மோர்மகவைப்
பெற்றக் கணமே பிரியுமே—கற்றருளை
வேட்ட பெரியோர் பெருமையெலாம் வேறொன்றைக்
கேட்ட பொழுதே கெடும்.

(ப - ரை) கற்றை குழலார் கவின் எல்லாம் - கற்றையாகிய தலைமயிரையுடைய பெண்களின் அழகு முழுவதும், ஒரு மகவை பெற்ற அ கணமே பிரியும் - ஒரு குழந்தையைப் பெற்றபோதே நீங்கும்; (அதுபோல) கற்று அருளை வேட்ட பெரியோர் பெருமை எல்லாம் - (அறிவு நூல்களைப்) படித்து (கடவுளுடைய) திருவருளை இச்சித்த ஞானிகளின் பெருமை எல்லாம், (அத் திருவருளைப் பெறுவதற்கு மாறான) வேறு ஒன்றை கேட்டபொழுதே கெடும் - வேறொரு விஷயத்தைக் கேட்டபொழுதே அழியும்.

(க - ரை) ஞானிகளின் பெருமை அஞ்ஞான விஷயத்தைக் கேட்டபொழுதே அழியும்.

(வி - ரை) முதல் ஏகாரம் தேற்றம்; இரண்டாம் ஏகாரம் அசைநிலை; மூன்றும் ஏகாரம் தேற்றம்.

"அருள்வழி செல்லாதார் ஆட்சியெல்லாம் பூமேல்
இருள்வழியா மவ்வழியில் எய்தாதே நெஞ்சமே."

என்பது இங்கே பொருந்துவது காண்க.

84. சீலங் குலமடியா டீண்டிற் கெடுங்கணிகை
ஆலிங் கனந்தனநா சம்மாகும்—நூலிழந்த
வல்லிதழு வக்குறையும் வாழ்நாள் பிறர்தாரம்
புல்லினர்க்கெல் லாநலமும் போம்.

(ப - ரை) அடியாள் தீண்டில் - பணிப்பெண்ணை (வேலைக்காரியைச்) சேர்ந்தால், சீலம் குலம் கெடும் - ஒழுக்கமும் சாதியும் கெட்டுப்போய்விடும்; கணிகை ஆலிங்கனம் - வேசியைத் தழுவினல், தனம் நாசம் ஆகும்-பொருள் அழியும்; நூல் இழந்த வல்லி தழுவ-மங்கலிய நூலிழந்த கைம்பெண்ணைக் கூடினல், வாழ் நாள் குறையும் - ஆயுள் குறையும்; பிறர் தாரம் புல்லினர்க்கு-அன்னியர் மனைவியைச் சேர்ந்தவர்க்கு, எல்லா நலமும் போம் - எல்லா நன்மையுங் கெட்டுப்போய்விடும்.

(க - ரை) பிறன் மனைப் புகுதலால் பெருங் கேடுண்டாம்.

(வி - ரை) பணிப்பெண் முயக்கத்தால், சீலமும் குலமும் போம் என்றும், கணிகை முயக்கத்தால் தனம் போமென்றும், கைம்பெண் முயக்கத்தால் ஆயுள் போமென்றும் வரையறுத்துரைத்தவர் பிறர் தார முயக்கத்தால் 'எல்லா நலமும் போம்' என்றதனல்,

"பிறன்மனைப் புகாமை அறனெனத் தகும்."

என்ற மூதுரை இங்கே பொருந்துவது காண்க. பணிப்பெண் மற்றவன் மனைவியாய் இல்லாமல் கன்னிகையா யிருக்கலாம். ஆகையால் 'சீலமும் குலமும்' என்று வரையறுத்துக் கூறினர். வேசியும் மற்றொருவன் மனைவி அல்லள் ஆகையால், 'பொருள் போம்' என்றும், விதவையும் உயிருடன் இருக்கும் இன்னொருவனுக்கு இல்லாள் அல்லள் ஆகையால் 'ஆயுள் போம்' என்றும் வரையறுத்துரைத்தார். ஆனல், பிறன்தாரம் நச்சினவன் கதி அதோ கதி என்பது தோன்ற 'எல்லா நலமும் போம்' என்று வரையறுக்காது எச்சரித்துரைத்தமை கவனிக்கப்படவேண்டும். ஒரு பொருட்பன்மொழிகளாகிய ஆலிங்கனம், தழுவல், புல்லல் முதலியவைகளை முறையே வேசி, கைம்பெண், பிறன் மனை முதலியோர் முயக்கத்துக் குரைத்தாரேனும், பணிப்பெண் முயக்கத்துக்கு மட்டும் 'தீண்டில்' என்று தொடுதலானேயே ஆசாரமும் குலமும் கெடும் என்று ஓதினமையை ஆராய்ந்துணர்ந்து கொள்க.

85. சத்தியமெக் காலுஞ் சனவிருத்த மாகுமே
எத்தியபொய் யார்க்கு மிதமாகும்—நத்தியபால்
வீடுதொறுஞ் சென்று விலையா மதுவிருந்த
வீடுதனி லேவிலையா மே.

(ப-ரை) நத்திய பால் - எல்லோரும் விரும்புகிற பால், வீடுதொறும் சென்று விலை ஆகும்-வீடுவீடாய்ச் சென்று விலைப்படும்; மது - கள்ளானது, இருந்த வீடுதன்னிலே விலை ஆம் - தான் இருந்த வீட்டிலேயே விலைப்படும்; (அதுபோல) சத்தியம் எ காலும்-உண்மையின் (அருமை தெரியாமையால் அது) எப்போதும், சனவிருத்தம் ஆகும் - ஜனங்களுக்கு விரோத மாகும்; எத்திய பொய் யார்க்கும் இதம் ஆகும் - ஏய்க்கும் பொய் எல்லார்க்கும் இஷ்டமாயிருக்கும்.

(க - ரை) கீழ்மக்களுக்குச் சத்தியத்தில் வெறுப்பும், அச த்தியத்தில் விருப்பும் அதிகரிக்கும் என்க.

(வி - ரை) முதல் ஏகாரம் அசைநிலை; இரண்டாம் ஏகாரம் தேற்றம்; மூன்றாம் ஏகாரம் அசைநிலை. பால் அமுதமென்று எல்லோரும் விரும்புவதாலும், அது ஜனங்களைத் தேடிச் செல் வதும், கள் விஷம் என்று எல்லோரும் வெறுப்பதாலும், அதைச் சனங்கள் தேடிச் செல்வதுமாகிய தொழி லுவமமே இங் குப் பொருந்தும். அன்றிப் பிற விஷயங்கள் பொருநதா. என்னை?

"நஞ்சுடைமை தானறிந்து நாகங் கரந்துறையும்"

என்றபடி, கள் இருந்த இடத்திலேயே அசைபட்டுக் கிடக்கின் றது. மேலும். அதைத் தேடிப் போகிறவர்கள் கீழ்மக்களேயாவர்.

"அஞ்சாப் புறங்கிடக்கும் நீர்ப் பாம்பு"

என்றபடி பால் ஓரிடத்தில் அடைபட்டுக் கிடவாமல் வீடுகள் தோறுஞ் சென்று விலையாகின்றது. அதை விரும்பிக் கொள்ப வர் மேன்மக்கள் ஆகையால் என்க. தம் வீடு நோக்கிப் பால் வந்தாலும், கற்குடியர், அதை விட்டுக் கள்ளைத் தேடிச் செல் வர்; (அதுபோல) தாம் இருந்த இடத்திலேயே சத்திய விரதராய் வாழலாமாலும் சில கீழ் மக்கள் மெய் வருந்தித் தூரத்திற் சென்று அசத்தியராய்க் கெடுவார்கள் என்றபடி. கரும்பிருக்க இரு ம்பு கடித்தும், கனியிருக்கக் காய் கவர்ந்தும், பால் இருக்கக் கட் குடித்தும் வாழும் கீழ்மக்களைக் குறித்ததே இச் செய்யுள். ஆகை யால், அவர்களுக்கே சத்தியம் விருத்தமும் அசத்தியம் பொருத்த மும் ஆம் என்க.

86. நல்லொழுக்க மில்லா ரிடம்சேர்ந்த நல்லோர்க்கும்
நல்லொழுக்க மில்லாச்சொ னண்ணுமே—சொல்லும்விடப்.

பாம்பெனவுன் ஞரோ பழுதையே யாஞலுந்
தூம்பமரும் புற்றடுத்தாற் சொல்.

(ப - ரை) பழுதையே ஆனாலும் - வைக்கோற்புரியே ஆனாலும், தூம்பு அமரும் பற்று அடுத்தால்-துவாரத்தையுடைய புற்றுக்குச் சமீபத்தில் இருந்தால், கொல்லும் விடம் பாம்பு என்ன எண்ணுரோ - கொல்லுகின்ற விஷத்தையுடைய பாம்பு என்று நினைக்கமாட்டார்களோ?, சொல்-நீசொல்! (அதுபோல) நன்மை ஒழுக்கம் இல்லார் இடம் சேர்ந்த நல்லோர்க்கும் - நன்னடக்கை இல்லாதவர் இடத்தைச் சேர்ந்த நன்னடக்கை உள்ளவர்களுக்கும், நன்மை ஒழுக்கம் இல்லாத சொல் நண்ணும் - நன்னடக்கை இல்லாத இழிவாகிய சொல் உண்டாகும்.

(க - ரை) தீயாரைச் சேர்ந்த நல்லோரும் அத் தீயாராகவே மதிக்கப்படுவர்.

(வி-ரை) முதல் எகாரம் அசைநிலை; 'உன்னுரோ' என்பதில் ஓகாரம் உன்னுவார் என்று உடன்பாட்டு விடை தருதலால் எதிர் மறைவினை. இரண்டாம் ஏகாரம் தேற்றம். "சேரிடமறிந்து சேர்" என்கிற அவ்வை திருமொழி இங்கே பொருந்தும். சேரிடம் அறியாமற் சேர்ந்தால் மானம் முதலியவைகளுக்குக் கேடுண்டாம். 'நிந்தையிலாத் தூயவரும் நிந்தையரைச் சேரிலவர் நிந்தையது தம்மிடத்தே நிற்கும்' என்னும் எசு-ஞ் செய்யுளும் இங்கே பொருந்துவது காண்க.

"மனத்தாஞ மாந்தர்க் குணர்ச்சி இனத்தானும்
இன்ஞ னெனப்படும் சொல்"

என்பது தமிழ்மறை.

87. வாக்குநயத் தாலன்றிக் கற்றவரை மற்றவரை
ஆக்கைநயத் தாலறிய லாகாதே—காக்கையொடு
நீலச் சிறுகுயிலை நீடிசையா லன்றியே
கோலத் தறிவருமோ கூறு.

(ப - ரை) காக்கையொடு நீலம் சிறு குயில் - காக்கையையும் கருநிறக் குயிலையும், நீடு இசையால் அன்றி - அவைகளுடைய நீண்ட குரலோசையா லல்லாமல், கோலத்து அறியவருமோ - உருவத்தால் அறியக் கூடுமோ?, கூறு - நீ சொல்; (அதுபோல) கற்றவரை மற்றவரை - கற்றவரையும் கல்லாதவரையும், வாக்கு நயத்தால் அன்றி-சொற்சுவையா லல்லாமல், ஆக்கை நயத்தால் அறியல் ஆகாது - உடல் அழகால் அறிய முடியாது.

(க - ரை) பண்டிதரையும் பாமரரையும் அவரவர் சொல்லா லன்றி உருவத்தால் உணர முடியாது.

(வி - ரை) ஏகாரங்கள் அசைநிலைகள். குயில் கற்றவர்க்கும், காக்கை மற்றவர்களுக்கும் உவமானமானமை காண்க. குயில் அரு பொருளாய் எங்கேயோ சிலவாய் விளங்குதலால் கற்றோர்க்கும், காகம் எளிபொருளாய் எங்கெங்கும் பலவாய்த் தோன்றுதலால் மற்றோர்க்கும் நன்கு உவமானமாயின. குயில் விரும்பப்படுவதனால் கற்றோர்க்கும், காகம் வெறுக்கப்படுவதனால் மற்றோர்க்கும் நன்கு பொருந்துவனவாம். பண்டிதரும் பாமரரும் உருவத்தால் ஒப்பாரேனும் வாக்கு நயத்தால் வேறாவர். ஆகையால், உருவத்தாலேயே ஒருவரை நாம் மதித்தறிய முடியாது.

"உருவுகண் டெள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்
கச்சாணி யன்னா ருடைத்து."

என்பது வேதம்.

88. ஆசையெனும் பாசத்தா லாடவர்தஞ் சிந்தைதனை
வீசுமனை யாந்தறியில் வீழ்த்தியே—மாசுபுரி
மாயா மனைவியரா மக்கண் மகவென்னும்
நாயாற் கடிப்பித்த னடு.

(ப - ரை) மாசு புரி மாயா மனைவியர் ஆம் மக்கள்-குற்றத்தைச் செய்கின்ற மாயா சம்பந்தங் கொண்டுள்ள மனைவிமார்களான (வேட) மக்கள், ஆசை என்னும் பாசத்தால் - ஆசையாகிய கயிற்றால், ஆடவர்தம் சிந்தைதனை - கணவன்மார்களுடைய மனமென்னும் (வன விலங்கை), வீசும் மனை ஆம் தறியில் வீழ்த்தி - (பிடித்) தாட்டும் இல்வாழ்க்கையால் கட்டுத்தறியில் கட்டி, மகவு என்னும் நாயால் கடிப்பித்தல் - குழந்தைக ளென்னும் நாய்களால் கடிப்பிக்கும் விதத்தை, நாடு - நீ நினைந்தறிவாயாக.

(க - ரை) இல்வாழ்க்கையில் மனைவிமக்களிடத்து அகப்பட்ட ஒருவன் வேடரிடத் தகப்பட்ட விலங்கு போல்வான்.

(வி - ரை) எகாரம் அசைநிலை. இங்கு மனைவிமார்களை வேடர்களாகவும், அவர்கள் ஆசையைக் கயிறாகவும், கணவன்மார்கள் மனத்தை காட்டு விலங்காகவும், அப்படி அதில் அகப்பட்டவர்கள் உழலும் இல்வாழ்க்கையைக் கட்டுத்தறியாகவும், அவர்களுக்குப் பிறக்குங் குழந்தைகளை நாய்களாகவும் உவமித்திருத்தலை ஊகித்துணர்க. இதுபற்றியே,

"பெண்டாட்டி பெருவிலங்கு மக்களதிற் சுள்ளாணி"

என்றார் பிறரும்.

89. தானறிந்தோ ருகருதவ் தன்னு லமையுமெனில்
தானுவந் தீத றலையாமே—ஆனதனுற்

சொன்னாற்புரிதலிடைசொல்லியும்பன்னாண்மறுத்துப்
பின்னாட் புரிவதுவே பின்.

(ப - ரை) தான் அறிந்தோர்க்கு உதவி தன்னால் அமையும் என்னில் - தான் அறிந்த நண்பர்களுக்கு உபகாரஞ்செய்யத் தன்னால் ஆமானால், (ஒருவன்) தான் உவந்து ஈதல் தலை ஆம்-தான் (அவர்கள் கேட்கு முன்)-- தானே (குறிப்பறிந்து) மனமகிழ்ச்சியோடு கொடுத்தல் (உத்தமம்) முதன்மையாம்; ஆனதனால் - ஆகையினால், சொன்னால் புரிதல் இடை-அவர்கள் கேட்ட பிறகு செய்தல் மத்திமம் (இரண்டாவது) ஆம்; சொல்லியும் - அவர்கள் கேட்ட பிறகு, பல நாள் மறுத்து - அநேக நாள் தாமதித்து, பின் நாள் புரிவதுவே பின் - பிறகு செய்வதுதான் (அதமம்) கடைப்பட்ட (மூன்றாவது) ஆகும்.

(க - ரை) உபகாரங் கேளாமற் செய்தல் உத்தமம்; கேட்டுச் செய்தல் மத்திமம்; கேட்ட பின்னும் மறுத்துச் செய்தல் -அதமம் என்க.

(வி - ரை) முதல் ஏகாரம் அசைநிலை; இரண்டாம் ஏகாரம் தேற்றம். இதுபற்றியே நாயனாரும் தமது தமிழ்மறையில்,

"இலனென்னும் எவ்வம் உரையாமை ஈதல்
குலனுடையான் கண்ணே உள."

என்றருளிச்செய்தமைக்கு, "இரக்க வந்தவன், தான் இல்லாதவன் என்னும் கொடுமையைச் சொல்லாத முன்பே கொடுத்தல், நல்ல குடியிற் பிறந்தவனிடத்துண்டு" என்று பரிமேலழகர் விசேடவுரை விரித்திருக்கின்றார். குறிப்பறிந் தீந்தமையினாலேயே முதலெழுவள்ளல்கள் பெருமை யுற்றார்கள் ஆகையால், அதுவே உத்தமம் என்க.

90. உற்ற மறையகத்தி லுய்க்குமவ னுத்தமனே
மற்றம் மறைபகர்வோன் மத்திமனே—முற்றிழையே!
அத்த முறலாற் புகல்வா னதமனென
வித்தகநூ லோதும் விரித்து.

(ப - ரை) முற்று இழையே - தொழில் தீர்ந்த ஆபரணந் தரித்தவளே!, உற்ற மறை அகத்தில் உய்க்குமவன் உத்தமன் - தன் காதுக் கெட்டின இரகசியத்தை (வெளியிடாமல்) மனத்தில் அடக்கிவைத்திருப்பவன் உத்தமன்; அ மறை பகர்வோன் மத்திமன்-அந்த இரகசியத்தை (ப் பிறாறியச்) சொல்பவன் மத்திமன்; அத்தம் உறலால் (அது) புகல்வோன் அதமன் - பணம் பெறுவதனால் அதை வெளியிடுபவன் அதமன், என்ன வித்தகம் நூல் விரித்து ஓதும் - என்று அறிவு நூல்கள் விரித்துச் சொல்லும்.

(க-ரை) இரகசியத்தை வெளியிடாதவர் உத்தமர்; உடனே வெளியிடுவோர் மத்திமர்; பொருளாசையால் வெளியிடுவோர் அதமர் என்க.

(வி - ரை) ஏகாரங்களும் மற்றும் அசைநிலைகள். அன்றி, உத்தமனே உற்ற மறையகத்தில் உய்க்குமவன் அல்லது உற்ற மறையகத்தில் உய்க்குமவனே உத்தமன் என்றும், மத்திமனே மற்றம் மறைபகர்வோன் அல்லது மற்றம் மறைபகர்வோனே மத்திமன் என்றும் கொண்டு ஏகாரங்களைத் தேற்றம் எனக் கொள்ளலும் ஆம். அத்தமுதலாற் புகல்வான் அதமனே என்றிருக்கவேண்டியது அதமன் என விகாரத்தால் ஏகாரந் தொக்கதெனக் கொள்க. இதுபற்றியே விக்கிரமாதித்தனும் தன்னிடத் துற்ற பதுமைகளின் காதுகளிற் றுரும்பிட்டு மதித்தமை யென்க. ஒரு பதுமைக்குக் காதில் விட்ட துரும்பு உள்ளடங்கிப்போயிற்று (உத்தமம்); ஒன்றுக்கு மற்றொரு காதில் வந்தது (மத்திமம்); மற்றொன்றுக்கு வாயில் வந்தது (அதமம்).

91. உத்தமர்தா மீயுமிடத் தோங்குபனை போல்வரே
மத்திமர்தாந் தெங்குதனை மானுவரே—முத்தலரும்
ஆங்கமுகு போல்வா ரதம ரவர்களே
தேங்கதலி யும்போல்வார் தேர்ந்து.

(ப - ரை) தேர்ந்து ஈயும் இடத்து - குறிப்பறிந்து கொடுக்குந் தன்மையில், உத்தமர் ஓங்கு பனை போல்வர் - உத்தமர் நீண்ட பனையைப் போல்வர்; மத்திமர் தெங்குதனை மானுவர் - மத்திமர் தென்னையைப் போல்வர்; அதமர் முத்து அலரும் கமுகு போல்வார் - அதமர் முத்தைப்போலப் பூக்கும் பாக்குமரத்தைப் போல்வர்; அவர்களே தேம் கதலியும் போல்வர் - அவர்களே தித்திக்கப் பழுக்கின்ற வாழைமரத்தையும் போல்வர்.

(க - ரை) உத்தமக் கொடையாளர் பனைபோல்வர்; மத்திமக் கொடையாளர் தென்னை போல்வர்; அதமக் கொடையாளர் கமுகையும் வாழையையும் போல்வர் என்க.

(வி - ரை) தாம்கள் இரண்டும், ஆம் ஒன்றும், ஏகாரங்களில் முன்னைய இரண்டும் அசைநிலைகள்; பின்னைய ஏகாரம் தேற்றம். பனை ஒரு துளி நீரும் வேண்டாமலே பலன் கொடுத்தல்போல, உத்தமர் தங்களைப் பிறர் கேளாதே முன்பே குறிப்பறிந்து கொடுப்பர் என்றும், தென்னை சில காலம் நீர் விட்டு வளர்க்கப் பிறகு கொடுத்தல்போல, மத்திமர் தம்மைப் பிறர் கேட்ட பிறகே கொடுப்பர் என்றும், "கை காய்த்தால் கமுகு காய்க்கும்" என்பதுபோல, பாக்கு மரம் அடிக்கடி நீர் விட்டு வளர்க்கப் பயன் கொடுத்தல்போல அதமர் பலமுறை தம்மைக் கேட்ட பிறகே கொடுப்பர் என்றுங் கொள்க. வாழையும் ஆறு கொத்து நூறு தண்ணீர் அடிக்கடி பெற்ற பிறகே ஒருமுறை பலன் கொடுத்து மறுமுறை கொடுத்தற்கின்றி மடிவதால் அதமர்க்குவமான மாண்மை காண்க.

92. எல்லோர் தமக்கு மினிதுதவ லன்றியே
நல்லோர் தமக்குதவி நாடாரே—வல்லதரு
நாமநிதி மேக நயந்துதவ லன்றியே
தாமுதவி நாடுமோ சாற்று.

(ப - ரை) வல்ல தரு - சிறந்த கற்பக விருக்ஷமும், நாமநிதி - பெருமை பொருந்திய சங்கநிதி பதுமநிதிகளும், மேகம் - மேகங்களும், தாம் நயந்து உதவல் அன்றி - தாம் (பிறர்க்கு) விரும்பிக் கொடுப்பதன்றி, உதவி நாடுமோ - (பிறர் தமக்குக்) கொடுத்தலை விரும்புமோ?, (அதுபோல) நல்லோர் - மேலோர், எல்லோர் தமக்கும் - எல்லார்க்கும், இனிது உதவல் அன்றி - இசைந்து கொடுத்தல் அல்லாமல், தமக்கு உதவி நாடார்-தமக்கு (அவர்கள்) கொடுத்தலை விரும்பார்.

(க - ரை) மேலோர் தாம் பிறர்க்குக் கொடுப்பதன்றி, பிறரிடத்தில் உதவி நாடார்.

(வி - ரை) ஏகாரங்கள் அசைநிலைகள். 'நாடுமோ' என்பதில் ஓகாரம், 'நாடா' என்று பொருள் தரலால் எதிர்மறை வினா.

"இணங்கிப் பனைநிமிர்ந்திங் கீதலே அன்றி
வணங்கித்தான் கொள்ளா வழக்கால்—உணங்கிடையாய்
நல்லா றெனினுங் கொளல்தீது மேலுலகம்
இல்லெனினு மீதலே நன்று."

என்னும் திருக்குறள் நீதிவெண்பா இங்குப் பொருந்துவது காண்க. நல்லோர் "ஐயமிட்டுண்" என்றபடி பிறர்க்குக் கொடுப்பதன்றி "ஏற்ப திகழ்ச்சி" என்றதனால் பிறரிடத்தில் வாங்கார் என்று கொள்க. கற்பகவிருக்ஷம், சங்கநிதி பதுமநிதிகள் யார் எதை விரும்பிக் கேட்டாலும், கொடுப்பதற்காகவே, தேவலோகத்தில் உள்ளனவாம். மேகங்களைப்பற்றிக் கூறவேண்டுவதில்லை.

"கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்
டென்னாற்றுங் கொல்லோ வுலகு."

என்பது உத்தரவேதம்.

93. வெய்யோன் கிரண மிகச்சுடுமே வெய்யவனிற்
செய்யோன் கிரணமிகத் தீதாமே—வெய்யகதிர்
எல்லோன் கிரணத் தெரியினினு மெண்ணமில்லார்
சொல்லே மிகவுஞ் சுடும்.

(ப - ரை) வெய்யோன் கிரணம் மிக சுடும்-சூரிய கிரணம் மிகவும் சுடும்; செய்யோன் கிரணம் - நெருப்பின் காந்தி, வெய்யவனில் மிக தீது ஆம்-சூரிய கிரணத்திலும் மிகக் கொடியதாம்; வெய்ய கதிர் எல்லோன் கிரணத்து எரியினிலும் - வெப்பந்தரும் காந்தியையுடைய சூரிய கிரணத்திலும் நெருப்பிலும் பார்க்க, எண்ணம் இல்லார் சொல்லே மிகவும் சுடும் - நல்லறிவில்லாத மூர்க்கருடைய (கடுஞ்) சொல்லே மிகவும் சுடும்.

(க - ரை) துஷ்டர்களுடைய கடுமொழிகள் தீயினுங் கொடியனவாம்.

(வி-ரை) ஏகாரங்களில் முன்னேய இரண்டும் அசைநிலைகள், பின்னையது பிரிநிலை: "கொடிது கொடிது வறுமை கொடிது" என்புழிப்போல,

"கொடிது கொடிது வெய்யில் கொடிது;
அதனினுங் கொடிது ஆரு நெருப்பு;
அதனினும் கொடிது அறிவிலார் கடுமொழி"

என்றிருப்பது காண்க. இதுபற்றியே நாயனாரும்,

"தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினாற் சுட்ட வடு."

என்றருளினமை காண்க

94. திங்க ளமிர்த கிரணமிகச் சீதளமே
திங்களினுஞ் சந்தனமே சீதளமாம்—இங்கிவற்றின்
அன்பறிவு சாந்த மருளுடையார் நல்வசனம்
இன்பமிகுஞ் சீதளமா மே.

(ப - ரை) திங்கள் அமிர்தம் கிரணம் மிக சீதளமே - சந்திர னுடைய அமிர்த கிரணம் மிகவும் குளிர்ந்தது; சந்தனமே திங்களி னும் சீதளம் ஆம் - (ஆனால்) சந்தனமே சந்திரனைக் காட்டிலும் குளிர்ந்ததாம்; இங்கு இவற்றின் - இவ் வுலகில் இவ்விரண்டையும் பார்க்க, அன்பு அறிவு சாந்தம் அருள் உடையார் - அன்பையும் அறிவையும் பொறுமையையும் அருளையும் கொண்ட மேலோர்க ளுடைய, நல் வசனம் இன்பம் மிகும் சீதளம் ஆம் - இன்சொல் இன்பம் வளர்க்கின்ற குளிர்ச்சியுள்ளதாம்.

(க - ரை) நல்லோருடைய இன்சொற்கள் மிகவும் இனியன வாம்.

(வி - ரை) முதல் ஏகாரம் தேற்றம்; இரண்டாவது பிரி நிலை; மூன்றாவது அசைநிலை.

"நல்லார்சொற் கேட்பதுவும் நன்றே"

என்றது இப்பெற்றி நோக்கியே யென்க.

95. சீராம்வெண் ணீற்றுத் திரிபுண் டரம்விடுத்தே
பேரான முத்தி பெறவிரும்பல்—ஆரமிர்த
சஞ்சீ வினைவிடுத்தே சாகா திருப்பதற்கு
நஞ்சே புசித்ததுபோ லுடு.

(ப - ரை) சீர் ஆம் வெண்மை நீற்று-சிறப்பைத் தரும் திரு வெண்ணீற்றை, திரிபுண்டரம் விடுத்து - திரிபுண்டரமாக அணி வதை விட்டு, பேர் ஆன முத்தி பெற விரும்பல்-பெருமை பொரு

ந்திய மோக்ஷத்தை அடைய விரும்புதலானது, ஆர் அமிர்த சஞ்சீவியை விடுத்து-அருமையாகிய அமுத சஞ்சீவி மருந்தை விட்டு, சாகாது இருபபதற்கு நஞ்சு புசித்ததுபோல் (ஆம்) - சாகாதிருப்பதற்கு விஷம் உண்டதுபோலாகும்; நாடு - (இதை நீ) ஆராய்ந்து அறி.

(க - ரை) விபூதியினாலன்றி முத்தி பெற முடியாது

(வி - ரை) ஏகாரங்கள் அசைநிலைகள். விபூதியை விடுத்து வேறொன்றால் முத்தி பெறவிரும்பல் அமுதத்தை விடுத்து விஷத்தால் வாழ விரும்பல்போலாகு மென்று கூட்டுக. இதுபற்றியே திருஞானசம்பந்தரும் தமது தேவாரமாகிய தமிழ்மறையில்,

> "முத்தி தருவது நீறு, முனிவ ரணிவது நீறு
> சத்தி தருவது நீறு, சமயத்தில் உள்ளது நீறு"

என்று அருளிச்செய்தமை காண்க.

"மெய்யெலாம் வெண்ணீறு சண்ணித்த மேனியான்"

என்றும்,

"பொடியேறு திருமேனிப் புண்ணியன்"

என்றும் பிற ஆன்றோரும் பணித்தமையால், சிவபெருமாற்கே வெண்ணீறு விசேடமாவது காண்க.

96. செந்தா மரையிரவி சேருதயம் பார்க்குமே
சந்திரோ தயம்பார்க்குந் தண்குமுதம்—கந்தமிகும்
பூவலரப் பார்க்கும் பொறிவண் டரனன்பர்
தேவரவைப் பார்ப்பர் தெளிந்து.

(ப - ரை) செம்மை தாமரை இரவி சேர் உதயம் பார்க்கும்- செந்தாமரைமலர் சூரியோதயம் வருதலை எதிர்பார்க்கும்; தண்மை குமுதம் சந்திரன் உதயம் பார்க்கும் - குளிர்ந்த ஆம்பல்மலர் சந்திரோதயத்தை எதிர் பார்க்கும்; பொறி வண்டு-புள்ளிகளையுடைய

வண்டுகள், கந்தம் மிகு பூ அலர பார்க்கும்-வாசனை வீசும் பூக்கள் மலர்வதை எதிர்நோக்கும்; (இவைகள்போல) அரன் அன்பர் - சிவனடியார்கள், தேவரவை தெளிந்து பார்ப்பர் - அந்தக் கடவுள் (சிவன் தமது தியான சமாதியில் எழுந்தருளி) வருவதைக் (கேட்டல் சிந்தித்தல்களால்) தெளிந்து எதிர் நோக்குவார்கள்.

(க - ரை) சிவனடியவர்கள் தமது தியான சமாதியில் சிவபிரான் எழுந்தருளி வருவதை எதிர்நோக்கி இருப்பார்கள்.

(வி - ரை) ஏகாரம் அசைநிலை.

"ஐயந் திரிபின் றளந்துத் தியிற்றெளிந்து
............கண்விழிப்பத் தூங்குவார் தம்முளே
காண்பதே காட்சி கனவு நனவாகப்
பூண்பதே தீர்ந்த பொருள்."

என்றமை இங்கே கவனிக்கத் தக்கது. இதுபற்றியே திருநாவுக்கரையரும்,

"விறகிற் றீயினன் பாலிற் படுநெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
உறவு கோல்நட் டுணர்வு கயிற்றினால்
முறுக வாங்கிக் கடையமுன் நிற்குமே."

எனறருளினமை காண்க.

"கோல்நோக்கி வாழுங் குடியெல்லாம் தாய்முலையின்
பால்நோக்கி வாழுங் குழவி."........

என்னும் சங்கச் செய்யுளில் நோக்கி என்பதற்கு 'எதிர் நோக்கி' என்றே இருப்பதால், இங்கே 'பார்க்கும்' 'பார்ப்பர்' என்பவை கட்கு முறையே 'எதிர் நோக்கும்' 'எதிர் பார்ப்பர்' என்று உரை விரித்தாம். சிலர் 'பார்த்துக்கொண்டிருக்கும்' 'தரிசிப்பர்' என்று முறையே பொருள் விரித்தமை பொருந்தாமை காண்க.

97. வில்லமறு குக்கொவ்வா மென்மலர்க ணல்வரெனும்
நல்லவன்பர் சொற்கொவ்வா நான்மறைகள்-மெல்லிநல்லாய்!
ஆமந் திரமெவையு மைந்தெழுத்தை யொவ்வாவே
சோமசுந்த ரற்கென்றே சொல்.

(ப-ரை) மெல்லி நல்லாய் - மிருதுவான தன்மையையுடைய பெண்ணே!, சோமசுந்தரன் கு - உமாமகேசப் பேரழகாகிய சிவ பெருமானுக்கு, மேன்மை மலர்கள் - (உலகிலுள்ள) மிருதுவான புஷ்பங்கள் (எல்லாம்), வில்லம் அறுகுக்கு ஒவ்வா - வில்வத் தழைக்கும் அறுகம்புல்லுக்கும் சமானமாகா; நால்மறைகள்-நான்கு வேதங்களும், நால்வர் என்னும் அன்பர் சொல்லுக்கு ஒவ்வா - (சைவசமயாசாரியர்களாகிய) நால்வர் என்னும் மெய்யடியார்கள் அருளிச்செய்த தேவார திருவாசகங்களுக்குச் சமானமாகா; ஆம் மந்திரம் எவையும் - மாயா மந்திரங்களெல்லாம், ஐந்து எழுத்தை ஒவ்வா - ஸ்ரீ பஞ்சாக்ஷர மந்திரத்தை ஒப்பாகா, என்று சொல் - என்று சொல்வாயாக.

(க - ரை) சிவபெருமானுக்கு வில்லமும் அறுகுமே சிறந்த பத்திரமாம்; தேவார திருவாசகங்களே அழகிய மாலையாம்; ஸ்ரீ பஞ்சாக்ஷரமே அருமையான மந்திரமாம்.

(வி - ரை) ஏகாரம் - அசைநிலை. உமாசுந்தரர் - உமாதேவி யோடு கூடிய அழகர்.

"பச்சிலை இடினும் பத்தர்க் கிரங்கி
மெச்சிச் சிவபத வீடருள் பவன்"

என்றார் பிற ஆன்றோரும்.

"வேத மோதில் விழிநீர் வாரா
திருவா சகமிங் கொருகால் ஓதில்
விழிநீர் பெருகும்."

என்றார் பிறரும்.

"நாவினுக் கருங்கலம் நமச்சிவாய."

என்றார் நாவினுக்கரையர்.

"காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது
நாத னாம நமச்சி வாய."

என்றார் சைவசமயாசாரியர். அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் என்னும் நாயன்மார்களே 'நால்வர்' எனப்படுவர்.

98. கல்லார் பலர்கூடிக் காதலித்து வாழினுநூல்
வல்லா னொருவனையே மானுவரோ—அல்லாரும்
எண்ணிலா வான்மீ னிலகிடினும் வானகத்தோர்
வெண்ணிலா வாமோ விளம்பு.

(ப-ரை) அல் ஆரும் எண் இல்லாத - இரவில் அளவின்றிப் பொருந்திய, வான் மீன் இலகிடினும்-நக்ஷத்திரங்கள் பிரகாசித்தாலும், வானகத்து ஓர் வெண்மை நிலா ஆமோ - ஆகாசத்தில் ஒரு வெண்மையாகிய சந்திரனுக்குச் சமானமாகுமோ?, (அதுபோல) கல்லார் பலர் கூடி காதலித்து வாழினும்-படியாத மூடர் பலர் கூடி ஒருவரை யொருவர் நேசித்து வாழ்ந்தாலும், நூல் வல்லான் ஒருவனையே மானுவரோ - கல்வியில் வல்ல பண்டிதன் ஒருவனையே ஒப்பாவாரோ?, விளம்பு - நீ சொல்வாயாக!

(க-ரை) மூடர் பலர் கூடினும் பண்டிதன் ஒருவனை ஒவ்வார்.

(வி - ரை) 'மானுவரோ' 'ஆமோ' என்பவைகளில் ஓகாரம் மானார் ஆகா என்று எதிர்மறைப்பொருள் தரலால் எதிர்மறை வினைகள். ஏகாரம் பிரிநிலை.

"சந்திரனில்லா வானம் தாமரை இல்லாப் பொய்கை
மந்திரி இல்லா வேந்து மதகரி இல்லாச் சேனை
பண்டித னில்லாச் சங்கம் பாழ்"

என்றார் பிறரும்.

99. சந்தனத்தைச் சேர்தருவுந் தக்க மணங்கமழுஞ்
சந்தனத்தைச் சார்வேய் தழல்பற்ற—அந்தவனந்
தானுமச் சந்தனமுந் தன்னினமு மாய்வதன்றித்
தானுங் கெடச்சுடுமே தான்.

(ப - ரை) சந்தனத்தை சேர் தருவும் - சந்தனமரத்தைச் சேர்ந்த மற்ற மரங்களும், தக்க மணங் கமழும் - தகுதியாகிய அச் சந்தன மணத்தைத் (தாமும் பெற்று) வீசும்; சந்தனத்தை சார் வேய் தழல் பற்ற - அச் சந்தனமரத்தை அடுத்த மூங்கி லானது நெருப்புப் பிடிக்க, (அதனால்) அந்த வனம்தானும் - அந்த வனமும், அ சந்தனமும் - அந்தச் சந்தனமரமும், தன் இனமும் - அந்த மூங்கிலின் சுற்றமும், மாய்வது அன்றி - எரிந்து மாண்டுபோவதல்லாமல், தானும் கெட சுடுமே - அந்த மூங்கிலும் அழியும்படியே சுடும்.

(க - ரை) பெரியோரை அடுத்த நல்லோர் நலம் பெறுவர்; தீயார் அவரைக் கெடுப்பதன்றித் தாமுங் கெடுவர் என்க.

(வி - ரை) ஏகாரம் தேற்றம். கடையிலுள்ள 'தான்' அசை நிலை.

"நல்லாரோ டிணங்கி யிருப்பதுவு நன்று"
"தீயாரோ டிணங்கி யிருப்பதுவுந் தீது"

என்றார் ஔவையார்.

100. கங்கைநதி பாவஞ் சசிதாபங் கற்பகந்தான்
மங்க லுறும்வறுமை மாற்றுமே—துங்கமிகும்
இக்குணமோர் மூன்றும் பெரியோரிடஞ்சேரில்
அக்கணமே போமென் றறி.

(ப - ரை) கங்கை நதி - கங்காநதியானது, பாவம் - பாவங் களை (மட்டும் போக்கும்); சசி-சந்திரனது, தாபம் - வெப்பத்

தை (மட்டும் போக்கும்); கற்பகம் - கற்பக விருக்ஷமானது, மங்கல் உறும் வறுமை மாற்றும் - வாட்டந் தரும் தரித்திரத்தை (மட்டும்) போக்கும்; இ குணம் ஓர் மூன்றும் - இந்தத் தீய குணங்களாம் (பாபம், தாபம், வறுமை,) என்னும் மூன்றும், பெரியோரிடம் சேரில் - பெரியோரை அடுத்தால், போம் - அப்பொழுதே நீங்கும்; துங்கம் மிகும் - மேன்மை ஓங்கும், என்று அறி - என்று அறிவாயாக.

(க - ரை) பெரியோரை அடுத்தால் பாபமும் தாபமும் வறுமையும் நீங்கு மென்க.

(வி - ரை) தானும் ஏவும் அசைநிலைகள். இக் குணம் பெரியோரைச் சேரில் போம் என்றதனால், பாவம், தாபம், சோபம் ஆகிய தீக் குணங்கள் போம் என்றார். கங்கை முதலியவைகளுக்கு ஒவ்வொரு தீக்குணம் போக்கவே ஆற்றல் உண்டு; ஆனால், பெரியோர்க்கு மூன்றையும் போக்கும் வல்லமை உண்டென் றறிக. விரிக்கிற் பெருகும். அன்றித் 'துங்க மிகும்' என்பதைப் 'பரிசுத்த மிகுந்த' என்று பெயரெச்சமாகக் கொண்டு 'இக்குணம்' என்பதற்கு அடைமொழி யாக்கினால், பரிசுத்த மிகுந்த புண்ணியம் தேக்குதல், குளிர்ச்சி ஆக்குதல், செல்வம் வீக்குதலாகிய இந்நற்குணங்கள் ஒரு மூன்றும் என்று பொருள் விரித்து, பெரியோரிடஞ் சேரில், அக்கணமே ஆமென்றறி என்று கடையடியை மாற்றிக் கொள்க.

"தக்கா ரினத்தனாய்த் தானொழுக வல்லானைச்
செற்றார் செயக்கிடந்த தில்."

என்பது ஓத்து.

நீதிவெண்பா மூலமும் உரையும்

முற்றுப்பெற்றன.

[1000 Copies

உ

கணபதி துணை

நீதி வெண்பாவின்

செய்யுள் முதற்குறிப்பு அகராதி

செய்யுள்	பக்கம்
அ	
அத்திமலரு	52
அந்தோபுர	72
அரசினிலை	49
அரிமந்திரம்	3
அவ்விய	21
அறிவன்	4
அற்றறிவ	64
அன்னமனே	61
அன்னைதயையு	29
ஆ	
ஆசைக்கடியா	13
ஆசையெனும்	82
ஆபத்து	42
ஆயுமலர்	56
ஆனந்துணர்	14
ஆனைமருப்பு	26
இ	
இதமகித	62
இத்தரையோர்	63
இந்திரவி	47
இன்னருறும்	43
ஈ	
ஈக்குவிடந்	19
ஈசனெதிர்	37
உ	
உத்தமர்தா	85
உள்ளபொழு	35
உற்றதொழில்	42
உற்றபெருஞ்	12
உற்றமறை	84
ஊ	
ஊருரொனும்	66
எ	
எல்லோர்	86
என்னேகிரேத	31
ஒ	
ஒருபோது	10
ஓ	
ஓதுபொருள்	57
க	
கங்கைநதி	93
கண்ணிரண்டே	11
கண்ணுக்கினிய	70
கர்ப்பூரம்	32
கல்லார்	92
கற்றைக்குழ	76
கற்றோர்	16
கன்மமே	73
கன்னியரை	39
கா	
காந்தநறும்	75
காந்தனில்	8
காளவிட	53
கு	
குணநன்குணரா	25
கொ	
கொம்புளதற்	20
ச	
சத்தியத்தை	50
சத்தியமெக்	78
சந்தனத்தை	93
சி	
சிவனேசிவனே	54
சிற்றுணர்வோ	34
சீ	
சீராம்வெண்	88
சீலங்குல	77
சீலமில்லா	33

செய்யுள்	பக்கம்
சே	
செங்கமல	23
செந்தாமரை	89
செய்யுமொரு	17
ஞா	
ஞானமாசார	24
த	
தலைமயிருந்	27
தன்னையளித்	40
தா	
தாமரை	2
தாமோதரன்	48
தாமுங்கொடார்	55
தானறிந்தோதா	82
தானேபுரி	45
தி	
திங்களமிர்த	88
தீ	
தீயவர்பாற்	66
து	
துர்ச்சனரும்	20
துன்னுமிரும	22
தூ	
தூயவறிவினர்	45
தெ	
தென்புலத்தார்	46
ந	
நல்லொழுக்க	79
நன்றறியா	68
நா	
நாவினுனியி	18
நி	
நிலைதயிலா	73
நீ	
நீசனே	24
நொ	
நொய்தாந்	10
ப	
பகைசேரு	7
பா	
பாலினீர்	71
பாவிதனந்	58
பு	
புத்தியொடு	53
பெ	
பெண்ணுதவுங்	74
பெண்ணொருத்தி	30
பெற்றமையு	15
பே	
பேதையரை	36
பொ	
பொற்பறிவில்	51
பொன்னுங்	59
போ	
போற்றுகுரு	
ம	
மந்திரமுந்	
மனம்வேறு	
மா	
மாதாமரிக்கி	
மு	
முற்றுமிறை	
மூ	
மூதுணர்	
மெ	
மென்மதுர	
வ	
வல்லவர்	
வருத்தவினை	
வா	
வாக்குநயத்	
[illegible]யுறை	
வி	
வில்லம்[illegible]	
வெ	
வெய்யோன்	
வென்றி	
வே	
வேசியரு	

நீதிவெண்பா செய்யுள் முதற்குறிப்பு அகராதி முற்றுப்பெற்றது.